
# சாரங்கதீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி, உருத்திரபுரம், சிவநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
யாழ் பல்கலைக்கழக, வவுனியா வளாக முகாமைத்துவ பீட
மாணவனுமான

அமரர்

# விக்கினராசா சாரங்கன்

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

**45ஆம் நாள் நினைவு மலர்**

**13.01.2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

அன்பின் அணிகலனாய், பண்பின் சிகரமாய்
அறிவின் ஊற்றாய், ஆற்றலின் கீற்றாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசமுடன்
உற்றாரும், உடன் பிறப்புக்களுக்கு
வழிகாட்டியாய் ஊரவரும் போற்றிடவே
பாங்காகப் பணி செய்து, போதுமினி வாழ்வு
என இறைவனடி போய்ச்சேர்ந்த பொக்கிசமே!
ஆறாக் கவலையோடு உன் பாதம் பணிந்து
கண்ணீரில் சமர்ப்பணங்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 03 | | 30 |
| 10 | | 11 |
| 1997 | | 2019 |



# விக்கினராசா சாரங்கன்

## அவர்களின் திதி வெண்பா

ஆண்டு விகாரி ஆன நற் கார்த்திகையில்
பூண்ட திதி பூர்வபக்க சதுர்தசியில் – நீண்டபுகழ்
சாரங்கன் சாந்தமுடன் சரண் புகுந்தான்
பாலையடியான் பதம் பணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

ஆடுகின்றில்லை கூத்து உடையான் கழற்கு
அன்பு இலை என்புஉருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை!
துணை இலி பிண நெஞ்சே!
தேடிகின்றிலை; தெருவுதோறு அலறிலை;
செய்வதொன்று அறியேனே.

## திருவிசைப்பா

அறிவும் மிக்க நல் நாணமும் நிறைமையும்
ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு தந்தையும்
உடன் பிறந்தவரோடும்
பிறிய விட்டுனை அடைந்தனன் ஏன்று கொள்
பெரும் பற்றப் புலியூரின்
மறைகள் நான்கும் கொண்டந்தணர்
ஏத்த நன் மாநடம் மகிழ்வானே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

புற்றிடயங் கொண்ட புராதனனைப்
பூங்கொயில் மேய பிரானையார்க்கும்
பற்றிடம் ஆய பரம் பொருளாய்
பார்ப்பதி பாகனை பங்கயத்தாள்
அச்சனை செய்ய அருள் புரிந்த அண்ணலை
மண்மிசை வீழ்ந்து இறைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன் உடம்பால் நன்மையின்
தன்மையை மெய்ம்மை பெற்றார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் ...... எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு ...... மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு ...... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய ...... குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற ...... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் ...... நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் ...... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரங்கு வாழ்வின் ஓர் சரித்திரப் பயணம்

காலையிலே கடல் வளத்தை அள்ளி வர கலங்களிலே கடல் மீது ஏகுவோரும், கற்பகத்தின் வளங்களையே பகுத்தாய்ந்து கடினமாக உழைத்து வரும் மாந்தர்களும், காளை பூட்டிய வயல் உழவு செய்வோராலும் கண்ணியமாய் வளர்ந்த தீவாம் நெடுந்தீவில் நாகேந்திரம் செல்லம்மா அவர்களினதும், அம்பலவாணர் தங்கமணி அவர்களினதும் வழித்தோன்றலில் விக்கினராஜா கமலேஸ்வரியினருக்கு உருத்திரபுரீஸ்வர சிவன் ஆலய சிவ கங்கையின் குளிர்மையிலே பாலையடிப் பிள்ளையாரின் அருளினால் சிவநகர் மண்ணிலே சிவநகரின் புதல்வனாய் 03.10.1997 இல் வந்து உதித்தார் சாரங்கன். விக்கினங்களைத் தீர்த்திடும் பாலையடிப் பிள்ளையாரின் ஆசீர்வாதத்தினால் விக்கினராஜா கமலேஸ்வரி தம்பதியினரின் பஞ்ச ரத்தினங்களில் இரண்டாவது இரத்தினமாய் வந்து உதித்தார். "தம்பி உடையார் படைக்கு அஞ்சார்" என்ற வாக்கிற்கு இணங்க பிரியமான பிரியங்கனுக்கு துணையான தம்பியாகவும், கண்டிப்புடன் கூடிய அன்பான அண்ணனாய் சங்கீர்த்தனன், ஆதித்தன், அபிராக்கு தன் வாழ்வில் இடம் கொடுத்து இன்பங்கள் நிறைந்த இனிய வாழ்வை இப் பூவுலகில் வாழ்ந்தார்.

புண்ணியராஜா லோஜினி, மோகனராஜா சுகிர்தா, லிங்கேஸ்வரன் பவாயினி, பேரம்பலம் நாகேஸ்வரி, சிவஞானசுந்தரம் மகேஸ்வரி ஆகியோருக்க கருவில் சுமக்காத கண்ணியமான மகனாகவும், சபாரத்தினம் கனகரஞ்சினி, சுதாநந்தன் நந்தினி, உலகநாதன் உமாதேவி, சண்முகநாதன் சரஸ்வதி, வைத்தியநாதன் நிர்மலாதேவி, கணேஸ்வரநாதன் தியாகேஸ்வரி, சிறிரங்கநாதன் சுகந்தினி ஆகியோருக்கு உறவிலே மருமகனாகவும் மனங்களிலே மகனாயும் இவ் அவனியிலே நிஜங்களில் மட்டுமல்ல அவர்களின் இதயங்களிலும் உத்தமனாய், ஒழுக்க சீலனாய் உயர்வான மகனாய் உலாவந்தார்.

தனுசன், கிருத்திகா, வாகீசன், கீர்த்தனா, பிரணவன், அக்ஷயன், கபிலன், தருண், எலுசியா, அஸ்வின், நிதர்சனா, சட்சயா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்திரன், தர்மீகன், பவிசனா ஆகியோருக்கு உடன்பிறவாச் சகோதரனாய் உதயகுமார், உஷாநந்தன், உதயராஜன், உமாரமணன், நாகேந்திரா, ஜனார்த்தன், அனுஷா, தீபா, இந்துஜா, தேனுஜா, யதுசாந், அனித்தா, பவித்திரா, ஆரணியன், கௌதமன், அபிஷேகன், சங்கவி, கிருசிகேஷன், சபேசன், சுதர்சன், ஐஸ்வர்யா, வானிலவன், திகழினி, யாழினியன் ஆகியோருக்கு மைத்துனனாக மட்டுமன்றி உற்ற தோழனாயும் நல்ல சகோதரனாயும் இன்பத்திலும் துன்பத்திலும் கைகோர்த்து தன் வாழ்வினை வாழ்ந்தார்.

துள்ளித் திரியும் சிறுபராயத்தில் இரசிக்கும் குறும்புகளுடன் தன் மழலை மொழியை சிவாலய செந்தூரன் முன்பள்ளியில் கற்க காலடி எடுத்து வைத்தார். தனது ஆரம்பக் கல்வியை கிளி/ சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்தார். தனது பள்ளிப்பருவத்தில் பக்குவமான மாணவனாய், ஆசான்களின் அன்பு செல்வனாய், சிவநகரின் உத்தமனாய், நண்பர்களின் செல்லமான சாரங்காய் உலா வந்தார் எம் சாரங்கு.

புத்தகப் படிப்பினை மட்டுமன்றி பல சாதனைகளை சாதிக்கத் துடித்து சாதித்தும் காட்டினான் சாரங்கன். சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒழுக்கத்தையும், மேன்மையையும் பாதுகாக்கும் மாணவத் தலைவனாய் தேசியத்தின் மேன்மையைக் காக்கும் தேசிய மாணவ பயிற்சிப் படையணியின் அங்கத்துவனாயும் விளங்கினான் எம் சாரங்கன்.

சிவநகரின் கபடி விளையாட்டின் கதாநாயகனாய் உலாவந்தான் எம் சாரங்கு. தனது உயர்தர கல்வியை கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் வர்த்தகப் பிரிவிலே தொடர்ந்தார்.

சிவநகரின் மட்டுமன்றி இந்துக் கல்லூரியின் கபடி விளையாட்டின் பெருமையை தேசியம் வரை கொண்டு சென்ற அணியிலும் எம் சாரங்கன் இடம் பிடித்தான்.

தனது உயரிய குணங்களாலும் சிறந்த கடமையாலும் இந்துக் கல்லூரியின் சிரேஸ்ட மாணவத் தலைவனாய் கடமையாற்றினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரங்கு.

"ஈன்ற பொழுதினில் பெரிது வக்கும் தன் மகனை
சான்றோர் எனக் கேட்ட தாய்"

என்ற வாக்குக்கிணங்க தன் பெற்றோர், உற்றார், உறவினரைப் பெருமைப் படுத்தும் வகையில் யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் செயற்திட்ட முகாமைதத்துவ கற்கை நெறியில் 1 ஆம் வருட மாணவனாய் பல எதிர்பார்ப்புடன் தனது கல்வியைத் தொடர்ந்தான் சாரங்கு.

வீட்டில் அன்னையின் அன்பான மகனாய், பாலையடிப் பிள்ளையார் அரைக்கும் ஆலையிலே தன் தந்தைக்கு உதவியாய், சிவநகர் மக்களின் புதல்வனாய் சுற்றி இருக்கும் தோழர்களிற்கு உயிர் கொடுக்கும் நல்ல நண்பனாய், சொந்தங்களிற்கு சிறந்த சொந்தமாய், பல்கலையில் சிறந்த மாணாக்கனாய், உத்தமனாய், ஒழுக்க சீலனாய், உயர்வான மானிடனாய் இவ்வுலகில் வாழ்ந்தான் எம் சாரங்கன்.

கடமையிலே கண்ணியமாய் வாழ்ந்த எம் சாரங்கினை கடமை செய்தது போதும் என்று நினைத்தானோ படைத்தவன். வாழ்க்கையில் பல சாதனைகளைக் கடந்து வந்த எம் சாரங்கினை 30.11.2019 நல்லோராய் ஊர் போற்ற வாழ்ந்து வர காலையிலே பொல்லாத காலன் மின்சார வடிவினிலே வந்து எம்மை விட்டு எம் சாரங்கனைப் பிரித்துச் சென்று விட்டான். எம்மை தவிக்க விட்டு சென்றாயோ? உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்ம உயர்நிலைப் பிரார்த்தனை

ஆருயிர் புதல்வனாய், அன்புச் சகோதரனாய், சீரிய நட்பிற்கு இலக்கணமாய், ஊர் உற்றார்களுக்கெல்லாம் நல்வழிகாட்டி உதவிக்கரம் நீட்டியோனாய் வாழ்ந்த திரு.விக்கினராஜா சாரங்கன் அவர்கள் யாரும் எதிர்பாராத விதத்தில் இறையடி சேர்ந்தார் எனும் செய்தியறிந்து அதிர்ச்சியடைந்தோம். இருப்பினும் மண்ணில் பிறந்தவர்கள் மறைவது இயற்கையின் விதியாகும். ஆனாலும் யாரும் எதிர்பாராத நேரத்தில் ஏற்படும் இழப்பைத் தாங்குவது சற்று கடினமே. இது தான் உலகத்தின் பெருமை என திருவள்ளுவர் திருக்குறளில் பின்வருமாறு குறிப்பிட்டள்ளார்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

(திருக்குறள் 336)

நேற்று இருந்தவர் இன்று இல்லை இத்தகைய நிலையற்ற வாழ்வைப் பெரிதும் உடையது இந்த உலகமாகும்.

மக்கள் உலகில் எத்தனையாண்டுகள் வாழ்ந்தவர்கள் என்பதை விட எப்படி வாழ்ந்தார்கள் என்பதே மிக முக்கியமான விடயமாகும். இந்த வகையில் வி.சாரங்கன் அவர்கள் இளமைக் காலத்திலே இறை பக்தியுடன் விழுமிய பண்புகளுடன் சான்றோனாக அனைவரது மனங்களையும் தன்பால் ஈர்த்துள்ள பெருமை அவரையே சாரும்.

எமது உடல் என்பது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களாலான கலவையே ஆகும். உண்மையில் கண்களால் பார்க்கும் இவ் உடல் நாம் அல்ல. உடலை உள்ளிருந்து இயக்கும் ஒப்பற்ற ஆத்மாவாகிய சிவமே நாம். இவ்வரிய பேருண்மையை நாம் உணர்வோமாயின் நாம் வாழும் குறுகிய காலத்திலேயே அனைவரிடத்தேயும் அன்பு செய்து, அனைவருக்கும் உதவி புரிந்து அரிதான மானிடப் பிறவியைப் புனிதப்படுத்தி இறைத்தன்மையை இப்பிறவியிலேயே அடைவோமாக.

விக்னராஜா சாரங்கனின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப உறவினருக்க எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா உயர்நிலையடைந்து சாந்தியடை இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல
பெண்டிர் சதமல்ல பிள்ளைகளும் சதமல்ல
செல்வம் சதமல்ல, தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம்
கச்சியேகம்பனே" (பட்டினத்தடிகள்)

பிரமசாரி சிவேந்திர சைதன்யா,
சின்மயாமிஷன்,
கிளிநொச்சி.

- கனவுகளை எண்ணங்களாக மாற்றுங்கள், எண்ணங்களைச் செயல்களாக மாற்றுங்கள்.
- நமது நட்பு என்பது நண்பர்களின் நிலையறிந்து அவர்களைச் செயல்களாக மாற்றுங்கள்.
- பொறுப்புடன் கூடிய சுதந்திரம் மட்டுமே தனிப்பட்ட மகிழ்ச்சியின் அடித்தளம் ஆகும்.
- உங்கள் வாழ்வில் உழைப்ப இருந்தால் அந்த உழைப்பின் பலனையும் உங்கள் குழந்தைகள் பெறுகின்றன.
- உங்கள் வாழ்வில் புனிதம் இருந்தால் உங்கள் குழந்தைகள் வாழ்விலும் அது தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதாஸ் காந்தியடிகளின் மனதிலிருந்து.....

உள்ளம் எனும் கோவிலில் பிரவேசித்து சிந்தனை செய்யும் வழக்கம் எம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். நாம் அனைவரும் நம் அகம் என்ற உணர்விலிருந்தும் நமக்கு மிகப் பிடித்தமான உணர்வுகளிலிருந்தும் சற்று நேரம் விலகி நிற்க வேண்டும். சிறிவு நேரம் நமது செயல்களிலிருந்தும், உணர்வுகளிலிருந்தும், உடலிலிருந்தும், உறவுகளிலிருந்தும், எம்மைச் சுற்றி இருக்கும் சமுதாயத்திலிருந்தும், எமது சித்தத்திலிருந்தும் விலகி நிற்க முயற்சி செய்வோம். ஆனால் உலகத்தின் மூலஸ்தானத்தை அடையலாம். அங்கே உலகம் இல்லை, உடல் இல்லை ஆனால் ஏதோ ஒன்று இருக்கிறது.

அதனை சிலர் சத்து என்கின்றனர், சிலர் அசத்து என்கின்றனர், சிலர் பரமாத்மா என்கின்றனர். அனைவரும் தாங்கள் தாங்கள் அறிவுக்கு எட்டியதிலிருந்து குண நலன்களைப் பெறுகின்றனர். ஆனால் அதுவே மூலப்பொருள். அதனை அடைந்தால் சித்தம், அமைதி, ஆனந்தமும் எய்தும். அது அனுபவப் பொருள் வெறும் கற்பனைப் பொருள் அல்ல.

நனவு நிலை உணர்வுகளைப் போலவே. அவை பொறுமை வாய்ந்தவை. அதிக நிஜமானவை மூலப்பொருளை அடையும் போது நாம் சித்தத்திலிருந்து உயர்கின்றோம்.

'வாழ்க வையகம்'

சீ.தேவதாஸ்காந்தி சுவாமிகள்,
மதுரை காந்தி மியூசியம்,
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கல்லூரியின் நினைவழியாத் தடங்களில் சாரங்கன்.....

அதிபர் என்ற எனது இப்பணியில் பல மனிதர்களை. பல மாணவர்களை நிதம் நிதம் சந்தித்து வருகின்றேன். அவர்களில் ஒரு சிலர் என் எண்ணங்களில் நிலைத்து விடுகின்றார்கள். அத்தகைய ஒருவராக சாரங்கனும் எனது நினைவுகளில் நீங்காத இடத்தைப் பிடித்து விட்டார். க.பொ.த (உ/த) பிரிவில் வணிகப் பிரிவில் கற்பதற்காக கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு 2014 ஆம் ஆண்டில் வருகை தந்த போது சாந்தமான. அழகான அந்த முகம் என்னுள் பதிந்து கொண்டது. பண்பிலும், பணிவிலும் மட்டுமல்ல, பல துறையிலும் ஆற்றலுள்ளவனாக விளங்குவான் என்ற உள்ளுணர்வு எனக்குள் இருந்தது.

எனது கணிப்பு தவறாகி விடவில்லை. கல்லூரியில் கற்ற இரண்டரை வருடங்களில் தனது பண்பிற்கும், ஒழுக்கத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் சிரேஸ்ட மாணவ தலைவனாக எல்லோராலும் ஏக மனதான தெரிவிற்கும் உள்ளானார் சாரங்கன். தனக்கு வழங்கப்பட்ட பணியினை செவ்வனே நிறைவேற்றியதுடன், ஏனைய மாணவ தலைவர்களையும் சிறப்பான முறையில் வழிநடத்தி எல்லா மாணவர்களுக்கும் முன்னுதாரணமான மாணவனாகத் திகழ்ந்தார்.

எமது கல்லூரி தேசிய ரீதியில் சாதனை படைப்பதற்கு கபடி அணியில் விளையாடி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். க.பொ.த (உ/தர) வகுப்பின் செயற்றிட்டத்திற்காக தனது குழுவினருடன் இணைந்து பெறுமதி மிக்க மணிக்கூட்டுக் கோபுரத்தினை நிர்மாணித்ததோடு என்றும் தம் பெயர் கல்லூரியில் நிலைத்திருக்கும்படி அக்கட்டடத்தில் தனது பெயரையும் பொறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுச் சென்றிருக்கிறார். உயர்ந்து நின்ற அவரது குணத்தைப் போலவே இன்றும் அக்கோபுரம் எமது கல்லூரியின் முன் பகுதியில் பெருமையோடு நிமிர்ந்து நின்று சாரங்கனின் நினைவுகளை எம்முள் மீட்டி நிற்கிறது.

இணைபாடவிதானச் செயற்பாடுகளில் அதிக ஆர்வம் உள்ளவராய் இருந்தபோதிலும் கல்விக்கான வாய்ப்புக்களைத் தவற விடாது சம அளவான ஆளுமை வெளிப்பாட்டினை பல்கலைக்கழகத் தெரிவின் மூலம் வெளிக்கொணர்ந்தார். இத்தகைய சகல துறை ஆளுமையாளனை உருவாக்கியதில் அவரது குடும்பத்தின் பங்கு அளப்பரியது என்பதனை நானறிவேன். எல்லோராலும் அன்பாக "செல்லா அண்ணை" என்று அழைக்கப்படும் சாரங்களின் தந்தை எனக்கும் ஒரு சகோதரனாகவே என்னால் உணரப்படுகின்றவர். அவரது பொறுமை, பாடசாலையின் சட்டதிட்டங்களை மதித்து அதற்கேற்ற வகையில் நடக்கின்ற பண்பு, ஒழுக்கம் என்பனவும், சிறந்த சைவசமயப் பண்பாட்டுடன் கூடிய பழக்கவழக்கங்களையும் இன்று வரை நான் மதித்து வருகின்றேன். சிறுவயது முதலே தந்தைக்கு உதவும் தனயனாகவே சாரங்கன் வாழ்ந்திருக்கின்றார்.

பல வருடங்கள் வாழும் ஒருவர், இவ்வுலகில் பதிக்க முடியாத தடங்களை 22 வருடங்கள் வாழ்ந்து தனது நினைவுகளை எல்லோர் மனதிலும் பதித்து விட்டுச் சென்றுள்ளார் சாரங்கன். வாழும் காலத்தில் மாணவர் சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார் சாரங்கன். அவர் சகல துறைகளிலும் பதித்த ஆழமான வெற்றித் தடயங்களை கிளிநொச்சி இந்துக்கல்லூரி என்றென்றும் மறக்காது. அவருடைய ஆத்மா சாந்திபெற பிரார்த்தித்து நிற்கின்றேன்.

திரு.கி.விக்கினராசா
அதிபர்
கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநகர் அதிபரின் மனதிலிருந்து.........

"வாழுகின்ற மக்களிற்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்ற வாக்கிற்கிணங்க வயதில் இளமையாக இருந்தாலும் விக்கினராஜா சாரங்கன் அனைத்து மாணவர்களிற்கும் முன்மாதிரியாக பணிவும் பண்பும் கொண்ட மாணவனாகச் செயற்பட்டான்.

தரம் 1 இனை 2003 ஆம் ஆண்டு சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பித்து தரம் O/L வரை தனது கல்வியை எமது பாடசாலையில் பயின்றார்.

பாடசாலையில் சிறந்த மாணவனாய் மட்டுமன்றி அனைவர் மனதிலும் சிறந்த ஒருவனாய் வாழ்ந்தார். பாடசாலையில் புத்தகக் கல்வியை மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்பாக ஈடுபட்டார்.

அந்த வகையில் பாடசாலையின் கபடி அணியிலே சிறந்த கபடி விளையாட்டு வீரனாகச் செயற்பட்டு எமது பள்ளியின் பெருமையைப் பறைசாற்றினான். எமது பாடசாலையின் ஒழுக்கத்தையும், வளத்தையும் பாதுகாக்கும் சிறந்த மாணவத் தலைவனாகவும், தேசிய மாணவ பயிற்சி அணியின் அங்கத்தவராயும் செயற்பட்டான்.

சிவநகர் பாடசாலையின் சிறந்த மாணவனாக மட்டுமன்றி சிவநகர் மண்ணின் சிறந்த புதல்வனாகவும் செயற்பட்டார். தன்னைச் சுற்றி வாழும் காலத்தில் சிறந்த நண்பர்களையும், நல்ல உள்ளங்களையும் உருவாக்கினார்.

சிறந்த ஒரு மாணவனாய், ஒழுக்க சீலனாய் உன் புகழும் நினைவும் எம்மனதில் நீங்கா நினைவுடன் ஒளிர்ந்து கொண்டு இருக்கும். இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

திரு.ஜ.இராஜரட்னம்
அதிபர்
கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை நண்பர்களின் மனதிலிருந்து......

"நவில்தொறும் நூல்நயம் போலும்
பயில் தொறும் பண்புடை யாளர் தொடர்பு".

(நல்ல பண்பு உடையவர்களின் தொடர்பானது படிக்கப் படிக்க நூலின் நயம் மேன்மேலும் இனிமை தருவது போல் பழகப் பழக மேன்மேலும் இன்பம் தருவதாகும்)

எனும் வள்ளுவனின் வாக்கிற்கு கூட முன்னுதாரணமாய் திகழ்ந்தவன் எம் சாரங்கன். பல்கலைக்கழகம் ஆரம்பித்த முதல் நாட்கள் அறிமுகமற்று பேசித்திரிந்தோம். வலுக்கட்டாயமாய் புன்னகைத்தோம். ஆனால் இன்று ஆருயிர்த் தோழர்களாய் நாம் இருக்க அவன் புன்னகைக்க மறந்ததன் விதியை எங்கே சொல்லி நொந்து கொள்வோம். குறும்புகளாய் நீ செய்த விளையாட்டுக்கள் இன்னும் கூட நினைவிலிருந்து அகலவில்லையடா. ஒரு தாய் வயிற்றில் பிறந்திருந்தால் கூட இவ்வாறு இருந்திருப்போமா என்று தெரியவில்லையடா. ஆனால் நாம் கூடி உணவு உண்டு, குதூகலித்து, சுவாரசியமாய் பல கதைகள் பேசி, செல்லச் சண்டைகள் பிடித்த இத்தனை இன்பங்களும் மீண்டும் எவ்வாறடா கிடைக்கும்.

நீ இல்லாத வெற்றிடத்தை இனி எவ்வாறடா தாங்கப் போகிறோம் சாரங்கா? ஒரு மாதமாய் உனை நாம் பார்க்கவில்லையடா, இருந்த போதிலும் ஒவ்வொரு நாழிகையிலும் உன் புன்முறுவல் முகம் தானடா எம் நினைவலைகளை வருடிச் செல்கின்றது. எம் பல்கலைக்கழகத்தில் இனி நீ இல்லாத நிகழ்வுகள், நீ இல்லாத விரிவுரை மண்டபங்கள், ஏன் நீ இல்லாத விடுதி அறைகள் கூட வெறிச்சோடி புலம்பல் கதைகளைக் கேட்க எமக்கு தைரியம் இல்லையடா...

தந்தை, தாயை விட்டு சகோதரனைப் பிரிந்து ஒன்றாய்ப் படிக்க வந்த எமக்கு ஒரு தாய் பிள்ளையாய் ஆதரவு கொடுத்தாயேடா சாரங்கா. இனி அந்த ஆதரவிற்கு எங்கேயடா போவோம். ஏங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடக்கின்றோமடா உன் சிரித்த முகத்தை ஒருமுறை காண.....

பல்கலைக்கழகம் ஆரம்பித்து இன்னும் ஒரு ஆண்டு கூட பூர்த்தியாகவில்லையடா. ஆனால் ஓருயிராய் இருந்த எம்மை விட்டுச் செல்ல உனக்கு எப்படியடா மனசு வந்தது? ஒரே தாய் வயிற்றில் பிள்ளைகளாய் இருந்ததற்காக உன் பெற்றோரை இனி நாம் பார்த்துக் கொள்வோம் என்ற நம்பிக்கையில் விட்டுச் சென்றாயோ சாரங்கா?

விதை கூட ஒருநாள் விருட்சமாய் விண்ணைத் தொடும். ஆனால் மண்ணைத் தொட்ட எம் சாரங்கனின் தமிழ் பற்றோ இவ் வையகமும் அவன் தாழ் பணியும் அளவிற்கு ஆழமானது.

**"தமிழனாய் பிறப்பது அவமானமல்ல,**

**அதுவே உன் அடையாளம்"** என்று அடிக்கடி கூறும் உன் தமிழ் பற்றிற்கு இங்கே யாரும் நிகராய் உள்ளனரோ சாரங்கா?

நீ பற்றிய தமிழை, நீ உயிராய் நினைத்த நம் தாய்மொழியை இனி நாம் எம் கண்ணென நினைத்து அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்போமடா. அதற்கு நீயும் எமக்கு ஆத்ம ஜோதியாய் இருந்து ஆதரவு தர வேண்டும்.

நம் பல்கலைக்கழக ஒவ்வொரு நினைவலைகளையும் மீட்டிப் பார்க்கையில் விழியோரமாய் கசியும் நீரையும், உதட்டுடோரமாய் உச்சரிக்கும்" சாரங்கன்" என்ற பெயரையும் நீ காற்றில் கலந்தவனாய் காண்பாயடா. ஆனால் உன் நட்புகள் நாமோ உனை புகைப்படத்திலும், நினைவிலும் மட்டுமே காணும் ஒரு கொடூர தண்டனையைத் தந்து உன் பாசத்தை எம்மகத்தே விதைத்துச் சென்று விட்டாய் .இவ்விதை வளர்ந்து விருட்சமாய் ஆயினும் உன் நினைவலைகள் எம் நெஞ்சை விட்டு ஓயப்போவதில்லை.

சாரங்கன் இன்னும் இறக்கவில்லை. நம் நட்புக்குள் ஆத்ம விதையாய் இன்றும் கூட எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

அன்னாரின் பிரிவால் துயருறும்....
யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக
முகாமைத்துவ பீட மாணவர்கள் (1ஆம் வருடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகையின் புகலிடம் சாரங்கனே.....

கள்ளங் கபடமில்லா புன்னகையின் பிறப்பிடமே!
தென்றலிலும் மென்மையான சொல்லாடலுக்குரியவனே!
எல்லோர் மனதிலும் கொலுவிருக்கும் இளையோனே!
என்ன சொல்லி உனக்கான இரங்கலை எழுதுவேனடா?

சின்னவனாய் துடுக்கான சுட்டியாய் - நீ
துள்ளி விளையாடும் பருவத்தே - அன்று
அருகிருந்து ஆயிரம் குறும்புகள் செய்தாய் - இன்று
வளர்ந்தவனாய் உனைக் காணும் போதெல்லாம்
அந்நாள் நினைவுகளோடு - எம்முள்
இனம் புரியாத பெருமிதத்தைத் தந்தாய்! - நீ
சிந்திடும் புன்னகைக்கு வலிமை அதிகமடா
சடுதியில் மறைந்திடாது நாள் முழுவதும்
மனதில் நிறைந்திருக்கும்! - வயது
வேறுபாடின்றி தொழிலிடத்தில் - நீ
எல்லோரையும் வரவேற்று வகை கூறும் பாங்கு
யாரிடத்திலும் காண முடியாத அனுபவத்தின்
பக்குவமா? இல்லை குடும்பத்தின் பாங்கா? - என
பலநாள் வியந்ததுண்டு.

மாண்புறு மாணவனாய் எல்லோர்
மனதிலும் இடம்பிடித்த சாரங்கா.....
பல்கலைக்கழக கல்விமானாய் - எம்
கிராமத்திற்கு ஆறிவூட்டுவாய் - என
எதிர்பார்த்திருந்தோம் எல்லாமே
பொய்த்துப் போனதய்யா!
நட்பு வட்டத்தில் உனக்கிருந்த சிம்மாசனம் எதுவென
பேதலித்து நின்ற நட்புகளிடையே கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரே வியந்து நின்றதடா! - எல்லோருக்கும்
இனியவனாகவும் எளிமையானவனாகவும்
எப்படி உன்னால் வாழ முடிந்தது?
அன்புக்கும் நட்புக்கும், உறவுக்கும்
இலக்கணம் வகுத்த உன் பிரிவை
எப்படியடா ஆற்ற முடியும்!
வாழ்வை மட்டும் அழகாக்காமல்
மரணத்தையும் அழகாக்கியவன் - நீ
உறவை மட்டும் அழகாக்காமல்
ஊரையே அழகாக்கியவன் - நீ என்பதை
கற்றுத் தந்துள்ளாய்!
காலனவனும் உன்னில் காதல் கொண்டதாலோ
தன்னருகில் நீயிருக்க அழைத்திட்டான்
யாருக்குத் தான் உன்னைப் பிடிக்காது - அது தான்
காலம் கனிய முன் அழைத்திட்டான் போலும்
அமைதி கொள்ளய்யா
காயமிது பொய்யென்றும் காற்றடித்த
பையென்றும் எமக்கு நாமே
ஆறுதல் சொல்லிக் கொண்டு - நிஜமான உன்
நினைவுகளோடு ஊரும் உறவும் நிலைத்திருக்கும்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் நினைவுகளோடு,
திருமதி. மீ. இதயசிவதாஸ்,
அதிபர்,
கிளி/உருத்திரபுரம் ம.வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் ஆசானின் இதயத்திலிருந்து.....

கபடியில் கால் பதித்து கல்வியிலும் சிறந்தவனே!
காலையில் கடமைக்கு சென்றவனே!
கிளியின் மொழி பேசுபவனே!
கீதங்கள் பல சொல்லித் திரிபவனே!
கூட்டாளிகள் மனதைப் பிடித்தவனே!
கெட்டித்தனத்தில் உயரச் சென்றவனே!
கேட்பதற்கு மாட்டேன் என்று சொல்லாதவனே!
கைகொடுத்து உதவிக்கரம் நீட்டுபவனே!
கொண்ட கொள்ளை தளராதவனே!
கோபுரத்தைப் போல் உயர்ந்து நிற்பவனே!

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

இ.பரஞ்சோதி
கபடி பயிற்றுனர்
சிவநகர், உருத்திரபுரம்.

---

**உங்கள் குறிக்கோளில் நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்றால், உங்கள் இலக்கில் இம்மியும் விலகாமல் குறிவைத்து அநேக சிந்தனையுடன் செயல்பட வேண்டும்.**

**இறைவன் நமக்கு மூளையுடனும் சிந்திக்கும் திறனுடனும் படைத்திருக்கிறான். எனவே சிந்திக்கும் திறனையும் ஆராய்ந்து உணரும் வலிமையும் கொண்டு நாம் முன்னேற வேண்டும். இதுவே நமது இலட்சியமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் விழி சிந்தும் கண்ணீர்ப் பூக்கள்...

அம்மாவின் பாசமகனாய்
அப்பாவின் வலது கையாய்
ஊர் மக்களின் நேசக்கரமாய்
எங்களின் செல்லப் பிள்ளையாய்
எம்முடன் கூட இருந்து
எமை விட்டுத் தனியாகப் போனதெங்கே .....? சாரங்கா!

காற்றெல்லாம் உன்பாட்டு
காகிதத்தில் உன்முகம்
ஊரெல்லாம் உன் பேச்சு
தெரிந்தவர்..... தெரியாதவர்
யார் அந்த சாரங்கன்.....?
அறிந்து ஓடி வருகின்றனரே... சாரங்கா
முகம் தெரியாத உன் கீர்த்தியால்......!

மின்னோடு வந்த காலன்
மின்னலாய் கவர்ந்தான் எம் பிள்ளையை
வெந்தழலாய் உழல்கின்றோம் ...... இன்றும்.
உன் புன்னகை ஒளியின்றி நாம் இருட்டில்....
என் செய்வோம்....!
உன் பிரிவு பூகம்பமாய் விட்டது.
சாந்தமான உன் வதனம்
சாரங்கா ....... எப்பிறப்பில் பார்ப்போம்?

உன் இழப்பு உறவுகளைத் தான் பிரித்தது
எம் உணர்வுகளை அல்ல.......
வெம்பித்துடிக்கும் உன் நண்பர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழி நீர் துடைக்க எழுந்து வாடா...?

கடைசிவரை நான் இருப்பேன் என்றாய்
எமைக் கல்லாக்கி விட்டுப் போனதேன்....?
எல்லையைக் காணமுடியால் தவிக்கின்றோம்...
வழி தெரியவில்லை.....

விருட்சம் விழுந்த போதும் ,
அதிராத பூமி ,
இந்த இலை விழுந்த போது
நடுங்கிக் கண்ணீர் விட்டது....
என்ற பாரதியின் வரிகளிற்கு
எம் ஊரில் பொருள் தந்தாயடா....!

தர்சினி ஆசிரியை
நண்பர்கள் குழாம்

நம் தவறுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடமே உயர்வான வாழ்க்கைக்கு நம்மை இட்டுச் செல்லும்.

வாழ்வில் உயர்ந்தவர்கள் அனைவரும் நேர்மறை எண்ணம் கொண்டவர்களே.

கூழை வாழ்ந்தால் கோடி நன்மை நம்மைத் தேடி வரும். எளியவர்களைக் கூட நாம் மதிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு.....

பள்ளிக் காலம் முதல்
பல்கலை வரை
நாம் ஒன்றாக இருந்த
காலங்களை எழுதிட இயலாது.....

புன்னகை மட்டுமே நம்மிடத்தில்
துன்பம் என்றொன்றை
நாம் அறியோம் நட்பினால்
சந்தோசத்துடன் குறும்புக்கும்
குறைவில்லை எம்மிடத்தில்.....

கவலைகள் மறந்து
ஆட்டம் பாட்டம்
கொண்டாட்டம் என
நட்பென்ற வட்டத்திற்குள் சிறகடித்தோம்
சந்தோசமாக.....

பார்ப்போர் கண்களுக்கு
குளிர்ச்சியாக இருந்த நம்நட்பு காலன்
கண்ணில் பட்டதுவோ?
ஒருநொடி கூடப் பொறுக்காமல்
பற்றி விட்டான் நம் நட்பை.....

நண்பா! உன்னை மட்டும்
பற்றிச் செல்லவில்லை கயவன்
நம் சந்தோசம், குறும்பு, நிம்மதி
எல்லாவற்றையும் பறித்து
நிர்க்கதியாக்கிவிட்டான்.....

தடம் மாறும் போதெல்லாம்
தாங்கிப் பிடிப்பவன் - நீ
தயங்காமல் தட்டிக் கேட்பவனும்
நீ அன்றோ நண்பா!.....

"சக்கரை" என
வெறுப்பேற்ற அழைத்தாலும்
ஒற்றைப் புன்னகையால்
அடக்கிடும் ஆற்றல்.....

எம்மனம் சோரும்
போதெல்லாம் மருந்தாகும்
உன் அன்பு வார்த்தைகள்
சொல்லாமலே மற்றவர்
நிலையறியும் திறன்.....

உன் பிரிவையும்
விட்டுச்சென்ற நினைவுகளையும்
மறக்க முடியாமல் தவிக்கின்றோம்
காலங்கள் சென்றாலும்
கலையாது உன் நினைவுகள்.....

அன்று புன்னகை மட்டுமே
வாழ்க்கையாக இருந்தது - இன்று
விழிகளில் நீர் ததும்ப
உன் நினைவுகள் மட்டுமே
வாழ்க்கையாக.....

ஒரு நொடி கூட பிரியாத எம்மை
உன் நினைவுகளில் இருந்து
மீள முடியாமல் செய்து விட்டாய்
உருகும் மெழுகாய்
தவிக்கிறோம் உனைப் பிரிந்து......

நண்பர்கள்
(2013 க.பொ.த சாதாரண தரம்)
(கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தோழா

அரிவரி தொடங்கி
உயர்கல்வி செல்லும் வரை
எம் அருகிருந்த சாரங்கா!
நட்புக்கு இலக்கணம் நீ
பார் போற்றும் பண்பாளன் நீ
எம்மில் ஊரே போற்றும்
உத்தமனும் நீயே தான்!
புன்னகை மாறா முகம்,
மெல்லிய உந்தன் பேச்சு,
கள்ளமில்லா வெள்ளை மனம்
சிந்தையில் நிற்குதடா!
எம் நட்புக்குள் யாரது தீ வைத்தது?
எம் இளமையின் கனவுகள் ஏன் தொலைந்தது?
விழிகளோ குருதியைச் சொரிகின்றது!
இதை விதியென நம்ப மனம் மறுக்கின்றது.
உலகமெங்கும் ஒளியேற்றும் மின்சாரம்
உன் வாழ்வை இருளாக்கிச் சென்றதேனோ?
நீ இல்லையென்ற செய்தி
பொய்த்திட வேண்டுமென்று
முப்பொழுதும் வேண்டுகின்றேன்!!

நிமிர்ந்த நடையும், நேரிய பார்வையும்
கனிந்த இதயமும் சரிந்து போனதற்காய்
காலத்தையே சபிக்கின்றேன்!
ஏனெனில்,
நிகரற்றவர்களை என்றும்
நிலைக்க அனுமதிப்பதில்லை
இந்த நிகழ்கால இறைவர்கள்
உன்னைப் போலொரு
உத்தம நண்பனை
இன்றுவரை எங்கும் கண்டதில்லை
நாம் துள்ளி ஓடிய
பள்ளி மண்ணில்
அனைவருமே தேடுகின்றோம்
உந்தன் கால்த் தடத்தை
நேசனடி சேர்ந்து
நித்தியத்துள் வாழ்வாய்
நிழலாக.....!

உன் தோழி,
சதானந்தன் விதுஷா
(எழிலருவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் சில துளிகள்......

என்பிள்ளை என்தங்கை பிள்ளை! என்றல்லாது
என்பிள்ளையாய் நிதம் எம் வீடு வந்து செல்வாய்!
எம் தேவை எது என்று அறிந்துகொண்டு - அதை
உன் வேலை போல நீ உவந்து செய்தாய்!
பெற்ற பிள்ளை என்ன? பெறாமகனும் இப்படித்தான் என்று
உற்றவேளை அறிந்து உதவியதோர் அன்பு மகன்!
உன்னைப் பற்றியது ஓராயிரம் நினைவுகளில்!.............
எவற்றை எல்லாம் என்னால் எடுத்துரைக்க முடியும் ஐயா?
பிறந்ததை, தாய் மடியில் தவழ்ந்ததை, வளர்ந்ததை
பள்ளி சென்று படித்ததை, பல்கலைக்கழகம் வரை சென்றதை
எப்போதும் என் வீடு தேடி வந்து அன்புடனே
பெரியம்மா என்றழைத்த பேச்செல்லாம் நேற்றுப் போல்......
ஆறாத கவலைதனை எமக்களித்தந்து
அரை நொடியில் அரன் அடியை அடைந்தாய் என்ற
நாராசமான வார்த்தை அன்று எங்கள் வீட்டில்
நஞ்சாக எம் செவியில் வீழ்ந்ததன்று
ஓராயிரம் கனவில் எழுந்த கோட்டை
ஒரு நொடியில் சரிந்து மண்மேடாய்ப் போச்சு
ஊராரும், உற்றாரும் உன் உடலில் வீழ்ந்து
உருண்டார்கள், புரண்டாபர்கள் எதனைச் சொல்வேன்?
பேராயிரம் படைத்தாய், பெருமை சேர்த்தாய்
பெரியவர்கள் உனைத் தேடி வந்து புகழ வைத்தாய்
தாராள மனத்தோடு தந்தை தாய்க்கு
தக்கதோர் வலக்கரமாய் நின்றுதவி செய்தாய்!
தீராத துயர் தன்னைத் தாய்க்குத் தந்து - இறை
திருவடியை தஞ்சமென்று தேர்ந்தெடுத்தாய்
ஊராரும் உறவுகளும் சுற்றி நின்று - அழுது
உருளுவதை உன் கண்கள் பார்காதையா!
யார் யாரோ வந்தார்கள் சுற்றி நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடித்த நீர் நீ கொடுத்த அன்பின் ரத்தம்!
பேராக நீ வாழ்ந்தாய்! எம் உள்ளத்தில்
பெரியவர்கள் சிறியவர்கள் என்று எண்ணாது
யார் யார்க்கும் அன்பு செய்தாய் உன்னை நாங்கள்
மறந்து வாழ்ந்திருப்பதென்பது நடக்குமாமோ?
உன் அன்பில் ஊறி நின்ற உறவுகள் நாம்
உன்னிழப்பை எங்கள் உள்ளம் தாங்காதையா
எம் கருத்தை உன் கருத்தாய் ஏற்றுக்கொண்டு
இனியவையே செய்து வந்தாய் சுற்றம் யார்க்கும்
எம் பிள்ளை சாரங்கன் இதை முடிப்பான்
என்று நாம் எண்ணியவை பொய்களாக்கி
மின்னல் என மறந்தாயே! எங்கு சென்றாய்?
மீண்டும் வரமாட்டாயா செல்வா நீ தான்!
"தண்ணீரை விட்டெடுத்த மீனைப் போல"
தவிக்கின்றோம் எம் துயரை அறிவர் யாரோ!
சின்னநடை, சிரித்த முகம், சொல்லியதை தட்டாத தூய மகன்
பள்ளி விட்டு வந்து விட்டால் – எம்
படலை நின்று
பெரியம்மா என்றழைக்கும் அந்த வார்த்தை
சொல்லொணாத் துயரத்தில் தொலைத்து விட்டோம்
தொடர்ந்து நாம் அச் சொல்லைக் கேட்க மாட்டோம்!
என்று எல்லாம் எண்ணினால் இதயம் எல்லாம்
இரும்பாகக் கனக்குதையா என்ன செய்வோம்?
எம் இதயம் தாங்காது உன் இழப்பை
என்றைக்கோ நீ வருவாய் என்று நெஞ்சில்
"சொல்லியதை செய்கின்ற சுப்பன் போல"
சுற்றிச் சுற்றி வருகிறதே உந்தன் எண்ணம்
எல்லோருக்கும் நல்லவனாய் இனிதே வாழ்ந்தாய்,
இறக்கும் வரை எம் உடலின் உயிரே ஆனாய்,
சொல்லாமல் உன் உயிரை கவர்ந்து சென்றாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவனே! உன் உடலை எமக்காய் விட்டுச் சென்றாய்
எல்லோரும் இயலும் வரை அழுது நொந்து
எரித்து விட்டோம் உன் உடலை சுடுகாட்டில் வைத்து
பொல்லாத விதி என்றார் போனோர் வந்தோர்
போதவில்லை அவ்வார்த்தை பொறுமை சேர்க்க!
எல்லோர்க்கும் இது தானே வாழ்க்கை என்று
எண்ணுதற்கு முடியவில்லை எங்கள் கண்ணா!
என்னாலே முடியவில்லை உன்னைப் பற்றி
எழுதுதற்கு சொற்கள் இல்லை என்றால் உந்தன்
அம்மாவால் முடிவதென்று ஒன்று உண்டா?
அவளுக்கு இதை தாங்கிடவே சக்தி உண்டா?
எல்லாமே முடிந்ததையா எங்கள் வீட்டில் – இதை
எப்படி நாம் ஈடுசெய்வோம்! தேறி நிற்போம்
கண்ணே மணியே கற்கண்டே நல்முத்தே என்று
சொல்லி வளர்த்தவளின் துயர் நீக்க ஓர் தேவதையாய்
எங்கள் குடும்பத்தில் இனியும் நீ வர வேண்டும்
நல்லவனாய் வல்லவனாய் நாம் நினைக்கும் சாரங்கனாய்
துள்ளி எங்கள் முத்தம் எல்லாம் துடிப்போடு வரவேண்டும்
எங்கள் படலை திறந்து எங்கே பெரியம்மா என்றழைத்த
சின்னக்குரல் மீண்டும் செவிகளில் வீழ வேண்டும்
என்று மனம் எண்ணி ஏங்குவதை தவிர என்னால்
என்ன தான் எண்ண முடியுமையா? உன்னை நினைத்து!
என்னால் வரம் ஒன்று இறைவனிடம் கேட்பதென்றால் எம்
கண்ணான சாரங்கன் எங்கள் குடும்பத்தில் இனியுமொரு பிறப்பெடுத்து
நாம் ஒன்றாய் இருக்க உதவிடுவாய் எம் இறைவா!

ஓம் சாந்தி!

உன் துயரில்
பெரியம்மா
நாகேஸ்வரி – பேரம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரியின் கண்ணீர் வரிகள்

எனக்கோர் உறவு என் தம்பி என்றுரிமையுடன்
மனப்பூர்வமாய் எம்மை மகிழ்வித்து வந்தவனே!
எப்பொழுதும் அன்பு மொழி பேசும்
தம்பி உந்தன் பாச உள்ளம்
பறந்து சென்றது எங்கே?
என்னால் நம்பமுடியவில்லை
கார்த்திகைத் திங்களின் ஒரு காலைப்பொழுது
காதில் விழுந்த செய்தியால்
கனத்துப் போனது உள்ளம்
கள்ளமற்ற உன்னுயிரை கவர்ந்து செல்ல காலனவன்
மின்னலென வந்தானா? மின்சார வடிவத்தில்
எண்ணவில்லை நாங்கள்! இதயம் ஏற்க மறுக்கிறது!
உன் புன்னகை கண்டு நாம் பூரிப்பதெப்போது?
பல்கலைக்கழகம் சென்று பண்புடனே கற்றவனே!
எல்லோர் மனங்களும் ஏற்றுக்கொள்ளும்
நல்லவனாய் வல்லவனாய் வாழ்ந்தவனே!
உற்ற நல் சகோதரனே!
ஊர் போற்றும் மாண்பினனாய்
வாழ்ந்த சாரங்கனே!
தாய்மடி மறந்து – நீ
விண்ணகம் சென்றதென்ன?
அல்லும் பகலும் காற்றிலும் வேகமாய்
எல்லோர்க்கும் உதவிகள் பல புரிந்த
கடமைச் சூரியனே எம் வலக்கரமாய் நின்றவனே!
உன் பிரிவை எம் உள்ளம் ஒரு போதும் ஏற்காது
நிச்சயம் நீ வந்து
எம் சோகம் மாற்றி விடு

அன்புச் சகோதரி
பே.கிருத்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கையின் ஆற்றாமை

அன்பென்ற சொல்லுக்கு
இலக்கணமாய் வந்தவனே!
கோடி கோடியாய் கொடுத்தாலும்
உன் அன்பான குணத்திற்கு யாருள்ளார்?
அண்ணா இந்த உலகினிலே.

பண்பானவனாய் பக்குவமானவனாய்
பலர் வாழும் அவனியிலே
பற்றுடன் எமை அணைத்து
பலர் போற்ற வைத்தவன் நீ

எல்லோரும் சேர்ந்திருந்து
சாப்பிடுவோம் வா அண்ணா!
நான்கு அண்ணா என்று
சந்தோசப்பட்ட என்னை அழவைத்துவிட்டு
மூன்று அண்ணா ஆக்கி விட்டாயே!
உன் தங்கை ஒரு முறை அழைக்கின்றேன்
வா அண்ணா.

அன்புத் தங்கை
அபிரா

**நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் நம் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்.**

**மதம் என்பது பக்குவப்பட்டவர்களுக்கு நட்பு வளர்க்கும் சாதனம். அல்லாதவர்களுக்குத் தான் அது சண்டை வளர்க்கும் ஆயுதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுருகும் நினைவுகளோடு

நெஞ்சு கனக்கும்
சோகங்களோடும்
வெந்து தவிக்கும் பாச
உறவுகளோடு
துயரம் பகிரக் கூட
முடியாத துணிவுமின்றி
தத்தளிக்கும் உள்ளத்தோடு
உருகும் உறவுகளும்
ஏங்கித் தவிக்கின்றோம் எம் ஊரின் செல்வமே!

சாரங்கா! – உன் பேரிழப்பு
தாங்கக் கூடிய மரணமில்லையடா
உன்மரணம் மின்னலடித்து இடிமுழங்கி
எம் செவிப்பறைகளிலும் இதயத்திலும்
இடிவிழுந்த உணர்வுகளோடு நாமும் உருகும்
உறவுகளும், உன் நண்பர்களும்
உன் உயிர் சுமந்து உறவாடிய
பாசப் பெற்றோரும், உடன் பிறப்புகளும்
எப்படியடா தாங்கமுடியும்?

சாதனை படைப்பாய் எனக் காத்திருந்தோம்.
காலன் தன் சாதனையைப் படைத்து விட்டானே!
விதியே உனக்கொரு முடிவில்லையா?
கதியே நீ என்று நம்பினோம்
கடவுளே உனக்கும் கண் இல்லையா?
மதியை மயங்க வைத்த காலனே!
உன் மனமென்ன கல்லா

புதிதாய் – நீ பிறப்பாயடா சாரங்கனே!
நம்பிக்கையோடு துதிப்போம் உன் நினைவு சுமந்து
பிறப்பாய் மீண்டும் நீ
எம் நெஞ்சனைக்க
இறப்பல்ல இது புதிய பிறப்பு
மறவோம் உன் வாழ்வும்
நினைவும்

**கலாகணேசன்**
**உருத்திரபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சென்றாய் சாரங்கா......

அத்தனை உள்ளங்களிலும்
உன் அன்பால் நிறைந்து
இன்று நீ அனைவரையும்
ஆழ்ந்த வருத்தத்தில்
மூழ்கடித்துச் சென்றாயோ...?

இதயத்தின் பாரமதை
இறக்கி வைக்கும் முன்
இடியாய் அனைவரின்
இதயங்களை இடித்துச் சென்றாய்...

நெஞ்சைவிட்டு நீங்கா
வலிகளை நிறைத்து
சென்றாய்...

புன்னகைப் பூக்களை
பூக்கச்செய்திருந்த
வேளையில்..பூவிதழ்
வீதிகளை தழுவிட
பூமியை விட்டுப் பிரிந்து
சென்றாய்...

உன் மரணச்
செய்தியை
ரணமென எம்மிதயத்தை
குத்திவிட்டு சென்றாய்...

மேகமழையென
கண்ணீர் மழையில்
கரைத்து கன்னங்களை
கதறி அழுது தழுவிச்சென்றாய்...

கவிதைப் படைப்பை அகற்றி
இன்று கண்ணீர்ப் படைப்பை
அள்ளித்தருகிறேன்...

அகலாத நினைவுத்தீ அதனை நீ
முழுமையாய் எரித்து
உன் உயிரை நீ முந்திக்கொள்ள
உனையே நீ முழுதாய்
மூடிக்கொண்டாய்...

ஏற்றி வைத்த ஒளிவிளக்கது
உனக்காக அழுது உறங்கும்
முன் உன் விழிகளை நிரந்தரமாக
மூடிக்கொண்டாய்....

இனி வான்வெளியில் உனக்கு
நிலவொளியும் இல்லை
விண்மீன்களின் ஒளியும்
இல்லை...வான்மகள்
என்னும் மேகமகள் நிரந்தர
உறக்கத்திற்கு விரைந்து
சென்றுவிட்டாள் ...

அன்பு மச்சான்
உஷாநந்தன்
(நந்தா மச்சான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் மதியுள்ளவரை உமை மறவோம்

காற்றினிலே வந்த செய்தி
கனவாகிப் போகாதோ?
நேற்றுவரை நீ இருந்தாய்
இன்று இல்லையென ஆனதுவோ!
உறவுகளுக்குப் பாலமாக இருந்தீரே!
உத்தமனே எங்கிசென்றாய்?
பந்த பாசம் மிகுந்தவனே!
பரிவான நெஞ்சினனே!
பண்பான இதயமே!
பாரினில் உன்முகம் நாம்
பார்ப்பது தான் எப்போது?
பல்கலைக்கழகம் சென்று
பட்டங்கள் தான் பெற்று
எல்லோர் உள்ளங்களையும்
வெல்வாய் என்றிருந்தோம்
சொல்லமுடியாத சோகம் தனை எமக்கு
எல்லையில்லாது ஏன் தந்தாய் ?
தயவான மைத்துனனே!
தார் மீகமான உணர்வாளனே !
பொய்யுரைத்திடாத
மெய்யுணர்வாளனே!
வையகம் தனை நீங்கிட
வானுலகம் சென்றதேனோ?
இரண்டாயிரத்து ஒன்பதில்
இன்னலுற்றேன் என் உடன்பிறப்புக்கள்
இருவரை இழந்து - இப்போ
பத்தாண்டு சென்று பகலவனே உனை இழந்து
பதறித் துடிக்கின்றேன் - நான்
நொந்தவர்க்கு உதவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தம் மிகுந்தவனே!
இன் சொல் பேசி வன் சொல் அறியாத
இங்கிதமானதோர் இளகிய இதயமே!
நீதியானவனே! பாதியிலே எங்குற்றாய்?
நெடிய நின்தோற்றமுடன் நிமிர்ந்த நன்னடை
நேர் கொண்ட பார்வையுடன் உலாவந்த
உன்னதமானதோர் கூர்மதியாளனே!
குவலயத்தை ஏன் துறந்தாய்?
புன்னகை பூத்த நின் திருமுகம்
புதுப்பொலிவுடன் மலர்ந்த பொன் உடல்
அக்கினியின் வாயினில் சங்கமமானதே?
நெக்குருகிப்போனேன்– யான்
என் நெஞ்சம் நிறைந்தவனே!
வஞ்சமில்லா உள்ளமே!
தேடுகின்றேன் ஐயா!
நின் தெய்வத்திருமுகத்தை.
நின் இதழோரம் மலர்ந்திடும்
மகிழ்வான புன்னகை
மண்ணில் மறைவதோ?
விண்ணில் மதியுள்ளவரை
உமை மறவோம்
உன் நினைவுகள் என்றும்
எம் மனதில் வாழும்.

என்றும் உன்
உதயா மச்சான்

**நம் தவறுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடமே உயர்வான வாழ்க்கைக்கு நம்மை இட்டுச் செல்லும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி.....

சாரங்கன்.....

வாழ்வே சோகமயமானதடா – நீயின்றி
மீளாத்துயரில் வாடுகின்றோம் – தம்பி
எம் உலகமே சித்தி வீடுதான்
சித்தி, சித்தப்பா, பிரியங்கு, சாரங்கு, சங்கீத், ஆதி, அபி
என எம் உலகம் அதற்குள் அடங்கி விட்டதடா – நீயின்றி
நாம் எவ்வாறு முழுமையடைவது
பெரியம்மா, பெரியப்பா என அழைத்து வருவாய்
பெரியம்மா, பெரியப்பா எங்கே?
பிரணா எங்கே? அக்கா எங்கே?
வாகீசன் அண்ணா வரவில்லையா? – என
எல்லோரும் எங்கே எங்கே என எப்போதும்
கேட்டுக் கொள்வாய்
வெட்டுப்புள்ளி வந்து விட்டதாக மகிழ்ச்சியுடன்
தொலைபேசியில் தெரிவித்தாய் யாவும் கனவானதடா
பிரியங்கன், சாரங்கன் என்றால் உயிராய் இருந்தோமடா
எமைவிட்டுச் சென்றாயே – சாரங்கு
இரண்டு வீட்டுக்கும் அங்குமிங்குமாய் – நடந்து திரிவாயடா
கூப்பிட்டவுடன் வந்து விடுவாயடா – நொடிப்பொழுதில்
பெரியமாமா அத்தைக்கு உறுதுணையாய் இருந்தாயே!
அனைவரையும் சோகக் கடலில் விட்டுச் சென்றதேனோ?
இறைவா எம் சாரங்கனை மீண்டும் கொடுத்து விடு
நிஜமறியா வாழ்வில் நாம் எம் நண்பர்களை, உறவுகளை
சொந்தங்களை இழந்தே வாழ்கின்றோம் – இறைவா
மரணமில்லா வாழ்வை அனைவருக்கும் கொடுத்துவிடு
றமணி மச்சான், ராஜா மச்சானையும் இழந்து நாம் தவித்தோம்
சாரங்கன் நீயும் எமை விட்டுச் சென்றதேனோ?
சித்தி பரம்பரையின் ஆணிவேர் அனைவருக்கும் – குலமாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பா என்றால் எனக்கு பொருள் தெரியவில்லை
அனைத்துமானவர் எமக்கு
எம்மை தோளில் தாங்குபவர்
அவர்களை நிலைதடுமாற வைத்தாயே இறைவா!
பம்பரமாய் சுழன்றவனே – நீ ஆறடிபாய்ந்தால்
அப்போதே நாம் இரண்டடி கடந்திருப்போம்
அவ்வாறு சுழன்றாயே!
உறவினர்கள், நண்பர்கள், சொந்தங்கள் என
ஊரே தவிக்கிறதடா
மனம் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை – நீயில்லை என்பதை
மீண்டும் வந்துவிடு சாரங்கன்
நினைவெல்லாம் சாரங்கன்
சாரங்கன் என்றே சுழல்கிறது
எங்கும் உன் அசைவுகளும் விம்பங்களும்
வேதனையில் வாடுகின்றோம் – சாரங்கன்
நீயின்றி எம் வாழ்வு பூரணத்துவம் அடையாதடா – தம்பி
மீண்டும் எம்மோடு வந்து விடு – சாரங்கன்

அன்புடன்
கீர்த்தனா அக்கா

**வாழ்வில் உயர்ந்தவர்கள் அனைவரும் நேர்மறை எண்ணம் கொண்டவர்களே.**

**விதைக்குள் தூங்கும் சக்திகளை மழை நீர் எழுப்பி விடுவது போல இளைஞர்களுக்குள் தூங்கும் சக்திகளை எழுப்பி விடும் நூலகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உறவே.....

கறை படிந்த கண்ணீர்
விழி வழியே வழிந்தோடி
விழுந்து விட்ட தருணம்
சுமை தாங்கும் தோழனாய்
உரிமையின் உறவாய்
விழித்திரையின் விம்பங்களில்
உனதுருவம் ஒன்றே
காலனின் எண்கணிதம்
கண்டறியாத் தீர்வதனாய்
தொலைதூரப் பயணத்தில்
தொலைந்து விட்ட நீயும்
உறைந்து போன நானும்
தொடரும் உன் நினைவுகளும்
என்றும் என்னுள்....

உன் மச்சான்
விதுசன் (வானிலவன்)

**நம்முள் சாதிக்கும் வேட்கை நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்பட்டே தீர வேண்டும். உண்டு உறங்கிக் காலத்தை வீணாகக் கழிப்பதற்காக நாம் பிறக்கவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்து வா சாரங்கு......

விழியோரம் கண்ணீரத் துளிகள்
விக்கித்து நிற்கின்றன
நினைவெல்லாம் நீதானே......
நிஜமாக மாட்டியா?
கனத்துப் போன - எம்மனங்களிற்கு
கானல் நீராய் போகாத - உன்
இழப்பு..... என்
கனவெல்லாம் உன் கதைகள் - இனி
நனவாகி வராதா சாரங்கு

ஒரே ஆண்டிலே - கலக்கமற்று
கருவுற்றோம்
ஒரு மாத இடைவெளியில்
கன்னிராசியிலே கண்ணியமாய்
வந்து உதித்ததோம்
உறவுமுறை மறந்து
உறவாடிய பொழுதுகள்
ஒன்றாய் சேர்ந்து குதூகலித்த
நாட்கள் - மீண்டும்
வருமாடா சாரங்கு

புன்முறுவல் செய்யும் - உன்
முகம் காண ஏங்குகின்றது
என் மனது - கனக்கும்
என் இதயத்திற்கும்
கண்ணீர் சிந்தும் என்
கண்களிற்கும் விடை

சொல்ல தெரியவில்லையடா என்
மச்சானே
கண்மடல் மூட
கனவுகளில் உன் முகம் - இன்றும்
காதுகளில் ஒலிக்கிறது
'டீ' போட்டு நீ கூப்பிடும்
உன் அடித்தொண்டைக்குரல்
இனி யார் அழைப்பார் என்னை
எழுந்து ஒருமுறை வாடா என் உறவே

பல்கலைக்கு நாம் தெரிவான
செய்தியை ஒரு நாள் முழுவதும்
கதைத்தோமே - இன்றும் நாம்
கதைத்த முற்றம் வெளித்து
நிற்கின்றது கதை பேச
ஒரு முறை எழுந்து வாடா

பெருமையுடன் சொல்வேனே
நாம் இருவரும் மாணவத்தலைவர்
என்றும் - என் மச்சான் எனக்கு
இருக்கான் என்றும் - இனி
எப்படி உரைப்பன் என், உன்
நண்பர்களிடம் எழுந்து வா சாரங்கு

"வாழ்பவர்களிற்கு வாழ்ந்தவர்கள்
பாடமடி" என்றது போல
உன் பள்ளயில் வான் உயர்ந்து
நிற்கும் மணிக்கூட்டு கோபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வாழ்வின் பெருமையை
பறைசாற்றும் - என் நண்பனே
கொள்கையிலே ஒன்றானோம்
பேச்சுக்களில் ஒன்றானோம்
உறவுமுறை மறந்து உலாவினோம்
ஒரு முறை அழைத்து விடு பவியை

நீ மறைந்த செய்தியை - இன்றும்
நம்பவில்லை என் மனது
பல்கலை விடுமுறையில் - எமை
பார்க்க வருவாய் என்று
ஏக்கத்துடன் காத்திருக்கேன்
ஏமாற்றி விடாதே என்னை

பிரிவு என்ற ஒரு வலியை
ஆயுள் முழுவதும் கொடுத்து விட்டாயா
நித்தமும் அழுகின்றேன்
ஒருமுறை எமைப் பார்க்க
எழுந்து வாடா மச்சானே

க.பவித்திரா

---

**உண்மையான அதிர்ஷ்டம் என்பது என்ன தெரியுமா? அது நமது உழைப்பின் அடிப்படையில் வருவதாகும். நம்முடைய புறத்தேயுள்ள சூழ்நிலைகளின் காரணமாக வருவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் அண்ணாவின் கண்ணீர்த் துளிகள்....

காலா!
காட்டெருமை மீதேறி காணிருள்
கால் வைத்தாயே!
கவனிக்கவில்லையா? இது
கமலேஸ்வரியின் கண்ணன் என்று
கண்ணிமைக்கும் நொடியில் களவாடிச்
சென்றாயோ?

தினமும் சித்தி வீட்டில் சாப்பிடாவிடின்
திருப்தி இருக்காது - இப்போ
திக்குத் திசை தெரியவில்லை
திண்ணையில் நீ இல்லை
தித்திக்கும் உன் சிரிப்பு இல்லை
தினுசாக இருக்கிறது என் வாழ்க்கை
சாரங்கு.......
அடைக்கலம் புகுந்தாயோ?
ராஜா, றமணி மச்சானிடம்
அறியா வயதில்
அன்புடன் இருந்த றமணி
அறிந்தானோ உனது அவலம்
அங்கும் அருகிலிருந்து
ஆற்றுவான் உன்னை
அழும் மனதுகள்
அறியவில்லையோ?
அவர்கள் அருகில்
இருப்பார்கள் என்று

பெரியம்மாவின் சாப்பாட்டை
குறை கூறாப் பெறாமகனே!
பெரியப்பாவின் புத்தகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டில் – நீ ஓர்
இடம்பிடித்தது ஏனோ!
பிறந்துவா மீண்டும்
பெடியளோடு மிடுக்காய் திரிவதற்கு
ஒருமுறை எழுந்துவா – உன்
அக்கா கீர்த்தனாவுக்காக
பூனை பிடித்த அணிலுக்கே புலம்புவாளே!
புன்னகை தம்பியை விட்டு இருப்பாளோ?
வழிநெடுக்கிலும் எல்லா
கோயில்களையும்
கும்பிட்டாளே உன்னை – மீட்டு
எடுக்க, எப்படி சொல்வேன்
மீண்டு வர மாட்டாய் என்று

வைதாரையும் வஞ்சிக்காதவனை
வாகீசன் தேடுகிறான் வருவாயா மீண்டும்?
அடிதடி பிரியங்கன் உன் அன்புக்கு ஏங்குகிறான்
கணேஸ் மாமாவும் காணியுடன்
காத்திருக்கிறார் – மீண்டும்
வருவாயா நம் அருகே?

கங்கா அக்கா வீட்டில்
கறுப்பு வெள்ளை TV யில்
பொதிகை பார்க்க
சென்றோமே – அக்கணங்களை
நெருப்பு தின்று
போனது ஏனோ?

எமை விட்டு
காலன் அடியில்
சரண் புகுந்த – எம்
உறவே! உன் ஆத்ம
சாந்திக்காய் பிரார்த்திக்கின்றேன்.

உன் அண்ணன்
பிரணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனியின் கண்ணீர் வரிகள்

முத்துக்கு முத்தான என் மைத்துனரே
சொத்துக்கு சொத்தாய் வந்துதித்தாய் என் அத்தை மடியில்
மைத்துனராய் நீ கிடைக்க என்ன தவம் செய்தோம்
எங்களைப் பிரிய ஏன் இந்த அவசரம்?

பெற்ற அன்னை தந்தைக்கு பெருமை சேர்த்தாய்
உற்ற உடன் பிறப்புக்களுடன் உயிராய் இருந்தாய்
இப்போ திரும்பி வரா தேசம் சென்றதேன்?
வஞ்சனையற்ற உன்னைப் போல் இங்கு யாருமில்லை
வஞ்சகன் மின்சார வடிவில் உன்னை அரைவயதில்
அள்ளிக் கொண்டு சென்றதேனோ......?

வழிவந்த செய்தி கனவாகிப் போகாதோ?
நீ கூறும் மொழி வந்து என் காதுகளில் கேட்காதோ?
உன் சிரித்த முகம் வந்து என்முன் சடுதியாகத்
தோன்றாதோ........?
பல்லாயிரம் கதைகள் பகிர எண்ணிக் காத்திருந்த
நேரம் எல்லாம் கனவாகி போனதே சாரங்கா!

தேனுஷா என்று பாசத்துடன் உரிமையாய் அழைத்து
நல்வார்த்தைகள் உரைப்பாய் யார் இனி அழைப்பார்?
உன்னை போல் நல்வார்த்தைகள் கூற தேனுஷா என்று

ஒரு கூட்டுப் பறவைகள் போல் சிரித்துப் பேசி
உறவாடி மகிழ்ந்திருந்தோம்
எல்லாம் கனவாகி போனதே
சாரங்கா.................
மீண்டும் ஓர் முறை வந்துவிடு உன் முகம் பார்க்க
உன் சிரித்த முகம் என்றும் என் கண்களில்
நீ தந்த பாசம் என்றும் என் நெஞ்சில்
அழியாத நினைவுகளாய் என்னுள் வாழும்

அன்புடன்
தேனுசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரா நினைவுகளுடன்

அன்பருள் ஆற்றல் மிக்க
ஆளுமை நிறைந்த எங்கள் செல்வமே
பண்புடன் படிப்பில் ஓங்கி
எண்ணிடும் வகையில் நல்ல
ஏற்றங்கள் காணும் வேளை
மண்ணினில் போதும் வாழ்க்கை என்று
விண்ணினில் விரைந்தான் இன்று
கண்ணினில் அருவிய ஆறாய் - பாய
நண்பர்கள் ஊரார் பாச உறவோர்
உன்னுயிர் உடன் பிறந்தோர்
உள்ளமும் உடலும் சோர்ந்தோம்
உன்னை இவ் மண்ணில் பெற்று
உவகையால் வாழ்ந்தோம் ஐயோ
எம்தலை விதி இதுவே தானா
நெஞ்சினில் நினைவை ஏந்தி
விழிகளில் நீரைச் சிந்த
தஞ்சமே இறைவன் பாதம்
தரணியை நீத்து நீரும்
மஞ்சமாம் மாதவன் தாழ்
மலர்பாதம் துயிலும் கொண்டீர்
விஞ்சிடும் பாசத்தோடு
விழிபொழி கண்ணீராலே
அஞ்சலித்தோம்.

பட்டு மச்சாள்
(நளாயினி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளில் நீயும் உன்னில் உறவுகளும்...........

கத்தும் கடல் காற்றின் தழுவுகையால்
கற்பகங்கள் அற்புதமாய் அசைந்தாடும்
களிகொண்ட பரியினங்கள் தாளமிடும்
கலை மலிந்த வள நாடாம்
நெடுந்தீவின் பெருமை கூறும்
நாகேந்திரம் செல்லம்மா
அம்பலவாணர் தங்கமணிக்குப் பேரனாய்
வந்து உதித்தாயே!

கருணை கொண்ட கமலேஸ்வரி
கருவிலே கலக்கமற்று உருவாகிய - நீ
விக்கினராஜா வம்சத்தின் விருத்திக்கு
தொண்ணூற்று ஏழில் அக்கராயனில்
அவதரித்தாயோ எம் சாந்துக் குட்டி

அடுத்தவர் துயரில்
அவர்கள் ஆறுதலுக்காய் - விம்மி
அழுத எம்மை
ஆயுள் வரை அழ வைத்து
ஏன் சென்றாய் சாரங்கு?

கடமைகள் மறந்து
கலக்கமற்று நான் திரிந்தேன்
தம்பி நீ உள்ளாய் என்று
அழக் கூட தெரியாத என்னை
அழ வைத்து சென்றது ஏன்டா?
பிரியங்கன் நான் அழைக்கின்றேன்
வந்து விடு ஒரு முறை
அண்ணா என்று அழைத்ததோமே
அன்பான தந்தையாய் இருந்தாயே!
அதிகம் பேசவில்லை உன்னிடம் - என்று
அழுகின்றேன்
உன் தம்பி சங்கீத்து நான்

குட்டிப் பிள்ளைகளாய்
கூத்தடித்து திரிந்த - எம்மை
அன்பாலே வழிநடத்தினாய்
அண்ணா என்று அழைத்த எம்மை
அழவிட்டு சென்றது ஏனோ?
அண்ணா என்று ஆதி, அபிரா - நாம்
அழைப்பது கேட்குதா?

எம் மருமகன் இல்லை - நீ
மகன் என்று மார்பில் போட்டு
வளர்ந்தோம் எம்மை
பரிதவிக்க விட்டு எங்கே சென்றாய்?
எம் செல்லமே!

கருவில் உனை சுமக்கவில்லை
காலம் முழுவதும் எம் மகனாய்
காப்பாய் என்று கனவு கண்டோம் - இனி
காண மாட்டோம் உன் முகத்தை
இனி என்று நினைக்கும் போது
கலங்குதடா எம் மனது.

எங்கு செல்லும் போதும்
எம்முடன் வந்தாயே! - பெரியமாமா
நான் வா என்று அழைக்கின்றேன்
வந்து விடு சாரங்கு ஒருமுறை

கடை மாமா நான்
கத்துகின்றேன் கேட்கவில்லையா?
எழுந்து வாடா
என் கண்ணே!
என் தங்கை கருவிலே அவதரித்த
தங்கமே பலமுறை
கடவுள் என் கனவிலே
காட்டியும் காக்க முடியாமல்
கணேஸ்மாமா கதறுகின்றேன்
வந்து விடு ஒருமுறை

அருகிருந்தும் அறியவில்லை என் பாசம்
உனைப் பார்ப்பதற்குக் கூட கலங்கி நின்ற
நான் கத்துகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் மாமாவை
ஒரு முறை பார்க்க வாடா

சாரங்கு சாரங்கு என்று
உன் பெரிய பெரியம்மா
அழைப்பது கேட்குதடா? ஏன்
சாந்தமாய் உறங்குகின்றாய்
சின்னப் பெரியம்மாவின்
செல்ல மகனே - என்
தேவையறிந்து செய்யும் - தங்கமே
உன் பெரியப்பா கண் கலங்கி
நிற்கின்றார்
என் கண்ணே எம்மிடம்
வந்து விடு

சிறி மாமா நான்
சிந்தை கலங்கி - நிற்கின்றேன்
சிரித்த உன் முகத்துடன்
வந்திடடா என் சாந்துக் குட்டியே

அத்தை மாமா நான்
அவசரமாய் ஓடி வந்தேன்
உன்னை காணவென்று
அழவிட்டு ஏன் சென்றாய்
என் அன்பே

மச்சான் என்று
என் மகனுடன்
உரிமையுடன் - நீ
பழகியதை பூரித்து
பார்த்த றாகினி - அத்தையை
கலங்க வைத்து எங்கு சென்றாய்?

எம் அண்ணன் பெற்றெடுத்த
அற்புதமே - சிறி, மோகன்
சித்தாக்கள் அழுகின்றோம்
வருவாயா ஒரு முறை

வெளிநாட்டிலிருந்தாலும்
உன் பாசம் அறிந்தோம்
உன்னை கடைசியாய் கூட
பார்க்கவில்லை என்று
கலங்குகின்றோம்
வவா சித்தாவும், ரஞ்சினி அத்தையும்

உதயா மச்சான் - நான்
உளறுகின்றேன் ஏன்டா
என் தம்பிகளைப் பிடிக்கும்
என்று சென்றாயோ அவர்களிடம்

ஆனந்த நிகழ்விற்காய்
கடல் கடந்து வந்த - என்னை
அழ வைக்க அழைத்தாயோடா
என் அன்பு மச்சானே - நந்தா
மச்சானைப் பார்த்து விடு ஒருமுறை

எம் மச்சானே - எமை
விட்டு எங்கு சென்றாய்?
கிருபா, ஜென நாம் கூப்பிடுகின்றோம்
அனுஷா, தீபா நாம்
அழைப்பது கேட்குதடா?

அன்பான உன் பாசத்தை
அறிந்தும் அமைதியாய்
உனை தேடவில்லை - நீ
இருந்த போது தேனு,
இந்து, யது நாம்
தேடுகின்றோம் இன்று

மச்சான் என்ற உறவை
மறந்து நண்பர்களாய்
இருந்தோம் - ஆரணி, அனி
நாம் அழைக்கின்றோம்
வந்து விடு

அண்ணா சிறி மாமாவின்
பிள்ளைகள் - நாம்
தேடுகின்றோம் - எம்
சாரங்கன் மச்சானை வருவாயா?
எமைப் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரங்கு உன் தனுசன் அண்ணா
கிருத்தி அக்கா தேடுகின்றோம்
எங்கே சென்றாய் எம் - தம்பியே

வாகீசன் அண்ணா - நான்
வாஞ்சையுடன் அழைத்தேனே!
எம் தம்பி எல்லாக் கடமையும்
செய்தாய் என்று சென்றாயோ?
எமைவிட்டு

எல்லா தம்பிகளுக்கும்
அக்காவாய் இருந்த என்னை
அன்புடன் தேவையறிந்து
அரவணைத்தாயே - என்
சாரங்கு செல்லமே - கீர்த்தனா
அக்காவைப் பார்க்க வாடா
ஒரு முறை.

அண்ணன் தம்பி உறவு
மறந்து நண்பர்களாய்
வளர்ந்தோம் - பிரணா
என்று ஒருமுறை
அழைக்க வாடா என் தம்பியே

சாரங்கன் மச்சானே!
விதுசனா, யது நாம்
தேடுகின்றோம் - எம்
மச்சானாய் வரமாட்டியா
எமைப் பார்க்க?

மச்சானே உனைக் காண
கடல் கடந்து வந்தோம்
கருணை இல்லாக் காலன்
உனைப் பிரித்து சென்றானே
கலங்கி நிற்கின்றோம்
சபேசன், சுதர்சன், ஐஸ்வர்யா
அழைப்பதுகேட்குதா?

அண்ணா தூரத்தில்
இருந்து கதறுகின்றோம்
உறவாடியது சிலகாலம்
எனினும் உன் பாசம்
உயர்வானது - அண்ணா
அஸ்வின், அக்ஷயன், கபிலன்
தருண், எலுசியாவை
பார்க்க வாடா

அண்ணா நிதர்சனா, சட்சயா
அழைப்பது கேட்குதா?
ஸ்கந்தபுரம் வந்து
உன் தம்பி பவித்திரன், தர்மீகனை
பார்க்க மாட்டியா?
அண்ணா அறியாப் பருவத்தில்
எம் தங்கை பவிசனா - நீ
வருவாய் என்று காத்திருக்கின்றாள்
வா அண்ணா எம்மிடம்.

ஒன்றாய்ப் பிறந்த இரட்டையர் போல்
ஒன்றாய் வாழ்ந்தோம் பார்ப்பவர்கள்
பொறாமைப்பட்டார்கள் - எம் மச்சான்
உறவைப் பார்த்து, என் தோள்
சாய ஒருமுறை வாடா
உன் மச்சான் விது அழைக்கின்றேன்.

ஒரே ஆண்டில் அவதரித்தோம்
அக்கறை கொண்ட நண்பனாய்
இருந்தாய் - இன்றும் உன்
குரல், சிரிப்பு மறக்க முடியவில்லை
மீண்டும் ஒருமுறை நான்
பழிக்கும் பட்டங்களிற்கு
தலை குனிந்து சிரிக்கும் பவியின்
மச்சானாய் வந்துவிடு சாரங்கு

நண்பர்களின் 'சர்க்கரையாய்'
சிவநகரின் சித்திரமாய்
உறவுகளின் உயிராய்
உலவிய சாரங்கே
எங்கு சென்றாய்
உன் தீரா நினைவுடன்
நகர்கின்றது - உன்
உறவுகளின் வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை அறிதல்

மனித வாழ்வியலில் தன்னைத் தான் அறிதலே பெரும் தத்துவமாகும். மனிதர்கள் தங்களது உள்ளார்ந்த தன்மையை பெரும்பாலானவர்கள் அறிந்து கொள்வதில்லை. சாதாரணமான ஒரு மனிதன் அயலவன் உன்னை இகழ்ந்து உரைத்து விட்டான் என்றதும் தன்னை அறியாமல் ஆத்திரப்பட்டு கோபம் கொள்வதைக் காண முடிகிறது. கோபம் கொள்பவனுக்கு புத்திமத்திமம் என்பார்கள் பெரியவர்கள். இன்னும் நாம் நோக்கும் போது கோபமும் சூறாவளியும் ஒன்றாகத்தான் பார்க்க வேண்டியுள்ளது. இரண்டும் அடங்கிய பிற்பாடு அழிவு மட்டுமே முடிவாக மிஞ்சுகின்றது. இவ்வாறு மேலும் சிந்திக்கின்ற போது ஒருவர் தன்னுள்ளே நீண்ட கல்வியறிவும், சிந்தனை ஆற்றல், திறன்கள் இருந்த போதும் கோபம் இவை அனைத்தையும் உடைத்து விடுகின்றது. கோபத்தை நாம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமானால் நீண்ட அனுபவ அறிவும், செயற்திறன் ஆற்றலும் முதிர்ச்சியான மனிதனை பலப்படுத்தும் உத்தியாகவுள்ளது.

"எவன் ஒருவன் சமூகத்தின் அநீதியைக் கண்டு கிளர்ந்து எழுகின்றானோ அப்போது நாம் இருவரும் நண்பர்கள்" என்றார் சேகுவாரா. எனவே யதார்த்தமான உண்மை வாழ்வு, கண்ணியமான கடமை, உழைப்பு போன்றவற்றால் அநீதிகளை தட்டிக் கேட்பவர்கள் தண்டிக்கப்படக்கூடாது. சாமானிய மனித வாழ்வில் நீதியின் முன்னே பலர் குருடர்கள் ஆகியிருக்கிறார்கள். சட்டத்தின் ஆட்சி புரிபவர்களே சட்டத்தை மீறுகின்றார்கள். வேலிகளே பயிர்களை மேச்சலிடுகின்றன. அநியாயங்கள் அதிகரிக்கும் போது கண்ணகிக்கு பாண்டிய மன்னன் மண்டியிட்டான். பசுவின் மணி ஒலிக்கு மனுநீதிச் சோழன் தன் மகனை தேர்ச் சில்லால் மிதித்தான். எனவே கோபத்திற்கு ஓர் எல்லையையும் வரம்பையும் காண முடிகிறது. தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் போது மகாபாரதப்போர் நிகழ்ந்தது எனவும் ஆன்மீக விடுதலை வேண்டி நிற்கும் ஆலயத்தினுள் புறா வியாபாரிகளை இயேசு வெளியே போகச் செய்தார் என்பதையும் பார்க்கும் போது நியாயமான கோபம் மனித வாழ்வியலில் பல தடைகளைத் தாண்டி எழுந்திருப்பதை காண முடிகின்றது.

அடுத்த சுவாமி விவேகானந்தர் உலக சமய மாநாட்டுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா, சிக்காக்கோ நகருக்கு சென்றார். சிக்காக்கோ நகருக்கு அவர் புகையிரதத்தில் சென்று கொண்டிருந்த போது புகையிரதத்தில் அவர் அருகே இருந்த ஆங்கிலேய இளைஞர்கள் அவரது தோற்றம், உடை என்பன அமெரிக்கர்களுக்கு பொருந்தாது இருந்ததை இட்டு அவரை கேலியும் கிண்டலும் செய்தனர். அவர் அமைதியாக இருந்தார். புகையிரத நிலையத்தில் இறங்கி ஆங்கில பத்திரிகையை வாங்கி படித்துக் கொண்டிருந்தார். அதனைக் கண்ட அந்த இளைஞர்கள் "உமக்கு ஆங்கிலம் தெரியும் தானே ஏன் நாங்கள் கதைக்கும் போது பேசாமல் இருந்தீர்கள்" என்றனர். அதற்கு சுவாமிகள் நான் முட்டாள்களைக் கண்டது இது முதற்தடவையல்லஎன்று பதிலளித்தார்.

சுவாமி அவர்களது அறிவையும் ஆற்றலையும் எண்ணி இளைஞர்கள் வியப்படைந்தார்கள். உண்மையில் கோபத்திற்கும் காலம் இடம் பொருந்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஒரு பெண் வைத்தியசாலை சென்று கன்னத்தைக்காட்டி தினமும் கணவர் அடிப்பதால் காயம் ஏற்பட்டுள்ளதென காட்டினார். அதனைக் கேட்ட வைத்தியர் இனிமேல் கணவர் சண்டை பிடிக்கும் போது நீ வாய்க்குள் தண்ணீரை எடுத்துக்கொள். விழுங்கவும் கூடாது துப்பவும் கூடாது. சண்டை முடிந்ததும் தண்ணீரை விழுங்கி விடு என்றார். அடுத்தவாரம் அப்பெண் வந்து கணவர் இப்போது சண்டை பிடிப்பதில்லை என்றாள். கோபத்திற்குப் பதிலாக படிப்பினையை ஏற்படுத்துபவர்களாக மாற வேண்டும்.

கோபத்தின் சக்தியை வாழ்வதற்கான தன்னம்பிக்கையாக மாற்றலாம். தற்கொலைக்கு துணியும் ஒருவர் அந்த துணிவை வாழ்வதற்குப் பயன்படுத்தினால் எவ்வளவோ முன்னேறி விடலாம்.

எனவே ஒருவன் தன்னை ஆள்வதற்கு அன்பு, பொறுமை, பட்டறவு, தோல்விகளை வெற்றியாக்கும் இயல்பு, தன்னம்பிக்கை என்பவற்றினூடாக கோபத்தினை வெற்றி கொண்டு தன்னை மேம்படுத்த முடியும்.

திரு.சு.தர்மரத்தினம்
கோட்டக்கல்வி பணிப்பாளர்,
கரைச்சி, கோட்டக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நடராஜப் பெருமானும் நவீன விஞ்ஞானமும்

**CERN நிறுவனத்தில் 18.06.2004 அன்று நடராஜர் சிலை நிறுவப்பட்டது.**

ஜெனிவாவிலுள்ள ஐரோப்பிய அணு இயற்பியல் ஆராய்ச்சிக்கூடம் (European Center for particle physics Research CERN) செப்டம்பர் 10, 2008. அன்று அங்கு இது வரை இல்லாத அளவில் முதன் முதலாக உலகின் மிகப்பெரிய அறிவியல் பரிசோதனை தொடங்கப்பட்டது.

மறுநாள் "டைம்ஸ் ஆப் இந்தியா" இந்தச் செய்தியைக் "கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவிற்கான ஆய்வு தொடங்கியது" என்று எழுதியது.

ஹாட்ரான் மோதும் பேரியந்திரம்:

CERN இல் துகள்களைத் அணுவை (Particles) துரிதப்படுத்தி வைக்கும் ராட்சத எந்திரம் (Large Hadron Collider- LHC) அமைந்துள்ளது. இது 27 கி.மீ நீளமுள்ள ஒரு வட்டமான சுரங்கம் போன்று பூமிக்கடியில் பிரான்சுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றுவளைவான இச்சுரங்கத்தில் எதிர் எதிராக புரோட்டன் கதிர்களை அதிவேகத்தில் மோத வைத்து அதன் விளைவுகள் ஆராயப்படுகின்றன.

பிரபஞ்சம் படைக்கப்பட்ட போது முதல் சில கணங்களில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவதே இந்த ஆய்வின் நோக்கம். மேலும் ஆராய்ச்சியாளர்கள், " கடவுள் அணுத்துகள்களை (Higgs Boson) ஐ ஆராயவும் இது துணைபுரியும் என்று நம்புகின்றனர்.

நடராஜரின் தலைமையில்.... உலகமே இந்த ஆராய்ச்சி பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் வேளையில் அண்ட சராசரத்தின் தலைவரான தில்லையம்பல நடராஜரின் தலைமையில் இந்த ஆராய்ச்சி நடக்கிறது என்பது மிகச் சிலர் மட்டுமே அறிந்த ஒன்று!

ஜெனிவாவில் CERN தலைமையகத்தின் முகப்பில் ஆறு அடி உயரமுள்ள ஒரு நடராஜர் சிலை உள்ளது. இந்தச் சிலையின் கீழே உள்ள செவ்வகப் பீடத்தின் முகப்பில் சம்ஸ்கிருதம் மற்றும் ஆங்கிலத்தில் கீழ்கண்டவாறு பொறிக்கப்பட்டுள்ளது.

" எங்கும் நிறைந்தவனே! நற்குணங்களின் உருவே! இந்த அண்டசராசரத்தைப் படைத்தவனே! ஆடலரசே! அந்தி நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தத் தாண்டவம் ஆடியவனே! உமக்கு நமஸ்காரம்! (மூலம்: சிவானந்தலஹறி, சுலாகம் 56, ஆதிசங்கர்) நன்றி : அணுசக்தி துறை, இந்திய அரசாங்கம்."

இந்திய அணுச்சக்தித்துறை உலகப் புகழ்பெற்ற ஓர் ஐரோப்பிய அணு ஆராய்ச்சிக் கூடத்திற்கு ஏன் இச்சிலையை அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும்? நடராஜனின் திருமேனிக்கும் நவீன இயற்பியலுக்கும் என்ன சம்பந்தம்?

1300 கோடி வருடங்களுக்கு முன் பேரொலியுடன் கூடிய மிகப்பெரு வெடிப்பு (Big Bang) உண்டாயிற்று. அதற்கு முன் பிரபஞ்சம் ஒரு மாபெரும் அடர்த்தியான, அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் மிகுந்த ஒரு சக்தித் தொகுப்பாக இருந்தது.

இத்தொகுப்பு அதிவிரைவாக விரியவும் சுருங்கவும் செய்தது. அதனால் மிகச் சூடாகவும் குளிர்ச்சியாகவும் ஆயிற்று. இப்பெரு வெடிப்புக்குப் பின் பிரபஞ்சம் விரிவடையத் தொடங்கியது. மிக அதிக வெப்பத்தில் இச்சக்தித் தொகுப்பு சிறுதுகள்களாகப் பிரியத் தொடங்கியது.

இத்துகள்களின் எண்ணிக்கையும் பன்மடங்காயிற்று. இதன் தொடர்ச்சியால் உருவாக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே பல துகள்கள் அழிந்தன. மேலும் பல உருவாயின.

வெப்பம் குறையத் தொடங்கியவுடன் இச்சிறு அணுத்துகள்கள் இணைந்து பெரியதுகள்கள் உருவாகத் தொடங்கின. பிரபஞ்சம் விரிவடையத் தொடங்கியது. இவ்வாறு பல துகள்கள் சேர்ந்து பிரபஞ்சம் உருவானது.

இன்றும் கூட இப்பிரபஞ்சத்தின் ஒரு மூலையில் சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுத்துகள்கள் சேர்ந்து பெரிய பகுதிகளாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் பல துகள்கள் அழிந்து கொண்டும் உள்ளன. இந்த நிகழ்வுகள் விண் வெளியில் மட்டுமன்றி சூரியனிலும் நடைபெறுகின்றன. இந்த நிகழ்வுகளால் உருவாகும் காஸ்மிக் கதிர்கள் (Cosmic) பூமியை வந்தடைகின்றன.

இந்த துகள்கள் நமது மூலக்கூறு பகுதியும், பிரபஞ்சத்தின் கட்டுமான கற்களும் ஆகும். தோன்றுவதும், இயங்குவதும், ஒடுங்குவதும் பிரபஞ்சத்தின் அடிப்படையாகும். இதை நம் முன்னோர் சிவனின் ஆனந்தத் தாண்டவத்தின் தத்துவ வடிவமாகக் கருதினர்.

இத் திருவுருவைக் கண்டு இன்றைய விஞ்ஞானிகள் வியக்கின்றனர். அந்த வியப்பில் மேலும் அண்ட சராசரங்களைப் பற்றி அறியத்தான் CERN - இன் முகப்பில் நடராஜர் சிலை வைக்கப்பட்டுள்ளதோ!

## நடராஜ வடிவின் உட்பொருள்

"நடராஜ வடிவம்" என்ற நூலின் ஆசிரியரும், ஸ்ரீராம கிருஷ்ண விஜயத்தின் முன்னாள் ஆசிரியருமான சுவாமி விபுலானந்தர் "ஆகம சாஸ்த்திரத்தை அறியாமல் யாரும் நடராஜரின் உடற்கூற்றுத் தத்துவத்தை உணர முடியாது" என்கிறார்.

நடராஜ வடிவம் ரிஷிகளின் தியானத்தில் தோன்றியது. இத்தாண்டவம் மிகவும் நுட்பமானது.

### நடராஜரின் வைத்த திருவடி

வலது பாதம் முயலகன் என்ற அசுரனின் மீதிருக்கும். அறியாமையைவிரட்ட வேண்டும் என்பதை இது குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூக்கிய திருவடி:**

தூக்கியிருக்கும் இடது பாதம் பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையிலான காலச்சக்கரத்திலிருந்து விடுபடும் ஆன்மாவைக் குறிக்கும்.

**உடுக்கை ஏந்திய திருக்கை**

இந்தக் கையிலுள்ள உடுக்கை எழுப்பும் சப்தம் ஆக்கலைக் குறிக்கும். முதன்முதலில் எழுந்த சப்தத்திலிருந்தே பிரபஞ்சம் வந்ததாக வேதங்கள் கூறுகின்றன. சில அறிவியல் அறிஞர்களின் கருத்துப்படி, பிரபஞ்ச ஆரம்பத்தில் பெரும் ஒலி உண்டானதாகக் கூறுகிறது.

இன்று விஞ்ஞானிகள் இந்த ஒலி அதாவது Cosmic Background Radiation ஐப் பற்றி ஆராய்கின்றனர். சில அறிஞர்கள் இதை "ஓம்" எனும் பிரணவ ஒலி என்கின்றனர். வேதங்களும், இந்த பிரணவத்திலிருந்து பிரபஞ்சம் பிறந்ததாகக் கூறும்.

**அக்னி ஏந்திய மேல் இடதுகை**

பிறை வடிவில் காணப்படும் இது அழித்தலைக் குறிக்கும். பிரபஞ்சம் தோன்றிய போது பல நுண்துகள்கள் உண்டாகி நிர்மூலமாகின்றன என்பதை இது உணர்த்துகிறது.

**வலது அபய கரம்**

இது காத்தலைக் குறிக்கிறது. பெரு வெடிப்பு மூலம் தோன்றிய நுண்துகள்கள் உடனே அழிந்திடாமல் சிறிது காலம் காக்கப்படுகின்றன. பின் அவை ஒன்றோடொன்று சேர்ந்து பெரும் துகள்களாக மாறுகின்றன. பிறகு அவையே கோள்களாகவும் உருமாறின. இப்படித் துகள்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிந்திடாமல் காப்பதை இந்தக் காக்கும் கரம் கூறுகிறது.

**இடது கரம்**

யானையின் துதிக்கை போல் இருப்பதால் இது கஜஹஸ்த முத்திரை எனப்படும். இறைவனின் நான்கு கைகளும் திசைகளைக் குறிக்கும்.

**தீஜுவாலையான திருவாசி**

நடராஜரைச் சுற்றியுள்ள திருவாசி பிர கிருதியை அதாவது எல்லாப் பொருள்களையும் குறிக்கிறது. தீஜு வாலை நம்மைச் சுற்றியிருக்கும் பிறப்பு இறப்பு மற்றும் சம்சாரச் சக்கரத்தை குறிக்கிறது. நமது கலாச்சாரம் சுழன்று கொண்டே இருக்கும் ஒரு சக்கரம் என்ற இயற்பியல் தத்துவத்துடன் இது பொருந்துகிறது.

**திருமுகம் மற்றும் சிரம்**

நடராஜரின் திருமேனி மிக வேகமான ஓர் அசைவைக் காட்டினாலும் திருமுகம் மிக அமைதியான புன்முறுவலுடன் விளங்குகிறது. இது இறைவன் பலவிதமான கோட்பாடுகளை உள்ளடக்கியவர் எனக் காட்டுகிறது.

பெருமானின் வலது செவியில் ஆண் அணியும் தோடும். இடது செவியில் பெண் அணியும் தோடும் அமைந்துள்ளன. உலகம் ஆண், பெண் (சிவ, சக்தி) கோட்பாடுகளால் ஆனது என்ற தத்துவத்தை இது வலியுறுத்துகிறது. மூன்றாவது கண் ஞானத்தையும், வளர் பிறை மற்றும் தேய்பிறையைக் குறிக்கும் சந்திரன் காலச் சக்கரத்தையும், சுழன்று வருதல் ஆக்கல் மற்றும் அழித்தலையும் குறிக்கின்றன.சிரசில் உள்ள மண்டையோடு உயிர்கள் மரணத்தை வென்று மரணமில்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவாழ்வை பெற வேண்டும் என்பதையும் காட்டுகிறது.

**பஞ்ச பூதங்கள்**

நீர், நிலம், காற்று, அக்கினி மற்றும் ஆகாசம் நடராஜ வடிவத்தின் அங்கங்களாகக் காணப்படுகின்றன. இந்த சாஸ்திரங்களின்படி, அண்ட சராசரம் இந் ஐந்தினாலேயே உருவானது.

இறைவனின் ஊன்றிய வலது பாதம் பூமியைக் குறிக்கிறது. மேலிருக்கும் இடது கையில் அக்னி, மெய்மறந்த நடனம் உருவாக்கும் காற்று, பரந்து விரிந்த ஜடா முடியின் மூலம் விளக்கப்படுகின்றது. அவரது சிரசிலிலுள்ள கங்கை. நீரையும் கையிலுள்ள டமரு , ஆகாயத்தையும் குறிக்கும். பஞ்சபூதங்களும் அவருள் அடக்கம்.

இப்பிரபஞ்சம் எப்படி இயங்குகிறது என்கிற ஆழ்ந்த கருத்து சிவதாண்டவத்தில் அடங்கியுள்ளது. இத்தாண்டவ நிலையில் மிகச் சிறிய அணுத்துகள்கள் முதல் மிகப் பெரிய கோள்கள் வரை எல்லாப் பொருள்களின் இயக்கங்களும் அடங்கியுள்ளன.

நடராஜ வடிவை நம் முன்னோர் ஒருகலைப்பொக்கிஷமாகவும், ஓர் அறிவியல் கோட்பாடாகவும் கண்டனர்.

அறிஞர்களின் பார்வையில்........ கலை வரலாற்று அறிஞரான ஆனந்த குமாரசாமி, எந்த ஒரு கலையும் மதமும் பெருமைப்படும் வகையில் அமைந்த இறைவனின் செயலை உணர்த்துவதே நடராஜ வடிவம் என்றார்.

'Tao of physics' என்னும் நூலின் ஆசிரியரும் இயற்பியல் வல்லுனருமான பிரிட்ஜாப் காப்ரா (Fritjof Capra) நவீன இயற்பியலுக்கும் கிழக்கத்திய ஆன்மிகத்திற்கும் உள்ள தொடர்பை இப்புத்தகத்தில் வெளிப்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 ல் வெளியான இந்த நூல் 25 ஆண்டுகளாக தொடர்ந்து பதிப்பிடப்பட்டு வருகிறது. உலகெங்கிலும் ஒரு கோடிக்கும் மேலாக விற்கப்பட்டுள்ளது. 23 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் காப்ரா, " நவீன இயற்பியலின் படி, ஆக்கல், அழித்தலின் தாளம் Rhythm என்பது காலங்களில் ஏற்படும் மாற்றம், பிறப்பு, இறப்பு ஆகிய மாற்றங்கள் மற்றும் எல்லாவிதமான உயிர் பொருள் சார் பில்லாத மூலக்கூறுகளின் உட்பொருளாகும். ஒவ்வொரு நுண் அணுவும் சக்தித் தாண்டவத்தின், ஆக்கல் மற்றும் அழித்தலில் முடிவில்லாத ஒரு பயணமாகச் செயல்படுகின்றது.

நவீன இயற்பியல் அறிஞர்களுக்கு சிவதாண்டவம் என்பது ஒரு நுண் அணுவின் தாண்டவமே. இந்து புராணங்களிலோ, இந்தத் தாண்டவமானது அண்ட சாராசரமே அடங்கும் ஒரு பகுதியாகக் கருதப்படும் ஆக்கல் மற்றும் அழித்தலின் ஓர் அங்கமாகும். இதுவே எல்லா வித உயிரினங்களுக்கும் அடிப்படையான ஓர் இயற்கையான சம்பவம்.

காப்ரா மேலும் கூறுகையில், "பண்டைய இந்தியக் கலைஞர்கள் இந்தத் தாண்டவத்தை வெண்கலச் சிலைகளாக உருவாக்கினார். இக்கால விஞ்ஞானிகளே, அதிநவீன சாதனங்களைக் கொண்டு இந்தத் தாண்டவத்தை நடத்துகின்றனர்.

இவ்வாறு நடராஜ வடிவம் பண்டைய புராணம், மதம் போற்றும் கலையையும் மற்றும் நவீன கால இயற்பியலையும் ஒன்றிணைக்கிறது. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர் காரல் சேகன் Carl Sagan, " பண்டைய கால இந்துக்கள் இந்த ஆக்கல், காத்தல், அழித்தல் அடங்கிய தாண்டவத்தை ஓர் இறைவடிவாகவே கண்டனர். அதையே அவர்கள் சிலையாக வடித்தனர்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மேலைநாட்டு அறிஞர்கள் நடராஜரைப் போற்றும் போது இந்தியர்கள் மட்டும் விலகியே நிற்கின்றனர். "Quantum Physicics and the Dance of Nataraja என்ற கட்டுரையில் George Kalamaras என்பவர் நம் (இந்தியர்களின்) அறியாமையைப் பற்றி எழுதியிருக்கிறார்.

" எண்ணற்ற பெருமைகளையும், வானம் போல் தெளிவையும், அனைத்திற்கும் தலைவனான, தன்னையே கடந்தவனான சிவபெருமானிடம் மாறாத பக்தி ஏற்படட்டும்" என்று சுவாமி விவேகானந்தர் பிராத்திக்கிறார்.

நடராஜப் பெருமான் நமக்கும் அப்படியே அருள வேண்டிப் பிரார்த்திப்போம் .

---

**நமது நாடு ஏழ்மையான நாடு அல்ல. நமது எண்ணங்கள் அனைத்தும் உயர்வாக இருக்க வேண்டும். அதை அடைய நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.**

**உனது கற்பனையை முதலீடாக நீ முன்வைத்தால் அது உனக்கு வாழ்க்கையில் பல வெற்றிகளைத் தேடித்தரும்.**

**ஒரு நல்ல புத்தகத்தை அறிந்து கொள்வதும் உரிமை கொள்வதும் வாழ்வின் இனிய வரமாகும். புத்தகம் தான் உங்கள் நிரந்தர நண்பனாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசோலை எப்படி பயன்படுத்துவது? ஒரு பார்வை -

தெரிந்தோ, தெரியாமலோ பெரும்பாலனவர்கள் காசோலைகளைச் சரியாக எழுதுவதில்லை. அது தகவல்களை நிரப்பும் செயற்பாடு மட்டுமல்லாமல், நீங்கள் எப்படி அந்தத் தகவல்களை நிரப்புகிறீர்கள் என்பதைப் பொறுத்து காசோலையில் பல விஷயங்கள் உள்ளன. ஏன் எப்படி? 2 காரணங்கள் உள்ளன. வெகுவிரைவில் வங்கித் துறை முழுமையாகவும் 2010-ம் ஆண்டின் சி.டி.எஸ் (CTS- Cheque Truncation System) வழிமுறைகளை பின்பற்றப் போகிறது என்பது முதல் காரணமாகும். இந்த வழிமுறையின் போது காசோலையானது, ஒரு முனையத்திலிருந்து, மற்றொரு இடத்திற்கு அனுப்பப்படுவதற்குப் பதிலாக, அந்த காசோலையை மின்னணு முறையில் ஸ்கேன் செய்து, அந்த ஸ்கேன் காப்பியை பணம் எடுக்க டெபாசிட் செய்த கிளையிலிருந்து, மற்றொரு வங்கி கிளைக்கு அனுப்புவார்கள். இதன் காரணமாக, நீங்கள் எழுதும் காசோலையில் ஒரு சிறிய தவறு இருந்தால் கூட, அந்த காசோலை ஏற்கப்படுவதில்லை. மேலும், அதே நேரத்தில் நீங்கள் அதிகபட்சமாக கேட்கும் காசோலைகளுக்கான கட்டணங்களை பெரும்பாலான வங்கிகள் கேட்கும் நிலையும் தொடங்கியுள்ளது. இது மட்டுமல்லாமல், காசோலைகளை சரியாக எழுதுவதன் மூலம் அதனால் ஏற்படும் அபாயங்களையும், மோசடிகளையும் தவிர்க்க முடியும். பணம்-சாராத காரணங்களுக்காக ஏற்கப்படாமல் பவுன்ஸ் ஆன காசோலைகளுக்காக, வங்கிகள் சில நூறு ரூபாய்களை அபராதமாக விதிப்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, நீங்கள் காசோலைகளை எழுதும் வேளைகளில் மனதில் கொள்ள வேண்டிய சில விஷயங்களைப் பற்றி இங்கு குறிப்பிட்டுள்ளோம். இவற்றைத் தவறாமல் பின்பற்றி சில நூறு ரூபாய்களை சேமித்துக் கொள்ளுங்கள்.

இடது புறமிருந்து வலதுப்புறம் இந்த முறையில் தான் காசோலையை எழுத வேண்டும் என்றில்லாவிட்டாலும், நீங்கள் இடது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறமிருந்து வலப்புறத்திற்கு எழுதும் போது காசோலையை எழுதும் வேலைக்கு அது உதவியாக இருக்கும். மேலும், அது காசோலையில் உள்ள அனைத்து பகுதிகளையும் சரியாக நிரப்புவதற்கு ஒரு திட்டமிட்ட வழிமுறையை ஏற்படுத்தும். அங்கொன்றும் இங்கொன்றுமாக காசோலையின் தகவல்களை நீங்கள் நிரப்பும் வேளைகளில், ஏதாவதொரு இடத்தை நீங்கள் மறந்து விட அல்லது விட்டு விட நேரலாம். இதன் காரணமாக, பணம்-சாராத காரணங்களுக்காக காசோலைகள் பவுன்ஸ் ஆகும் சூழலை எதிர்கொள்ள நேரிடலாம்.

திகதி - காசோலையில் நீங்கள் திகதியைச் சேர்ந்தது என்று குறிப்பிடப்படா விட்டால், அந்த காசோலை ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. காசோலைகளில் திகதிகளை எழுதாமல் மறப்பவர்களின் எண்ணிக்கையைக் கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். எனவே, உங்களுடைய காசோலை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று நினைத்தால், அப்போதைய திகதியை உடனடியாக குறிப்பிடவும். சில நாட்கள் கழித்து எடுக்கும் வகையில் காசோலையைத் தர நினைத்தால், சரியான திகதியைக் குறிப்பிடுங்கள். போதிய அளவு பணம் இல்லாத நேரங்களில், முந்தைய திகதியை தவறுதலாக குறிப்பிட்டிருந்தால் அந்த காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல் பவுன்ஸ் ஆகலாம்.

இடைவெளிகள் - மக்களுக்கு இடையில் இடைவெளிகளை விடுவது நல்லது. ஆனால், காசோலைகளில் இவ்வாறு இடைவெளிகளை விடுவது மோசடி அபாயங்களை எதிர்கொள்ளும் நிலையும் மற்றும் காசோலைகள் சேதமடையும் நிலையும் உருவாகலாம். காசோலையில் 'Payee' என்று எழுதப்பட்டுள்ள இடத்தைத் தொடர்ந்த கோடிட்ட இடத்தில், நீங்கள் யாருக்கு கொடுக்க நினைக்கிறீர்களோ அவருடைய பெயரை அல்லது நிறுவனத்தின் பெயரை எழுதவும்.

தாங்கிக் செல்பவர் (Bearer)' - ஜாக்கிரதை நீங்கள் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபருக்கு காசோலையை வழங்குகிறீர்கள் என்றால் பெயரை சரியாக எழுதுங்கள். குறிப்பிட்டு சொல்லும் படியாக ஒரு நபருக்கு நீங்கள் காசோலையை கொடுத்தால், அந்த காசோலையில் அச்சிடப்பட்டிருக்கும் 'Bearer' என்ற வார்த்தையை அடித்து விடவும். இந்த 'Bearer' என்ற வார்த்தை வழக்கமாக காசோலையின் வலது பக்கத்தில் இருக்கும், சில காசோலைகளில் திகதிக்கு கீழாக இருக்கும். 'Bearer' என்ற வார்த்தைக்கு, இந்த காசோலையை கொண்டு வரும் நபர் யாராக இருந்தாலும், அவருக்கு காசோலையை கொடுக்கலாம் என்று பொருளாகும். எனவே, நீங்கள் 'Bearer' என்ற வார்த்தையை அடிக்காமல் விட்டு விட்டால், மோசடி செய்வதற்கான வாய்ப்பை வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள் என்று அர்த்தமாகும்

குறுக்கு கோடிடுதல் - நீங்கள் எழுதும் காசோலை எந்தவொரு வங்கியின் கவுண்டரிலும் கொடுத்து பணமாக மாற்றத் தக்கதாக இருக்க வேண்டும் என்று நினைத்தால், அதில் குறுக்கு கோடிட வேண்டாம். குறுக்கு கோடிடுதல் என்ற பெயரில் இரண்டு கோடுகளை காசோலையின் மேல் வலது மூலையில் வரைவதற்கு "கணக்கில் வரவு வை (Account Payee)' என்று பொருளாகும். இவ்வாறு குறுக்கு கோடிடும் போது, அந்த காசோலையில் உள்ளவருடைய வங்கிக் கணக்கில் மட்டுமே பணம் வரவு வைக்கப்படும் என்பதையும், அதை வங்கியின் கவுன்டரில் கொடுத்து பணமாக பெற முடியாது என்பதையும் நினைவில் கொள்ளவும்

பெட்டி (Box) - காசோலையில் எழுதப்பட வேண்டிய பணத்தின் அளவை எண்ணில் எழுதும் பொருட்டாக கொடுக்கப்பட்டுள்ள பெட்டியில் சரியாக எழுதவும். அதாவது, Rs999, என்று எழுதுவதற்குப் பதிலாக Rs.999/- என்று எழுதுங்கள். /- என்ற குறியீட்டை தொகையின் முடிவில் குறிப்பிடும் போது, அந்த எண்ணிற்குப் பின்னர் மற்றொரு இலக்கத்தை எழுத முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்கள் – தொகையை எழுத வேண்டி வரும் போது, இடைவெளிகள் எதையும் விட வேண்டாம். உதாரணமாக, Rs.5,000 என்று எழுதும் போது 5000 என்ற எண்ணிற்கு முன்னதாக இடைவெளி விட வேண்டாம். இல்லாவிடில், அதற்கு முன்னதாக யாராவது ஒருவர் 3 என்ற எண்ணை எழுதி, 35000 ரூபாயாக மாற்றி விடலாம். இதே விஷயம், தொகையை எழுத்தில் எழுதும் போதும் நடக்கும் வாய்ப்புகள் உண்டு. ஐந்து ஆயிரம் என்று எழுதியிருப்பதை, எளிதில் முப்பத்து ஐந்து ஆயிரமாக மாற்றி விட முடியும். எனவே, தொகையை எண்ணிலோ அல்லது எழுத்திலோ எழுதும் போது, முன்னதாக இடைவெளி விட வேண்டாம்.

கையொப்பம் – மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் அனைத்தையும் நிரப்பிய பின்னர் மட்டுமே, உங்களுடைய கையொப்பத்தை இடவும். அதே போல முன்னோக்கி செல்லவும் மறந்து விட வேண்டாம் காசோலைகளில் கையொப்பமிட அடர்த்தியான மையை கொண்டுள்ள பேனாவைப் பயன்படுத்தவும். காசோலையில் அச்சிடப்பட்டிருக்கும் உங்களுடைய பெயருக்கு மேல், கையொப்பமிடவும். மேலும், எக்காரணத்தைக் கொண்டும் உங்களுடைய காசோலைப் புத்தகத்தில் உள்ள வெற்றுக் காசோலைகளில் கையொப்பங்களை போட்டு வைக்க வேண்டாம். அந்த காசோலைப் புத்தகம் தொலைந்து போனால், அடுத்து என்ன நடக்கும் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

---

**ஆரவாரம் நிறைந்த வாழ்க்கை என்பது அர்த்தமற்ற வாழ்க்கையாகும். நல்ல அறிவு படைத்தோரால் வெறுக்கத்தக்க வாழ்க்கையுமாகும்.**

**தோல்வி என்பது ஒவ்வொருவர் வாழ்விலும் வரத்தான் செய்யும். இன்பம் என்றால் துன்பமும் உண்டு என்பதைப் போலத்தான் தோல்வியும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்புவோம்!

நச்சுத்தன்மையற்ற விவசாயத்தை மேற்கொள்வதற்கும் வீட்டுத்தோட்டங்களை செய்வதற்கும் இன்று எம்மத்தியில் அதிக அக்கறை காணப்படுகிறது. ஆர்வமும் உள்ளது. எனினும் அதனை எவ்வாறு செய்வது என்பது எம்மில் பலருக்குள்ள கேள்வி. அந்தக் கேள்விக்கான பதிலை வழங்குவதே இவ்வாக்கத்தின் நோக்கம்

**புதிய வகை சிறந்த பயிற்றம் விதைகள்**

பயிற்றங்காய் என்பது எமது உணவில் அடிக்கடி சேர்க்கப்படும் ஒரு மரக்கறியாகும். வளர்ந்தோர், சிறியோர் என அனைவரும் விரும்பி உண்ணுவதனால் பயிற்றங்காய்க்கு சந்தையில் நல்ல வரவேற்புள்ளது.

Long beans இலங்கையில் ஈர, மத்திய மற்றும் அயன வலயங்களில் மிக பிரபலமான பயிற்றங்காய் இலங்கையில் 7495 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர் செய்ப்படுவதாக விவசாயத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதனூடாக வருடாந்தம் 71,000 மெற்றிக்தொன் வரை பயிற்றங்காய் அறுவடை செய்யப்படுகிறது.

எனினும் விவசாயிகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் பயிற்றங்காயை பயிரிடுபவர்களுக்கும் காணப்படும் பெரும் பிரச்சினை நோய்களின் தாக்கங்களுக்குள்ளாகாத நல்ல இன பயிற்றங்காய் இனத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதாகும். உண்மை தான். பயிற்றங்காய் விரைவில் நோய்வாய்ப்படக்கூடிய ஒரு பயிர்தான். குறிப்பாக பயிற்றங்காய் கொடியில் அடியில் அழுகும் நோய்க்குள்ளாகிறது. இதனால் வருடாந்தம் 10- 40 வீத உற்பத்தி பயனின்றி போகிறது. இதற்கு பேராதனை, கன்னோருவ பிரதேசத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் தீர்வொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிந்துள்ளது. சிறந்த, புதிய பயிற்றங்காய் வகையை அறிமுகம் செய்வதே அத்திட்டமாகும். இந்த பயிற்றம் வகைக்கு "கன்னோருவ 9 பயிற்றை வகை" என பெயரிடப்பட்டுள்ளது. இப்புதிய வகை பயிற்றங்காயானது, அதிக விளைச்சலை தருவதுடன் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பயிரிடக்கூடியது ஆகும். அத்துடன் கொடியின் வேர் பகுதியில் அழுகும் நோயை தாக்குப்பிடிக்கும் தன்மைக்கொண்டதாக இப்புதிய வகை காணப்படுகிறது.

மிளகாய்

எமது அன்றாட உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளப்படும் மிளகாய் எமது உணவில் தவிர்க்க முடியாத ஒரு மரக்கறியாகப் பார்க்கப்படுகிறது. இலங்கையில் வருடாந்தம் 15,000 ஹெக்டேயரில் மிளகாய் பயிரிடப்படுகிறது. இதனூடாக வருடாந்தம் 12,000 மெற்றிக் தொன் செத்தல் மிளகாய் அறுவடை செய்யப்படுகிறது.

Chili மிளகாய் அதிக இலாபத்தை தரக்கூடிய ஒரு பயிராகும். எனினும் மிளகாய் மிக விரைவில் நோய்த் தொற்றுக்குள்ளாகும் ஒரு தாவரமாகும். மிளகாய் பயிர்கள் விரைவில் பூச்சித் தாக்கத்திற்குள்ளாகின்றமையினால் விளைச்சல் குறைவாகவே கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறு விளைச்சல் குறைகின்றமையினால் விவசாயிகள் இறக்குமதி செய்யப்பட்ட புதிய மிளகாய் விதைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக பணத்தை விரயம் செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகரித்து இலாபம் குறைகிறது. இதற்கு தீர்வாக எ1 மிளகாய் விதை 1 என்று புதிய வகை மிளகாய் கலப்பினம் 1 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய கலப்பின மிளகாயானது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சூழல் தன்மைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய ஒரே கலப்பின மிளகாயினமாகும்.
மிளகாய் இலை சுருள் நோயை தாக்குப்பிடித்தல்
இறக்குமதி செய்யப்படும் மிளகாய் விதையை விடவும் அதிக காரம்
இறக்குமதி செய்யப்படும் கலப்பினத்தை விடவும் அதிக விளைச்சல் (ஒரு ஹெக்டேயருக்கு 40 மெற்றிக் தொன்)
செத்தல் மிளகாய் உற்பத்திக்கான வாய்ப்பு அதிகரித்தல்
விதைகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவு குறைதல் (ஒரு கிலோ 25,000)

**நோய் கட்டுப்பாட்டுக்கான புதிய வழிமுறைகள்**

நெற்கதிர் உறை கருகல் நோய்க்கான பூச்சுக்கொல்லியனால் நச்சுத் தன்மையற்ற விவசாயம் என்பது இன்று எமது தேசியத் தேவையாகும். நச்சுத்தன்மையற்ற விவசாயத்தைக் கடைப்பிடிக்காமல் எமது நாட்டின் எதிர்காலமே கேள்விக்குறியாகும் அபாயம் காணப்படுகிறது. குறிப்பாக எமது நாட்டின் பிரதான விளைச்சல் பொருளான நெல் பயிரிடல் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவோம். அதற்கு பல காரணங்கள் உள்ளன. இலங்கையின் உள்ள பெரும்பாலானர்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சாதமாகும். இலங்கையின் கிராமிய பொருளாதாரம் நெல்லுற்பத்தியில் தங்கியுள்ளது. அதேபோல் கடந்த காலங்களில் அதிக நச்சுத்தன்மையை நெல்லுற்பத்திக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும். அதன் பிரதிபலன் தான் இன்று இலங்கையின் முழு ரஜரட்டவிலுமே பரவியுள்ள காரணம் அறியப்படாத சிறுநீரக நோயாகும்.

இந்நிலைமையை கவனத்திற்கொண்டு விவசாயிகளைப் போன்றே நாட்டு மக்களையும் பாதுகாப்பது இன்றைய தேசிய தேவையாகும். இதனால் நெற் பயிர்ச்செய்கையானது நச்சுப் பாவனையின்றி செய்யவேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்பயிருக்கு ஏற்படும் நோய்களில் "நெல்லிலை சுருட்டல் நோய்" பிரதான இடம் வகிக்கிறது. இலைக்கருகல் நோய் பூஞ்சணத் தொற்றினால் ஏற்படுகிறது. இதனால் இளம்பயிர்கள் மட்டுமல்ல முற்றி அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்பயிர்களும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. இதனால் உற்பத்தி வெகுவாகக் குறைவடைகிறது.

இலைக்கருகல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவதனூடாக சிறந்த பலன் கிடைக்கும் என்று தற்போது கண்டறியப்பட்டுள்ளது. நெற்பயிரின் அண்மையில் வாழும் இரு வகை பற்றீரியாக்களின் ஊடாக உருவாக்கப்படும் உயிரியல் பூச்சிக்கொல்லியை பயன்படுத்துவதனூடாக இலைக் கருகல் நோயை நூற்றுக்கு 36 - 69% வரை கட்டுப்படுத்த முடியும்.

## அலங்கார மீன் உற்பத்தி

அலங்கார மீன்களை உற்பத்தி செய்வது பொருளாதார ரீதியாகவும் வீடுகளில் மிகவும் பிரபலமடைந்ததுமான ஒரு தொழிலாகும். தற்போது விரைவில் வளர்ச்சியடையும், இலாபமீட்டக்கூடிய கைத்தொழிலாகவும் இதனைக் கூறலாம்.

maxresdefault வருமானத்தை பெற்றுத்தரும் கைத்தொழிலாக அலங்கார மீன் உற்பத்தி காணப்பட்டாலும் கூட " மைக்ரோ பற்றீரியம்" எனப்படும் நோயினால் அம்மீன்கள் தாக்கப்படுகின்றமையினால் உற்பத்தியாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். வீடுகளிலும் அலங்கார மீன்களை வளர்ப்போரும் இந்நிலைக்கு முகங்கொடுக்கின்றனர். "மைக்ரோ பற்றீரியம்" நோய்க்கும் தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. அதற்கு கீழ் வரும் முறைகளை பின்பற்றலாம்.

- குளோரினிடப்பட்டு தூய்மையாக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துதல்
- மீன்தாங்கிகளுக்கு வடிகலன்கள் பயன்படுத்துதல்
- சுகாதாரமான முறையில் தாங்கிகளைப் பயன்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேதனக் கழிவுகள் கொண்டு மண்ணை வளமாக்குவோம்

இலங்கை மிக வேகமாக நகரமயமாகி வருகிறது. இதனால் நாம் முகங்கொடுக்கும் மிகப் பாரிய பிரச்சினை நகரமயமாக்கப்பட்ட பிரதேசங்களில் அதிகரிக்கும் கனமான கழிவுகள். அக்கழிவுகளை முறையாக ஒழிப்பதற்கு பொருத்தமான இடங்கள் இல்லாமையினால் இன்று மிகவும் அபாயகரமான பிரச்சினைகளுக்கு நாம் முகங்கொடுத்து வருகிறோம்.

இது இவ்வாறிருக்கு இரசாயன பசளைப் பாவனையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு உடனடி தீர்வை பெற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். பாரிய சவாலாக உள்ள இரசாயனப் பசளையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் வருடாந்தம் பில்லியன் கணக்கான பணத்தைச் செலவிடுகிறது. இவற்றை விளைச்சல் நிலங்களில் பயன்படுத்தும் போது பாரிய பிரச்சினைக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கின்றது. மேற்கூறப்பட்ட இரு சவால்களையும் சமாளித்து வெற்றி காண்பதற்கு அக்கழிவுகளில் சேதனப்பசளையை தயாரிப்பதே சிறந்த முறையாகும். கொம்போஸ்ட் தயாரிப்பும் பாவனையும் தற்போது தேசிய கொள்கையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்த விடயமாகும்.

garbage அதற்கமைய பல மாகாணசபைகளினால் கொம்போஸ்ட் தயாரிக்கும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனூடாக சேதன பசளை தயாரிப்பு மற்றும் பயன்பாடு அதிகரித்துள்ளது.
அசேதன பசளை பாவனையினால் மண்ணில் ஏற்பட்டுள்ள பாதிப்பு கொம்போஸ்ட் பாவனையினால் கட்டுப்படுத்தப்படல்
கழிவுகளினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைத்தல் என்பன சேதனப் பசளையாய் கிடைக்கும் பயனாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னையுடன் முந்திரிகை நடுவோமா?

தெங்கும், முந்திரிகையும் கிராமிய வாழ்க்கையில் மட்டுமல்ல நகர வாழ்க்கையுடனும் அதிக பிணைப்பபைக் கொண்டது. எனினும் கிராமங்களில் தென்னையும் முந்திரிகையும் ஒன்றாக வளரக்கூடிய பயிர்களாகவே கருதப்படுகின்றன. இதனால் தான் தென்னைத் தோட்டங்களில் முந்திரிகை மரங்கள் வளர்க்கப்பட்டன.

Casue nuts இதுவே வர்த்தக ரீதியாகப் பார்க்கும் போது தெங்கும் மர முந்திரிகையும் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொடுக்கும் பயிர்கள் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

தென்னையையும் மர முந்திரிகையையும் ஒன்றாக வளர்ப்பதனூடாக அதிக இலாபம் கிடைக்கிறது.

போஷாக்கை உறிஞ்சி வளரும் தன்னையுடன் ஒப்பிடுகையில் மர முந்திரிகை தென்னைக்கு சவாலாக அமைவதில்லை.

தெங்குடன் ஊடு பயிராக மர முந்திரிகையை நடும்போது மண்ணின் வளம் பாதிக்கப்படுவதில்லை.

இரு பயிர்களிலும் அதிக அறுவடையை பெற்றுக்கொள்வதற்கு விவசாய விஞ்ஞான உத்திகளை பயன்படுத்த வேண்டும்.

நன்கு வளர்ச்சியுற்ற தெங்குத் தோட்டங்களில் ஊடு பயிராக மரமுந்திரிகைகளை அறிமுகம் செய்யும் போது தெங்குப் பயிர்களுக்கு 30 – 35 வயதாகியிருந்தால் சிறந்தது.

தென்னை மற்றும் மர முந்திரிகை என்பவற்றுக்கு பரிந்துரைக்கப்பட்ட பசளைகளை பயன்படுத் வேண்டும். இதனூடாக இரு பயிரிலும் சிறந்த அறுவடையை பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட தொன்மைமிகு சிவாலயங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பல சிவாலயங்கள் இருந்ததற்கான தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன. சைவ சமயமும் சிவ வழிபாடும் சிறப்புற்று விளங்கியுள்ளது. இலங்கை முழுவதும் சிவவழிபாடு நிலவியதும் விஜயனின் வருகைக்கு முன்னரே பஞ்ச ஈஸ்வரங்கள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரீஸ்வரம் சிவாலயத்தை இங்கு நாம் நோக்குகின்ற போது இலங்கையில் காணப்படும் சப்த ஈச்சரங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சிவாலய இடிபாடுகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சேர் வில்லியம் துனவனம் அவர்களால் 1882 இல் கண்டு பிடிக்கப்பட்டது. அருகிலுள்ள குளமும் அவரால் அடையாளப்படுத்தப்பட்டது. இங்கு காணப்பட்ட ஆவுடையார் சதுர வடிவில் காணப்படுவது சிறப்பம்சமாகும். இச்சிவாலயத்தில் சதுர வடிவ ஆவுடையாரில் லிங்கம் வைத்து வழிபடப்பட்டதை அறிய முடிகிறது. இவ்வாலயத்தில் பிரதான விக்கிரகம் சிவலிங்கமாகும்.

ஆவுடையார் சதுர வடிவில் அமைப்பது மிக தொன்மையானது. இதனால் உருத்திரபுரம் சிவாலயம் சோழர்காலம் அல்லது அதற்கு முந்தியதாக இருக்கலாம் என்பது கருத்தாக உள்ளது. உருத்திரபுரத்தில் தொன்மையான சிவாலயம் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. இவ்வாறு அடையாளப்படுத்திய ஆலயத்தில் நீண்ட காலத்தின் பின்னரே திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. 19 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அழிவுற்ற சிவாலயம் மீளமைக்கும் பணியானது 1949 இல் உருத்திபுரம் குடியேற்றத் திட்டத்துடனேயே ஆரம்பமாகியது. திரு.க.வேலாயுத சுவாமி அவர்களது முயற்சியாலும் கலைப்புலவர், நவரத்தினம், டாக்டர் குருசாமி, காணி விவசாய அமைச்சு செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ம.சிறிகாந்தா, வண.வடிவேற் சுவாமிகள் இவர்களது அயராத முயற்சியால் ஆலயத் திருப்பணிகள் 1955 ஆரம்பமாகின. 1958 முதலாவது குடமுழுக்கு மேற்கொள்ளப்பட்டது. ஆலயம் படிப்படியாக மக்களின் ஆதரவுடன் காலத்துக்கு காலம் புனரமைக்கப்பட்டு பெருங்கோயிலாக மாறி வருகின்றது.

நித்திய, நைமித்திய பூசைகள், விசேட உற்சவங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. காலத்துக்குக் காலம் இடப்பெயர்வுகளை சந்தித்தாலும் உள்ளூர் மற்றும் புலம்பெயர் மக்களின் முயற்சியால் ஆலயம் சிறப்புற்று வருவதை காண முடிகிறது.

அடுத்து பூநகரி பகுதியில் இருக்கக் கூடிய கௌதாரிமுனை மண்ணித்தலை சிவன் ஆலயம், இவ்வாலயம் சங்குப்பிட்டி பூநகரி வீதியில் ஆலடிச் சந்தியில் இருந்து 7km தூரத்தில்ல அமைந்துள்ளது. வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலயங்களில் ஓரளவு ஆலயத்தின் கலை மரபை அறியக் கூடிய பழைய ஆலயமாகக் காணப்படுகிறது. கோறல்கல், செங்கல் சுதை என்பன கொண்டு இவ்வாலயம் 21 அடி நீளத்தையும் 12 1/2 அடி அகலத்தையும் மூன்று தளங்களைக் கொண்ட சிறிய ஆலயமாகும். இதன் தேவ கோஸ்டங்கள், கர்ணக் கூடுகள், குதம், சாலை, பஞ்சரம் என்பன அப்படியே முற்பட்ட சோழக் கலை மரபை ஒத்ததாக உள்ளது. இலங்கை தொல்லியற் திணைக்களம் இலங்கையின் மரபுரிமை சின்னமாக பிரகடனப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இன்னும் பல சிவாலயங்களின் சிதைவுகள் காணப் படுவதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். கிளிநொச்சி தொல்லியற் சிவாலயங்கள் பற்றிய முழு ஆய்வுகள், தரவுகள், சிவாலயங்களின் மீள் எழுச்சி என்பன இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும்.

நன்றி
கிளிநொச்சி மாவட்ட தொன்மையின் மூலங்கள்,
உருத்திரபுரம் சிவாலய கும்பாபிசேகமலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரம் கிராமம்

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி என நான்கு செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியது. கரைச்சிப் பிரதேச செயலர் பிரதேசத்திலேயே உருத்திரபுரம் பகுதி அமைந்துள்ளது. இரணைமடுக் குளத்தின் கீழான முதலாவது விவசாயக் குடியேற்றத் திட்டமாக 1936 கணேசபுரம் குடியேற்ற திட்டம் உருவாகியது. அடுத்து குளத்தின் இடது கரை வாய்க்கால் அமைக்கப்பட்டு 1949 இல் பரந்தன் புதிய குடியேற்றத் திட்டம் எனும் பெயரில் உருத்திரபுரம் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது 9ஆம் 10ஆம் வாய்க்கால்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டது. இங்கு குடியேற்றும் குடும்பங்கள் யாவும் யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டு உருத்திரபுரம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் மிக விரைவாக வளர்ச்சியந்ததைத் தொடர்ந்து உருத்திரபுரத்தின் கிழக்குப் பகுதி காடுகள் வெட்டி 8ஆம் வாய்க்கால் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது. இது உருத்திரபுரம் கிழக்கு குடியேற்றத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இது இரணைமடுக் குளத்தின் மூன்றாவது குடியேற்றத் திட்டமாகும்.

காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக்கலவரங்களால் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் கிளிநொச்சியை நோக்கி வரத் தொடங்கினர். இதனால் பல கிராமங்கள் உருவாகின. உருத்திரபுரத்தைச் சூழ்ந்திருந்த காடுகள் துப்புரவு செய்து உருத்திரபுரம் மேற்குப் பகுதியில் சிவநகர் 1ஆம் 2ஆம் திட்டம் என விரிவாக்கப்பட்டது. இவர்களுக்கு 1 ஏக்கர் மேட்டுக்காணி புதுமுறிப்புக் குளத்தின் கீழ் 1 1/2 ஏக்கர் வயல் நிலம் வழங்கப்பட்டது. அடுத்து சிவன் சோலை சோலைநகர் பகுதியிலும் மக்கள் குடியேறினர்.

உருத்திரபுரத்தின் வடக்காக இருந்த மேய்ச்சல் தரவை என அடையாளப்படுத்தப்பட்ட எள்ளுக்காட்டுப் பகுதியிலும் மக்கள் குடியேறினர். தற்போது சக்திபுரம் என அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதுமுறிப்பிலும் மக்கள் குடியேறினர்**

உருத்திரபுரத்தின் மத்தியில் பொதுச்சேவை நிலையங்கள் அமைக்கப்பட்ட மீதி இடங்களில் 8 ஆம், 10 ஆம் வாய்க்கால் குடியேற்றவாசிகளின் பிள்ளைகள் இரத்தினம்பண்ணை, ஆனந்தம் பண்ணை என்ற பெயரில் குடியிருப்புக்களை உருவாக்கினர்.

இவ்வாறு பரந்து விரிந்த ஒரு பிரதேசமாக உருத்திரபுரம் திகழ்கின்றது.

முன்னர் உருத்திரபுரம் கிராம சேவையாளர் முதன் முதல் நியமனம் பெற்ற போது ஒருவரின் கீழேயே உருத்திரபுரம் மேற்கு, கிழக்கு, புதுமுறிப்பு, சிவநகர், நீவில் பகுதிகள் நிர்வகிக்கப்பட்டன.

தற்போது தனித்தனி கிராம அலுவலர் பிரிவுகளாக இயங்குகின்றன.

**உருத்திரபுரத்தின் இட அமைவு:**

உருத்திரபுரம் சம தரையாகவும் வண்டல் மண் செறிந்த மணற் தன்மையுள்ள மண் வளத்தையுடையது. A-9 வீதியின் மேற்குப்புறமாக கரடிப்போக்கு சந்தியில் இருந்து 4.5 km அப்பால் உள்ள அழகிய பிரதேசமே உருத்திரபுரமாகும்.

**பாடசாலைகள்:**

ஆரம்பத்தில் உருத்திரபுரத்தில் மகாவித்தியாலயம் மட்டுமே இருந்தது. கிளிநொச்சியில் உள்ள உயர்தர வகுப்புக்களைக் கொண்ட விஞ்ஞான பீடம், விவசாய பீடம், விளையாட்டு மைதானம் கொண்ட ஒரே ஒரு பாடசாலை இதுவாகும். இது போன்ற பாடசாலை பளையிலும் அமைக்கப்பட்டது. 1951 இல் இருந்து நிரந்தரக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கிய உருத்திரபுரம் மகாவித்தியாலயம். அன்றில் இருந்து இன்று வரை கல்வி மான்களையும், பண்பு மிக்க பெருமக்களையும் உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி பிரதேசத்தின் முதல் பாடசாலைகளில் ஒன்றாகவும், புகழ் பூத்த அதிபர்கள் பலரை கொண்டதாகவும் இப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வரை விளங்குவது குறிப்பிடத்தக்கது.

மேலும் மக்கள் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. கிளி/ புனித பற்றிமா றோ.க.வித்தியாலயம், கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளி/ சிவநகர் அ.த.க. பாடசாலை, கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பனவாகும். இப்பிரதேச மாணவர் கல்வி வளர்ச்சியிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், விளையாட்டுக்களிலும் சாதனை புரிவது மிகவும் பாராட்டப்பட வேண்டியவை.

**வரலாற்றுச் சிறப்பும், ஆலயங்களும்:**

கிளிநொச்சி மக்கள் குடியேறுவதற்கு முன்னரே நாகரிகம் மிக்க குடியிருப்புக்கள் நிலவியமைக்கு சான்றுகள் காணப்படுகின்றன. பூநகரி, குஞ்சுப்பரந்தன், கண்டாவளை, முரசுமோட்டை, உருத்திரபுரம், இரணைமடு என்பன வரலாற்று சான்றுகளை கொண்டுள்ளன. உருத்திரபுரத்தில் காணப்பட்ட சிவாலய இடிபாடுகள் கற்றூண்கள் சதுர வடிவ ஆவுடையார் போன்ற மேலும் பல வரலாற்று சின்னங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள ஆலயங்களை நோக்கும் போது முக்கியமாக சோழர் உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம், வரலாற்றுப் பெருமை மிக்க பொறிக்கடவை கண்ணகை அம்மன் கோயில், மாணிக்கப்பிள்ளையார் கோயில், 8 ஆம் வாய்க்கால் சந்தி விநாயகர் ஆலயம், பாலையடி விநாயகர் ஆலயம், எள்ளுக்காடு முருகன் ஆலயம், 8 ஆம் வாய்க்கால் சந்தி மாதா குகைக் கோவில், புனித பற்றிமா தேவாலயம், சிவநகர் புனித மாதா கோவில், புதுமுறிப்பு கற்பக விநாயகர் கோவில் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் சிறிய ஆலயங்களை மக்கள் குல தெய்வமாக அமைத்து வழிபடுவது சிறப்பு மிக்கது.

**பொது அமைப்புக்கள்:**

உருத்திரபுரம் பொது அமைப்புகள் தொண்டு அமைப்புகள் அதிகமுள்ள பிரதேசமாகும்.

இங்கு காந்தியவாதி திரு.சி.க வேலாயுதபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரால் உருவாக்கப்பட்ட அகில இலங்கை காந்திசேவா சங்கம் 1952 முதல் இன்று வரை சிறப்பாக இயங்கி வருகின்றது. காந்தீய சிந்தனைகளைப் பரப்புதல், தொழிற் பயிற்சிகள் வழங்குதல், உடன் ஆதரவற்ற சிறுவர்களுக்கு சிறுவர் இல்லம் மூலம் தங்குமிட வசதியும் கல்வி வழங்குதல் நடைபெற்று வருகின்றன.

**மகாதேவா ஆச்சிரமம்:**

அடுத்து மகாதேவா ஆச்சிரமம் ஆன்மீக ரீதியாக மக்களை வழிப்படுத்தும் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. அறநெறிக்கல்வி, சைவ சமய பண்பாடுகளைப் பேணுதல், பண்ணிசை, வகுப்பின் குரு பூசைகளை நடத்துதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

**குருகுலம்:**

1964 ஆண்டு (அப்புஜீ ) வே.கதிரவேலு அவர்கள் குருகுலத்தை ஆரம்பித்தார். ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைத்து உணவுடன் கல்வி, நல்லொழுக்கம், சமய கலாசாரம், சுயதொழில் பயற்சிகள் போன்றவற்றை வழங்கினார். இன்றும் குருகுல வளாகத்திலும், புதுமுறிப்பிலும், மகா தேவ சுவாமிகள் சிறுவர் இல்லம் என்ற பெயரில் பிள்ளைகளுக்கு குருகுலத்தின் சிந்தனைகள் நிறைவேற்றப்படுகின்றது.

**ஆரோபணம் இளைஞர் இல்லம் கல்வி தொழில் பயிற்சி:**

ஆதரவற்ற பிள்ளைகளுக்கு ஆதரவு இல்லம் ஆரம்பிக்கப்பட்டு பிள்ளைகள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதனை கத்தோலிக்க துறவிகள் செயற்படுத்தி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

**பற்றிமா பெண்கள் விடுதி:**

புனித பற்றிமா ஆலயத்தில் அருட்சகோதரிகளால் பெண்கள் விடுதி அமைத்து பல இடங்களில் இருந்தும் கிறிஸ்தவ பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் பாதுகாப்பாக சிறந்த கல்வி கற்று வருகின்றனர்.

இவ்வாறான தொண்டு நிறுவனங்கள் அளப்பரும் பணியாற்றி வருவது உருத்திரபுரத்தின் மண்ணின் பெருமையாகும். உருத்திரபுரீஸ்வரரின் அருள் என்றே கூற வேண்டும்.

**விளையாட்டுக்கழகங்கள்:**

சந்திரோதயா விளையாட்டுக் கழகம், உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம், உழவர் ஒன்றியம், விளையாட்டுக் கழகம் என்பன இப்பிரதேச இளைஞர் யுவதிகள் ஆளுமை விருத்தியிலும், பண்பு விருத்தியிலும் சாதனை வீரர்களை உருவாக்குவதிலும் முன்னிற்கின்றன. விளையாட்டோடு மட்டுமல்லாது எல்லா கழகங்களும், வாசிக சாலைகளையும், சனசமூக நிலையங்களையும் அமைத்து இளைஞர்களை நல்வழிப்படுத்துவதை காண முடியும். சிறந்த விளையாட்டு அணிகளைக் காண முடியும். தேசிய ரீதியலான விளையாட்டு வீரர்களும் உருவாக இக்கழகங்களே காரணமாகும். பல கிராமிய விளையாட்டுக்கள் இன்றும் இடம்பெற்று வருகின்றது.

**மக்களின் வாழ்வும், பண்பாடும்:**

பிரதானமாக விவசாயமே முக்கியமான தொழிலாக இருப்பினும் பல்வேறு தொழில்கள் வர்த்தகம் போன்றவற்றிலும் சிறப்புற்று காணப்படுகின்றனர். இப்பிரதேச இடப்பெயர்வு காரணமாக பல்வேறு வகையான இழப்புக்களை சந்தித்த போதும் மீள் எழுவதில் ஆர்வமாக முன்னேறி வருகின்றனர். புலம்பெயர் உறவுகளின் பங்களிப்பு மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றி வருகின்றது. பொது அமைப்புகள், ஆலயங்கள், வறிய மாணவர் கல்வி வசதி, புலமைப் பரிசில் திட்டங்கள், சுய பொருளாதார திட்டங்களுக்கு புலம்பெயர் மக்களின் உதவிகள் மிகச் சிறப்பாக அமைந்து வருகின்றது.

இங்குள்ளவர்களில் பலரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் ஆசிரியர்களாகவும் சேவை புரிகின்றனர். கூடுதலான அரச அலுவலர்களைக் கொண்ட பிரதேசமாக இப்பகுதி காணப்படகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் விவசாயிகளின் நன்மை கருதி கூட்டுறவு சங்கம் உருவாகியது. பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாணய சங்கம் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் செயற்பட்டு வந்தன. சில சங்கங்கள் செயலிழந்துள்ளன. விவசாய கழகங்கள் மூலமாகவும் பல செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

**கலைகளும் பொழுதுபோக்கும்**

கலை இலக்கியங்களில் மிகவும் ஆர்வம் மிக்கவர்கள் செந்தமிழ் கலாமன்றம் ஊடாக பல கலை நிகழ்வுகள், நாடகங்கள், மேடையேற்றப்பட்டன. சிறந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்களை இன்றும் இப்பிரதேசம் தோற்றுவித்தே வருகின்றது.

யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து இங்கு வாழ்ந்தாலும் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வது சிறப்பானது. எல்லா நிகழ்வுகளிலும் ஊர் மக்கள் அனைவரும் பெருமளவாக கலந்து கொள்வர்.

எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஒற்றுமையுடன் வாழ்வதுடன் சமய பண்பாடுகளை பேணுவதுடன் ஒருவரை ஒருவர் மதித்து அவர்களது நலனை பேணி வருவது மிக சிறப்பானதாக உள்ளது. கூட்டுவாழ்க்கையிலும், ஒற்றுமையும் இங்கு சிறப்பான விடயம். சமய பிரதேச வேறுபாடு இன்றி கிராம மக்கள் ஒன்று கூடிய அனைத்து நிகழ்வுகளும் இடம்பெறும் இவர்களது வாழ்வு முறை அனைவருக்கும் எடுத்துக்காட்டாகும்.

---

**இறைவன் எல்லாவிதமான புகழுக்கும் கூட அப்பாற்பட்டவன். நமது அகந்தையை அகற்றினால் இறைவன் நம் நெஞ்சினில் நிறைவான்.**

**புத்தகங்கள் தான் நமக்கு சிக்கல்கள் இருக்கும் போது அவை நமது கண்ணீர் துடைக்கப்பட்டு நம்மைச் சமநிலைக்குக் கொண்டு வருகின்றன. புத்தகங்களே அமரத்துவம் வாய்ந்தவையாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச் சிறப்பு

ஆலமர வேலமரச் சோலைகளும்
அங்கிருந்த பசுங்கிளிகள் பாடுதலும்
பாலடையும் பசுந்தேனும் பனம்பொருளும்
பல்லாண்டு வாழவைக்கும் மூலிகையும்
காண்போரை வியக்கவைக்கும் வனப்புமிக்க
கலை மலிந்த வளநாடு

எனச் சிறப்பிக்கும் தீவு நெடுந்தீவாகும். இலங்கைத் திருநாட்டின் தென்மேற்கே சப்த தீவுகளின் தலைவனாக வரலாற்றுச் சிறப்புமிக்க தீவாக நெடுந்தீவு விளங்ககின்றது. நாற்புறமும் கடலன்னை தாலாட்ட இயற்கை எழிலோடு நற்பண்பாட்டு அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து 45KM தூரத்திலும் இராமேஸ்வரத்தில் இருந்து 38KM தூரத்திலும் நெடுந்தீவு அமைந்துள்ளது. யாழ்குடாவில் உள்ளது போன்றே நெடுந்தீவிலும் சுண்ணக்கற் பாறைகள் காணப்படுகின்றன. இதன் தரைத்தோற்றமமானது தென்பகுதியில் உயரமான மேட்டுநிலமாகவும் மத்திய பகுதி தாழ்நிலமாகவும் விளங்குவதுடன் மேற்குப் பகுதியில் சிறந்த விவசாயத்திற்கு ஏற்ற இருவாட்டிமண் கோட்டைக்காடு, பனங்காணி, சாறாப்பிட்டி போன்ற இடங்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையை நோக்கும் போது பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் விவசாயத்தையும், மீன்பிடியையும் தொழிலாக கொண்டு வாழ்ந்துள்ளனர். இவர்கள் தமது உணவாக பண்ணை சார் உற்பத்திகளான பனம்பழம், பனங்கட்டி, பனங்கிழங்கு, பனாட்டு, ஒடியற்கூழ், ஒடியற்பிட்டு போன்றவற்றை உட்கொண்டதுடன் குறவை, கூனி, மட்டி, போன்ற கடல்சார் உணவுகளையும், தானியங்களான சாமை, தினை, வரகு, குரக்கன், நெல், போன்றவற்றையும் மூலிகைச் செடிகள் இலைகளையும் உணவாக உட்கொண்டு "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பொன்மொழிக்கேற்ப வாழ்க்கை வாழ்ந்துள்ளனர்.விருந்தோம்பலிலும், பிறரிடம் அன்பு காட்டுவதிலும் நெடுந்தீவு மக்கள் தமக்கென தனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையைக் கொண்டுள்ளனர்.

"விருந்தினர்கள் எங்கிருந்து வந்தபோதும்
விருப்புடனே வரவேற்று உபசரித்து
அருந்திடவே அன்னமும் ஆவின்பாலும்
அன்புடனே பரிமாறி அகமகிழ்வார்
பெருமைமிக்க பண்பாளர் வாழுகின்ற
பேராண்மை மிக்க நெடுந்தீவு"

என நெடுந்தீவு மக்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

இத்தீவில் இந்து , கத்தோலிக்கம் என்ற இரு மதங்கள் இணைந்து தத்தமது மதக் கொள்கைகளுக்கு இணங்க போட்டியின்றி இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு சோழ இராச்சியம் போன்று திரும்பும் இடங்களில் எல்லாம் ஆலயங்கள் காணப்படுகின்றனமை பக்தி மேலோங்கிய புண்ணிய பூமி என்பதற்குச் சான்றாகும். ஆகம முறையில் அமைந்த பெரிய ஆலயங்களும் கிராமிய வழிபாட்டிற்குட்பட்ட சிறிய ஆலயங்களும் இங்கு காணப்படுகின்றன. அத்துடன் ஐயனார், வைரவர் கொத்தியார், வீரபத்திரர், காளி, முத்துமாரி போன்ற சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவிற்கான போக்குவரத்து அன்று தொட்டு இன்று வரை கடல் மார்க்கமாகவே உள்ளது. ஆரம்ப காலங்களில் தோணி, படகு, கட்டுமரம், பாய்மரம் போன்ற போக்குவரத்து சாதனங்கள் போக்குவரத்திற்காய்ப் பயன்படுத்தப்பட்டன. பின்னர் கைத்தொழில் புரட்சியின் விளைவால் ஏற்பட்ட தொழிநுட்ப வளர்ச்சியால் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை வீதி அபிவிருத்தி சபைக்கு சொந்தமான "லோஞ்சுக்கள்" மற்றும் உள்ளூர்ப்படகுகளான பலநோக்கு கூட்டுறவுச்சசங்கத்தின் படகுகள், தனியார் படகுகள் என்பன சேவையில் ஈடுபடுகின்றன. நெடுந்தீவு மக்களைப் பொறுத்தவரையில் அவர்களைப் பெரும் சிரமத்திற்குள்ளாக்குவது கடல்வழிப் போக்குவரத்தே.

நெடுந்தீவு மக்களின் பாரம்பரியங்களைப் போன்ற நெடுந்தீவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை எழிலும் கலாச்சாரச் சின்னங்களும் நெடுந்தீவின் சுற்றுலாத்துறை ஈர்ப்பை எடுத்துக்காட்டுகின்றது. வெடியரசன் கோட்டை, பிள்ளையார் பாதம், இராட்சத அரசு, இராட்சதக் காலடி, வெல்லை கடற்கரை, குவிந்தாக் கோபுரம், பெருக்குமரம் , வளரும் அம்மன்கல் போன்ற பல சுற்றுலா மையங்கள் இங்கு காணப்படுகின்றன.

இவ்வாறாக நெடுந்தீவு எனும் சொர்க்காபுரி இயற்கை எழிலோடும் வந்தோரை வரவேற்று இன்முகம்காட்டி உபசரிக்கும் மனிதர் குலத்தோடும். பல நூற்றாண்டுகளைக் கொண்ட வரலாறுகளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது.

திரையெறியுங் கடலணங்காள் தாலாட்டும் தீவு
செந்தமிழின் மனங்கமழும் தென்றலுலாத்தீவு
கரையொதுங்கும் நித்திலங்கள் கதிரெறிக்கும் தீவு
காமதேனு ஆநிரைகள் கற்பகஞ்சேர்தீவு
புரையறவ கற்றவர்கள் புகழ்விரிக்கும் தீவு
போந்த விருந்தோம்பி மனம் பூரிக்கும் தீவு
தரையிலுயர் தீவுகளில் தண்மதிபோல் தோன்றி
தனித்துவத்தின் மகத்துவத்தை நனிவிளக்கும் நெடுந்தீவே.

**உங்கள் செயல்கள் நின்று விடுவதில்லை. அது உங்களது குழந்தையின் பின்னே நிழல்போலத் தொடரும்.**

**உங்கள் வாழ்வில் புனிதம் இருந்தால் அந்த உழைப்பின் பலனையும் உங்கள் குழந்தைகள் பெறுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனையிலிருந்து....

- உங்கள் உடம்புக்கு மரணம் உண்டு. ஆனால் உங்களுக்கு ஒரு போதும் மரணமில்லை.
- எப்போதும் அச்சத்திலிருப்பதை விட ஆபத்தை ஒரு முறை சந்திப்பதே மேல்.
- மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையே ஏன் வேறுபாடு இருக்க வேண்டும்? இறைவன் தான் படைத்தார் என்பது போன்ற கருத்துக்கள் எல்லாம் குழந்தைகளுக்குத் தான் தகுதியானவை.
- உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.
- நான் என்னும் ஆணவம் இன்றிச் செயல்படின் நமது பணிகள் சிறப்பாக அமையும். செல்வாக்கு மிக்கதாக விளங்கும்.
- உண்மை, தூய்மை, தன்னலமின்மை இந்த மூன்றும் உடையவர்களை நசுக்குவதற்கான ஆற்றல் சூரிய மண்டலத்தின் கீழோ மேலோ இல்லை.
- நீங்கள் உயர வேண்டும் என்றால், உங்கள் சிந்தனைகளும் உயர்ந்தவைகளாக இருக்க வேண்டும். உங்கள் சிந்தனைகள் சாதாரணமானவைகளாக இருந்தால் நீங்களும் சாதாரணமானவராகவே இருப்பீர்கள்.
- ஒவ்வொருவருக்கும் அற்புதமான சக்தி இருக்கிறது. நீங்கள் எதை வேண்டுமானாலும் சாதிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் கலாம் பொன்மொழிகள்....

- நாம் வெட்டித்தனமாக இருப்பதிலும் சில்லறைத்தனமான விஷயங்களிலும் மனதை அலைபாயவிடக்கூடாது என்பதில் விடாப்பிடியாக இருக்க வேண்டும்.

- நமது வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நிர்ணயிப்பது தான் பிரச்சினை. வறுமை நம்மை வாட்டி வதைத்தாலும் கடுமையாகப் பாடுபட்டால் தான் பிரச்சினைகளோடு மல்லுக்கு நின்று தீர்வு காண முடியும்.

- என்னிடம் இருப்பதெல்லாம் எனக்குள் இருந்தே அதிகமாகத் தேடிக் கொண்டிருக்கும் உள்ளார்ந்த வேட்கை தான்.

- நமது எண்ணங்கள் சுயநலத்துக்குள் சுருங்கி விடாமல் பொது நலமாக விரிய வேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்க்கும் வளர்ச்சியைத் திட்டமிட்டபடி நிறைவேற்றி நமது நாட்டையும் சர்வதேச அளவில் ஒவ்வொரு அம்சத்திலும் முதல் நாடாக மாற்ற முடியும்.

- கனவுகள் எண்ணங்களாக மாறுகின்றன. எண்ணங்கள் தான் செயல்களாக முடிகின்றன. எனவே மாணவ, மாணவியர் கனவுகள் பல காண வேண்டும்.

- என்னுடைய பரிசோதனைகள் மூலம் நான் கற்றுக் கொண்டது என்னவென்றால் ஒருவன் கனவு காண வேண்டும். அந்தக் கனவை நனவாக்க முயற்சி செய்ய வேண்டும். பின் அந்தக் கனவு ஒரு நாள் அவனையும் அறியாமல் நனவாக வந்து அடையும். இதுவே பலரின் வாழ்வில் உண்மையாக மலர்ந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநல செயற்பாடுகள்

உடலை மாத்திரமின்றி உள்ளத்தை மாத்திரமன்றி உயிர்கள் எல்லாவற்றையும் ஏன் உலகத்தையும் கூட செயல்படுத்தும் தலைமையகம் உள்ளம் தான். இதன் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக புத்திஜீவிகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை மனிதனின் மத்தியநரம்பு மண்டலமே. மனித இனத்தின் வரலாறு அதனுடைய பாரிய மாற்றம் வளர்ச்சி என்பனவற்றின் ஊடாக காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்பப்படும் போதும் துன்பப் போதும் இக்கட்டான நிலை ஏற்படும் போதும் எதிர்பாராத சம்பவங்கள் பல சம்பவங்கள் ஏற்படுத்துகின்ற மனக்கலக்கம் இன்னும் பல வகையான பல சம்பவங்கள் பல வகையான உளநல பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். மனிதனுடைய சகல செயற்பாடுகளுக்கும் உளநல செயற்பாடுகளே முக்கிய காரணம். குறிப்பாக ஒரு சம்பவம் தொடர்ந்து மீண்டும் மீண்டும் சிந்தனையை தூண்டக் கூடியதாக இருக்கும். அதிலிருந்து விடுபட முடியாத ஒரு தவிப்பு ஏற்படும். புலன்கள் யாவும் செயற்பாடற்ற தன்மை ஏற்படலாம். நித்திரை வராத நிலை ஏற்படலாம். வெளிறிய நிலை ஏற்படலாம். பசி இல்லாத நிலை ஏற்படலாம். சில நேரங்கள் வலிப்பு நிலை கூட தோன்றலாம். எம்மோடு மிக நெருக்கமாகப் பழகியவர்கள், அன்பு கொண்டவர்கள், தாய், தந்தையர்கள், கணவனாக இருக்கலாம், மனைவியாக இருக்கலாம், அண்ணன், தம்பி நண்பராக இருக்கலாம், பிரிவோ அல்லது நிரந்தரப் பிரிவோ மரணமாக இருக்கலாம். சொத்து, சுகம், தொழில், பொருளாதார இழப்பு ஏற்படலாம், பல தோல்விகள் ஏற்படலாம். இவ்வாறான தருணத்தில் தனி மனிதனுடைய செயற்பாட்டுத் திறன், தலைமைத்துவப் பண்பு ஒரு குழப்பமான நிலைக்குத் தள்ளப்படலாம். நிரந்தரமாக இந்த நிலை ஏற்படலாம். குறுகிய காலமாகவும் இருக்கலாம். இப்படியான நிலை தோன்றும் பட்சத்தில் என்ன செய்யலாம்? எவ்வாறு சிகிச்சை அளிக்கலாம்? அனுபவ ரீதியாக நாங்கள் என்ன என்ன செய்தோம்? என்பதை குறிப்பிடுவது மிகவும் பொருத்தமான விடயமாக இருக்குமென நினைக்கிறேன். மனம் தளர்ந்து போவதற்கு மன வலிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிய நிலையே காரணமாகும். மனித இனத்திற்கு மன வலிமையே எல்லாவற்றிலும் சிறந்த வலிமை. ஆகவே மன வலிமையை மேம்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்? நிச்சயமாக இது ஒரு சிறந்த கேள்வி. உடலின் பாதுகாப்பு வலையமைப்பே மனந்தான். மனம் வலிமை பெற்றிருக்கும் போது உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றல் உருவாகும். மனத் தளர்ச்சி அடையும் போது நோய் ஏற்படும் சூழல் ஏற்படும் உதாரணம் மன அழுத்தம் ஏற்படுகின்ற போது எட்ரனில் கோட்டிசோன் ஹோர்மோன்கள் அதிகமாக சுரக்கும். இந்த ஹோர்மோன்கள் நுரை ஈரலில் குளுக்கோஸ் உற்பத்தியை அதிகரிக்கும். குருதியில் குளுக்கோசை சமப்படுத்தவதற்கு கூடுதலான இன்சுலின் சுரக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

எனவே அதிகமாக இன்சுலின் சுரக்கின்ற தேவையின் காரணமாக கணயம் செயழிழக்கும் நிலை தோன்றி நீரிழிவு ஏற்படலாம் எனவே மனவலிமை பெறுவதற்கு மனப்பயிற்சியும் முக்கியமானதாகும். எனவே தான் எமது முன்னோர்கள் ஆன்மீக நெறிகளை பயன்படுத்தினார்கள். உண்ணா நோன்பிலிருத்தலும், தீ மிதித்தலும், வேல் குத்துவதும், பறவைக் காவடி எடுத்தலும், தவமிருத்தலும், மனப் பயிற்சியே உடலுக்கும், உடல் பயிற்சியைப் போல மனதுக்கு மனப்பயிற்சி தேவை யாத்திரையும் ஒரு மனநல பயிற்சியே.

தொண்டரஞ்சு களிறுமடக்கி சுறும்பார் மலர்
இண்டைக் கட்டி வழிபாடு செய்யும் இடமென்பரால்
வண்டுபாட மயிலாட மான்கன்று துள்ளிவர
கெண்டைபாய சுனைநீல மொற்றலரும்

திருக்கேதாரமே

என்ற தேவாரம் எடுத்துக் காட்டும் ஐம்புலன்களையும் ஐந்து ஆண் யானைகளுக்கு உவமானமாக கூறப்படுவதில் இருந்து மனப் பயிற்சியின் முக்கியத்துவம் தெரிகிறது. எத்தகைய துன்பங்கள் ஏற்பட்ட போதிலும் நோய்கள் ஏற்பட்ட போதிலும், வலிகள் ஏற்பட்ட போதும் மனம் தளர்வு பெறாமல் இருப்பதற்கு நம்பிக்கை கொள்வதற்கு பாதிப்படையும் சம்பவங்களை மீண்டும் மீண்டும் நினைவு படுத்தவதை தவிர்த்து (Neutral) சமநிலைக்குக் கொண்டு வர வேண்டும். இந்த சமநிலை பேணுவதில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளநலப் பயிற்சியின் வெற்றியே தங்கி இருக்கின்றது.

உலகிலே காணப்படுகின்ற சிறந்த கால்பந்தாட்ட அணி என்றாலும் சரி, கிரிக்கட் அணி என்றாலும் சரி, யுத்த முனைகளுக்கு செல்கின்ற ராணுவ வீரர்கள் என்றாலும் சரி, இறுதியானதும் உறுதியானதும், பயிற்சியாகிய உளநல மேம்பாட்டு பயிற்சியே தேர்வு எழுதும் மாணவர்கள் என்றாலும் சரி முக்கியமானதாக கருதப்படுகின்றது. ஆகவே இந்த பயிற்சியை உலகம் ஆக்கத்திற்காகவும், அழிவிற்காகவும் பயன்படுத்துகிறது. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, ஊடகத்துறைக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கட்டாயமாக உளநல மேம்பாட்டிற்கு உளநல கருத்தரங்கு பயிற்சிகளை ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாவது கட்டாயமாக நடத்த வேண்டும். இவை சிதைவடைந்த நிலை காணப்படுவதனால் தான் அண்மைக் காலங்களில் தற்கொலை செய்வதும் செய்வதற்கு எத்தணித்தலும் பத்திரிகையில் வந்த செய்திகள். இந்த நிலை எதிர் காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கும் மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் இந்த உளநல மேம்பாட்டு கருத்தரங்கு பயிற்சி மிக மிக அவசியம்.

கலை இலக்கியங்கள், பாடல்கள், கவிதைகள், சொற்கள், மொழிகள், நாடகங்கள் எல்லாவற்றையும் சிறப்பான முறையில் உளநல மேம்பாட்டிற்கு பயன்படுத்த முடியும். இரண்டாம் உலக போர்க்காலத்தில் காயமுற்ற கிட்லருக்கு உடல் முழுவதும் 16 குண்டுகள் காணப்பட்டதும் (Anaesthesia) மயக்கம் தரும் மருந்து இல்லாமல் குண்டுகள் அகற்றப்பட்டன. அகற்றப்படும் வரை டால்ஸ்டாப் எழுதிய போரும் அமைதியும் நூலை படித்து கொண்டிருந்தார். மனவலிமை இவ்வாறு தான் இருக்க வேண்டும். நெப்போலியன் ஆங்கில ராணுவத்தால் கைது செய்யப்பட்டு அல்பா தீவில் சிறைக்காவலில் இருந்த போதும் கூட அடுத்து என்னென்ன செய்ய வேண்டுமென்பதில் நிகழ்ச்சி நிரல் தயாரித்துக் கொண்டிருந்தார். இவரைப் போன்று தான் சோவியத் ரஸ்யாவின் தந்தை உ.வே.லெனின் வாழ்க்கை மன்னனின் கட்டளைப்படி லெனினை எங்கிருந்தாலும் கண்டதும் சுட்டுக்கொல்லும்படி கட்டளை இட்ட போதும் எந்த பயமுமின்றி மாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடத்தில் பல வருடங்கள் மறைந்து வாழ்ந்தார். சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெறும் வரை துயரங்கள் தொடர்ந்த போதும் மனம் சாயவில்லை சஞ்சலப்படவில்லை வலிமை படைத்த எண்ணங்களே காரணமாக இருந்தன. எனவே உலக சரித்திரத்தில் சாதனை படைத்தவர்கள் எல்லாம் உளநல வலிமை பெற்றவர்களாகவே காணப்பட்டனர். உளநல பயிற்சிகளை தொடர்ந்து பின்பற்றினர். ஹோமியோ பதியின் தந்தையாகிய ஜேர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹனுமென் எல்லாவற்றிக்கும் எண்ணமே காரணம் எனக் கூறினார். அதற்கு சில உதாரணங்களையும் எடுத்துக் கூறினார். அம்மை நோயை ஏற்படுத்தும் வைரசு கிருமி ஒரு குடும்பத்தில் எல்லோரையும் தொற்றிக் கொள்வதில்லை ஏன் என்று ஆய்வு செய்தார். நோய் பீடிக்கப்படாதவர்களின் நோய் எதிர்ப்பால் நன்றாக இருந்தனர். எண்ணத்தின் வலிமையும் உயர்ந்த நிலையில் காணப்பட்டது. இந்த நிலையை தெரிந்து கொண்டதன் காரணமாக மனித எண்ணமே முக்கிய பல நோய்களுக்கு காரணனெ முடிவுக்கு வந்தார். எனவே மனவலிமை என்பது வளர்ச்சியின் அடிப்படை தத்துவம் என்ற வகையில் அதனை உங்கள் வாழ்வியலிலும் பயன்படுத்தி சாதனை படைக்கும் எண்ணங்கள் நிச்சயமாக ஏற்படும். அடுத்த சந்ததியின் வளமான நலமான எதிர்காலமே இந்த கட்டுரையின் நோக்கம்.

Dr.N.பன்னீர்செல்வம்

---

**உனது செயல்களின் பலன் உனக்கே சொந்தம்.**
**எனது செயல்களின் பலன் எனக்கே சொந்தம்.**
**எனவே நற்செயலே நன்மை பயன் தரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய் (Diabetic)

எமது உயிருக்கு சக்தியை வழங்கும் குளுக்கோசானது உடற்கலங்களுக்குள் செல்வதற்கு இன்சுலின் தேவைப்படுகின்றது. இன்சுலினில் ஏற்படும் பற்றாக்குறை அல்லது எமது செல்கள் இன்சுலினைப் பயன்படுத்தும் ஆற்றல் குறைவடைதல் காரணமாக குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்தல் நீரிழிவு நோய் எனப்படுகின்றது.

நீரிழிவு நோயினை பிரதானமாக இரண்டு வகையாக பிரிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நீரிழி வகை | I | (Type - I Diabetic) |
| 2. | நீரிழிவு வகை | II | (Typr - II Diabetic) |

## நீரிழிவு வகை I

இன்சுலின் சுரக்கும் தன்மையில் குறைவு அல்லது சுரக்காத நிலை காரணமாக பொதுவாக சிறுவர்கள் இளையோர்களில் ஏற்படும் நீரிழிவு நோய் வகையாகும்.

## நீரிழிவு வகை II

எமது உடலில் இன்சுலின் காணப்பட்ட போதிலும் அவர்களை செல்களால் பயன்படுத்த முடியாமை காரணமாக வளர்ந்தவர்களில் ஏற்படுகின்ற நீரிழிவு நோய் வகையாகும்.

## நீரிழிவு நோயின் அறிதறிகள்

- வழமைக்கு மாறாக அடிக்கடி சிறுநீர் கழித்தல்
- அளவுக்கு அதிகமாக தாகம் ஏற்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அளவுக்கு அதிகமாக பசி ஏற்படுதல்
- உடற் சோர்வு ஏற்படுதல்.
- தலைச்சுற்று, மயக்கம் அடிக்கடி ஏற்படுதல்
- காயங்கள் ஏற்படின் மாறுவதற்கு நீண்டகாலம் எடுத்தல்.

இது போன்ற அறிகுறிகள் ஏற்படுமிடத்து குருதியின் குளுக்கோசு அளவை பரிசோதனை செய்வதன் மூலம் நீரிழிவு நோய் நிலைமையை அறிந்து கொள்ள முடியும்.

இது தவிர வளர்ந்தவர்களின் மேற்குறித்த அறிகுறிகள் எதுவும் இன்றியும் நீரிழிவு நோய் ஏற்படலாம்.

எனவே குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் வழங்கப்படும். தொற்றா நோய்களுக்கான பரிசோதனையை செய்து கொள்வதன் மூலம் குருதியின் குளுக்கோசின் அளவை அறிவதன் ஊடாக நீரிழிவு நோயை இனங்கண்டு கொள்ள முடியும். அல்லது எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுவதை தவிர்த்து கொள்ள முடியும்.

நீரிழிவு நோயானது எமது உடலின் பல்வேறுபட்ட உறுப்புகளை பாதிப்படையச் செய்கின்றது. குறிப்பாக கண்களில் வெண்படலம் தோன்றுதல், பார்வை இழத்தல், சிறுநீரகங்கள் செயலிழப்பு ஏற்படல் இருதயத்தில் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக நெஞ்சுவலி, மாரடைப்பு ஏற்படலாம். மற்றும் நரம்புத் தொகுதியில் பாதிப்பை ஏற்படுத்துவதால் உணர்ச்சி இழத்தல் போன்றன ஏற்படுவதை தவிர்த்து கொள்ள முடியும்.


இவ்வாறான நீண்டகால பாதிப்புகளை தவிர்ப்பதற்கு நீரிழிவு நோயை கட்டுப்பாட்டுள் வைத்திருத்தல் அவசியமாகும். இதற்காக சரியான உணவு பழக்கவழக்கத்தையும், ஆரோக்கியமான வாழக்கை முறையில் வாழ்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கத்தைக் கடைபிடித்தல்.

நீரிழிவு நோயாளர்கள் பிரதானமாக காபோவைதரேற்று உணவு வகைகளைக் குறைத்து உட்கொள்ள வேண்டும். இதை இலகுவாக மேற்கொள்வதற்கு " எனது உணவுத்தட்டு " எனும் முறை மூலம் உள்ளெடுக்கப்படும் மாப்பொருளின் அளவைக் குறைக்க முடியும்.




மேலே காட்டப்பட்ட படத்தில் உள்ளது போல் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய உணவுவகைகளைக் கொண்டு உணவுத்தட்டைத் தயார் செய்து உட்கொள்வதன் மூலம், உள்ளெடுக்கப்படும் காபோவைதரேற்றின் அளவைக் குறைக்க முடியும். அத்துடன் நார்ச்சத்துக் கொண்ட பழ வகைகளையும் 1-2 தவணை குறைந்த அளவு கொழுப்புக் கொண்ட பாலையும் எடுத்து கொள்ளவும்.

நீரிழிவு நோயாளர்கள் பின்வரும் உணவுகளை எடுப்பதைக் குறைத்து கொள்ளல் நீரிழிவை கட்டுப்பாட்டுகள் வைத்திருக்க உதவும். கோதுமை மா கொண்ட உணவுகள், சர்க்கரை, இனிப்பு பண்டங்கள், சொக்லேட், குளிர்பானங்கள், இனிப்பு சேர்க்கப்பட்ட பழரசங்கள், இனிப்பு பிஸ்கட்டுகள், ஐஸ்கிரீம் வகைகள், மோல்ட் பால்மா வகைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **உடற்பயிற்சியில் ஈடுபடுதல்**
வைத்திய ஆலோசனைப்படி நீரிழிவுக்காக பரிந்துரைக்கப்படும் உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

வளந்தவர்கள் 30 நிமிட உடற்பயிற்சியில் குறைந்தது வாரத்தில் 5 நாட்கள் ஈடுபடவேண்டும். (நடத்தல், சைக்கிள் ஓட்டம், நீச்சல்)

மேற் கூறப்பட்ட உடற்பயிற்சிகளைச் செய்ய இயலாதவர்கள் தமது அன்றாட செற்பாடுகள் மூலம் உடற்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

- தினந்தோறும் சாதாரண வீட்டு வேலைகளைச் செய்தல்.
- தினமும் வேலைக்கு நடந்தோ சைக்கிளிலே செல்லுதல்
- மின்னுயர்த்திகளை பாவிக்காமல் படிக்கட்டுகளை பயன்படுத்துதல்.
- வீட்டுத் தோட்டங்களை அமைத்து அதில் வேலைகள் செய்தல்
- பஸ்ஸில் பயணிப்பவர் தாம் இறங்க வேண்டிய இடத்திற்கு 2,3 தரிப்பிடம் முன்பாக இறங்கி நடத்தல்.

3. நீரிழிவு நோய்க்கான மருந்துகளைப் பாவிப்பவர்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி சரியான அளவுகளிலும், சரியான நேரங்களில் மருந்துகளை எடுப்பதன் மூலம் ஏனைய நோய்கள் காணப்படும் போது அதற்கான உரிய மருந்துகளை பாவிப்பதன் மூலம் நீரிழிவால் ஏற்படும் நீண்டகால பாதிப்புக்களை குறைத்து கொள்ளலாம்.

## நீரிழிவு நோயாளர்களுக்கான பாத பராமரிப்பு

நீரிழிவு நோயாளர்கள் எதிர்நோக்கும் மிகப் பாராதூரமான பாதிப்புகளில் ஒன்றாக உள்ளது. கால்களை இழக்கின்ற நிலைமையாகும் உலகில் ஒவ்வொரு 20 வினாடிக்கும் ஒருவருக்கு நீரிழிவு நோயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக கால்கள் நீக்கப்படுகின்றது. இதிலிருந்து நீரிழிவு நோயாளர்கள் பாத பராமரிப்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் உணர்த்தப்படுகின்றது.

நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் நரம்பு சேதம், பாதங்களுக்கான குறைவான இரத்த ஓட்டம், நோயெதிர்ப்பு சக்தி குறைவடைதல் காரணமாக பாதங்களில் புண் ஏற்படுதல், புண் குணமடைய தாமதமாதல் மற்றும் பாதங்களில் அழுகல் நிலை காரணமாக கால்கள் துண்டிக்கப்படும் நிலை ஏற்படுகின்றது .இதைத் தவிர்ப்பதற்கு சரியான பாதபராமரிப்பு முறையை மேற்கொள்ளல் அவசியமாகும்.

- தினமும் கால்களை சவர்க்காரம் மற்றும் தண்ணீரால் கழுவுதல் .
- கால்விரல் இடைவெளிகளை ஈரமற்ற நிலையில் வைத்திருத்தல்.
- நகங்களை நீளமாக வளர விடாமல் குறுக்காக வெட்டி விடவும்.
- நகங்களை வளைத்து வெட்டுவதைத் தவிர்க்கவும்.
- தினமும் இருபாதங்களையும் பரிசோதிக்கவும், பரிசோதிப்பதற்கு கண்ணாடி, அல்லது இன்னொருவரின் உதவியுடன் பரிசோதிக்கவும்.
- காலணிகள் இன்றி திறந்த வெளியில் நடமாடுவதைத் தவிர்க்கவும்.
- பொருத்தமான காலணிகளைப் பயன்படுத்தவும், மற்றும் அணிவதாள் முன் உட்பகுதியைப் பரிசோதிக்கவும்.
- பாதங்களை சுடுநீரைப் பயன்படுத்தி கழுவுவதை தவிர்க்கவும். பாதங்களில் நிறமாற்றம், வீக்கம், கொப்புளம், தழும்புகள்,
- காயம், பாதங்களில் ஆணி உண்டாதல் போன்றவை ஏற்படின் உடனடியாக வைத்தியரை நாடவும் .
- கால்களில் வளையல்கள் அணிவதைத் தவிர்க்கவும்.
- புகைத்தலைத் தவிர்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவு குறைவடைதல்

# (Hypoglycemia)

நீரிழிவு நோயாளர்களுக்கு குருதியில் குளுக்கோசின் அளவு சடுதியாக தேவையான அளவை விட குறைவடையும் நிலை ஏற்படலாம்.

**இதற்கான பிரதான காரணங்களாவன**

- குறைந்தளவு உணவை உள்ளெடுத்தல், உணவைத் தவிர்த்தல்
- மருந்தை அளவுக்கு அதிகமாக உட்கொள்ளுதல்.
- மருந்தை உட்கொண்ட பின் உணவை எடுக்காமை.
- வழமைக்கு மாறாக அதிகளவு வேலை, உடற்பயிற்சியில் ஈடுபடுதல்.

இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு குறைவடைந்து நடுக்கம், வியர்த்தல், தலைச்சுற்று, நெஞ்சுபடபடப்பு, தெளிவற்ற பார்வை, சோர்வு, சுயநினைவை இழத்தல் போன்றவை ஏற்படலாம்.

நீங்கள் மேற்குறித்த அறிகுறிகளை உணர்ந்தால் சிறிது குளுக்கோசு அல்லது சர்க்கரை (2-3 கரண்டி) உடனடியாக உட்கொள்ளவும். இதன் பின்பும் முன்னேற்றம் ஏற்படாவிடின் உடனடியாக வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

நீரிழிவு நோயாளர்கள் இந்நிலை குறித்து உங்களுடன் இருப்பவர்களுக்கு இவ்வாறான நேரத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்று தெளிவுபடுத்தி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வேதங்களில் தனிமனித ஒழுக்கம்

"கூறுமின் ஈசனைச் செய்மின் குற்றேவல்
குளிர்மின் கண்கள் தேறுமின் சித்தம்
தெளிமின் சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின் அவலம்
இவை நெறியா ஏறுமின் வானத்து இருமின்
விருந்தாய் இமையவர்க்கே"

தனிமனிதர்களின் தொகுப்பு தான் சமுதாயம் என்பது. வளர்ந்த நாடுகளை விட தமிழர்கள் ஆதிகாலம் தொட்டே உயர்ந்த பண்பாட்டுடனும், தனி மனித ஒழுக்கத்தை இறை வழிபாட்டுடன் இணைத்துக் கூறி வாழ்ந்தும் காட்டினார்கள். காரணம் இறை வழிபாட்டினை மனித வாழ்விலிருந்து பிரிந்து விட முடியாது. இறையுணர்வு இல்லையானால் மனிதன் மிருகமாக வாழ நேரிடும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் நமது சிவஞானியர்கள். 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமான் நாயனார் சேரர் குடியில் தோன்றி சிவ வழிபாடு செய்து வந்தவர். ஆழ்ந்த இறை பக்தியுடைய இப்பெருமானார் அருளியுள்ள இப்பாடலில் பொதிந்துள்ள தனி மனித ஒழுக்க கோட்பாடுகளைக் காணப்போம்.

**01. கூறுமின் ஈசனை :-** முழுமுதற் பொருளாய் சிவபெருமானைத் துதியுங்கள். பிறப்பும் இறப்பும் இல்லா பெருந் தெய்வமாகும். மற்றவைகள் எல்லாம் சிறு தெய்வங்கள் எனப்படும். சிறு தெய்வங்கள் பிறப்புக்கும் இறப்புக்கும் வேதனைப்படும். மேல் வினையும் செய்யும். ஒரு நாட்டிற்கு பிரதமர் இருப்பது போல உலகத்திற்கே ஒரே கடவுள் தான். அந்த பிறப்பு, இறப்பு இல்லாத அவரே சிவம் என்கிறார். சிறுதெய்வ வழிபாட்டால் உயிர்பலி இடுதல் போன்ற பண்பாடற்றவை தலை தூக்குவதனாலேயே ஆரம்பத்தில் பெருந்தெய்வ வழிபாட்டை கூறியுள்ளனர்.

**02. செய்மின் குற்றேவல் :-** சிறு சிறு தொண்டுகளைச் செய்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயத்தை தூய்மை செய்தல், மலர் எடுத்தல், வலம் வருதல் போன்ற தொண்டுகள் செய்தால் மனதில் அன்பு வளரும், தன்னலம் குறையும், ஆணவம் மறையும்.

**03. குளிர்மின் கண்கள் :-** இறைவனின் திருவருவத்தைக் கண்டு கண்கள் குளிர வேண்டும். இதனால் நம்மிடமுள்ள மிருகப் பண்புக் குறைந்து மனிதநேயம் பெருகும்.

**04. தேறுமின் சித்தம் :-** மனதை ஒரு நிலையில் நிறுத்துங்கள். நாம் மனம் போகும் போக்கில் அலையவிடக் கூடாது. மனம் தான் மனிதனுடைய எல்லா செயல்களுக்கும் காரணம். அதை நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

**05. தெளிமின் சிவனை :-** முழுமுதற் பொருள் எது? என்பதில் ஒரு தெளிவு வேண்டும். பிறப்பும் இறப்பும் இல்லாதவரும், காலத்தைக் கடந்து நிற்பவரும் சிவபெருமான் ஒருவரே என்பதில் தெளிவு வேண்டும்.

**06. செறுமின் செற்றம் :-** பகைமை உணர்வை நீக்க வேண்டும். பகைமை உணர்வு தான் இன்றைய காலத்தில் எல்லா கொடுமைகளுக்கும் காரணம். மனித இனம் மாதவ நிலையை அடைவதற்கு பெரும் தடையாக இருப்பது இதுவே.

**07. ஆறுமின் அவலம் :-** துன்பத்திலிருந்து நீங்க வேண்டும். துன்பத்தில் மூழ்கிவிடக் கூடாது. இன்பமும் துன்பமும் காட்டாற்று வெள்ளம் போல் விரைவில் நீங்கிவிடும். துன்பப்படுவதால் உடலில் நோய் பெருகும். வாழ்நாள் குறையும். நமக்கு உள்ளும் புறமும் வள்ளலாய் இறைவன் விளங்குகிறான். விரைவில் நலம் பெறுவோம் என்று உறுதியாக நம்பினால் துன்பத்திலிருந்து விடுபடுவது எளிதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக்கிரியைகள்

ஒருவர் இறந்த பின்பு அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்திய எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. அபரக்கிரியைகளின் பலனைச் சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும் சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவார். பிதிர்கடன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியவராவார். பிதிரர் வருந்தின் பெருந்தீமைகள் நேரும்.

பிறந்தவர் இறப்பது இறந்தவர் பிறப்பதும் ஸத்யம். பிறப்பு, இறப்பு, துன்பமயம். பிரசவ வேதனை - மரணவலி இறந்து மீண்டும் பிறப்பதற்கிடையில் ஜீவன் தங்குமிடமே நகரம் அல்லது சுவர்க்கம் என்று மறுலோகமாகும்.

சபிண்டீகரணமாவது இறந்தவரை அவரது தந்தை, பாட்டன் முதலியவர்களுடன் பிண்டமளித்துச் சேர்த்து விடும் கிரியையாகும். சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்வது. எனவே இவற்றைச் சிறந்த முறையிலேயே செய்ய வேண்டும். மறுவுலகில் ஜீவனுக்கு வேண்டிய வஸ்திரம், குடை , தீர்த்தபாத்திரம், பாதுகை, படுக்கை முதலிய சகல பொருட்களையும் தானம் செய்ய வேண்டும். அவை இறந்தவருக்கு கிடைத்து இன்பமளிக்கும்.

பசி, தாகம் அடங்குவதற்காக நித்ய சிரார்த்தம் செய்வதுண்டு. இறந்த திதியில் 12 மாசியங்களும் 12 சோதகும்பமும் இடையிலே ஊனமாசியமும் முதலியனவும் (16) செய்து முடிவில் ஆப்தீகம் செய்வது புத்திரர் கடமை.

ஜீவன் ,யமலோகம், செல்லும் வழியில் கிங்கரருடன் 16 இடங்களில் தங்குகின்றான். புத்திரன் செய்யும் சிரார்த்தம் அந்த லோகத்துக்கு ஏற்ற உணவாக ஜீவனுக்கு அளிக்கப்படும். அதற்காகத்தான் சுடுகாட்டிலிருந்து திரும்பியதும் நக்ந சிரார்த்தம் செய்து வஸ்திரம், தீபம், தீர்த்தம் பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன தானம் செய்யப்படுகின்றது.

பிண்டத்தில் பாதிப்பகுதி பிரேதவுடலை வளர்க்கும். கால் பங்கு யம கிங்கரர்களுக்குத் திருப்தி தரும். அதனால் அவர்கள் ஜீவனை இம்சிக்கமாட்டார்கள். மற்றொரு கால்பங்கு பிண்டதானம் செய்பவருக்கு நன்மை உண்டு பண்ணும்.

இறந்தவர்களின் ஆன்மாக்கள் பசியாலும் தாகத்தாலும் வாடித் தர்ப்பணத்தினங்கள் எவை என ஆவலுடன் காத்துக்கொண்டிருப்பர். திதி தவறாமல் ஏற்ற காலத்தில் உரிய மந்திரங்களைக் கூறி நன்றாகச் செய்யும் தர்ப்பணம் அவர்களிடம் போய்ச் சேர்கின்றது. முறைதவறிச் செய்தாலும் செய்யாமல் இருந்தாலும் அவர்கள் பசியால் வாடி கோபமுற்று சாபம் கொடுப்பர். பிதிர்களைச் சாபாயுதர் என்றே சாஸ்திரம் கூறும்.

முறைப்படி இவற்றைச் செய்வதால் நீ எனக்குப் புத்திரனாகி நற்கருமம் செய்து என்னைச் சந்தோசப்படுத்துவது போல் எனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகி நீயும் இன்புறுவாய் என்று ஆசீர்வதிப்பர். வயிறு குளிர்ந்தோர் வாழ்த்துவது இயற்கை.

## அபரக்கிரியைகள் வகை

இவை தகனக் கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசிகம், சிரார்த்தம் எனப் பலபகுதிகளை உடையன. இவை உத்தர கிரியை, சிரார்த்தக் கிரியை எனவும் அழைக்கப்படும்.

## உத்கிராந்திக் கிரியை

மரணத்தின் பின் நடைபெறுபவைதான் அபரக்கிரியைகள் எனினும், ஓர் ஆன்மா தூல உடலை விட்டுப் பிரியும் எல்லையில் - உயிர் காலன் கைப்படப் போகின்றதென்று உணர்வேற்றப்பட்ட வேளை, அந்த ஆன்மாவைப் புனிதமான நிலைக்கு உள்ளாக்குவதற்காகச் சில கருமங்கள் இடம் பெறவேண்டும். இவை உத்கிராந்திக் கிரியைகள் எனப்படும். உயிர் பிரியும் தறுவாயில் செய்ய வேண்டிய இக்கிரியைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது செய்யப்பட முடியாமல் போனாலும் பின்னராவது செய்யப்பட வேண்டும்.

இறப்பை எதிர்நோக்கியிருப்பவருக்கு இடையூறு இல்லாத வகையில் அவரை தென்திசையில் தலைவைத்துப் படுக்க வைப்பது நல்லது. அமைதியும் தூய்மையும் இனிமையும் சிவப்பொலிவும் நிறைந்த சூழலை ஏற்படுத்த வேண்டும். புண்ணியத் தலங்களில் விபூதியைப் பூசிவிடலாம். புண்ணிய தீர்த்தங்களை வாயில் சிறிது சிறிதாக விடலாம். சிவ தீட்சை பெற்ற ஒருவர் காதிலே பஞ்சாட்சரத்தை ஒதலாம். திருமுறைப் பாடல்களை மென்மையாக பாடலாம். அல்லது ஒலிக்க விடலாம். கோதானம் செய்யலாம். உக்கிராந்தி கோதானம் என இதனைக் கூறுவர்.

## இறந்தவனுடைய கதி

மனித லோகத்துக்கும், எமபுரிக்கும் இடையில் எண்பத்தாறாயிரம் காதம் தூரமுள்ளது. எமதூதர்கள் மூவர் விதி முடிந்த ஜீவனைப் பாசத்தால் கட்டியிழுத்து, காற்றின் உருவமான தேகத்தில் அடைத்துக்கொண்டு , யமலோகத்துக்கு சென்று யமதர்மராஜரின் முன்பு நிறுத்துவார்கள்.யமதர்மராஜனும் அக்கிங்கரர்களிடம் "நன்று , நன்று இவனை மீண்டும் கொண்டு போய் அவன் வீட்டில் விட்டு விடுங்கள். 12 ஆவது நாள் கழிந்த பிறகு மீண்டும் நம் முன்பு நிறுத்துங்கள் என்று கட்டளையிடுவான். மீண்டும் அந்த சீவனைப் ஒரு நொடியில் அவன் வீட்டின் முன்பு விட்டு விடுவார்கள். எனவே இறந்தவனை உடனே புதைக்கவோ, எரிக்கவோ கூடாது.

மதரித்த ஜீவன், மூன்று நாள் நீரிலும், மூன்று நாட்கள் அக்னியிலும், மூன்று நாட்கள் ஆகாயத்திலும் ஒரு நாள் தனது வீட்டிலும் ஆவியுருவில் வசிப்பான்.

## உடன் செய்ய வேண்டியவை

உயிர் பிரிந்துவிட்டது என நிச்சயமாகியதும் உடலை வீட்டின் நடு ஹோலில் ஒரு பீடத்தில் (வாங்குக்கட்டில்) தரப்பை, வேப்பிலை என்பவற்றின் மேல் கோடித் துணி விரித்து அதன் மேல் தெற்கில் தலைவைத்துப் படுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து தலைமாட்டில் ஒரு குத்துவிளக்கை ஏற்றி வைக்கவேண்டும். இது அணையா விள்க்காகப் பேணவேண்டும். ஊதுபத்தி ஏற்றி வைத்து வாசனை கமழச் செய்யலாம்.

காற்பெருவிரல்கள் இரண்டையும் சிறு துணியால் ஒன்றாகக் கட்டி விட வேண்டும். இதே போலக் கைகள் இரண்டையும் மார்பில் ஒன்றாகச் சேர்த்து இரு கைப் பெருவிரல்களையும் கட்ட வேண்டும். கண்கள் திறந்திருந்தால் மூடி விட வேண்டும் வாய் திறபட விடாமல் நாடியைச் சிரசோடு சேர்த்துச் சுற்றிக் கட்ட வேண்டும் கழுத்துவரை ஒரு வெள்ளைத்துணியினால் மூடிவிடலாம். இதனைச் சேமங்கட்டுதல் என்பர். உடல் விறைத்து விட்டால் இதனைச் செய்ய வேண்டும். மூக்குத் தூவாரங்களைப் பஞ்சினால் அடைத்து, வயிறு ஊதாமலிருத்தற் பொருட்டு வயிற்றின் மேல் சிறிய உப்பு மூடையொன்றை வைத்து கட்டிலின் கீழ் அகன்ற வாயுடைய நீர்பாத்திரமொன்று வைக்கலாம். உடல் விறைப்பதன் முன் இவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும். இதன் பின் வேண்டியவர்களுக்கு அறிவித்தல் கொடுத்தல் நடைபெறலாம். சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும். படங்களைத் திருப்பி உட்புறமாக மாறிக் கொழுவுதல் மரபு.

### உடற்சுத்தி

வீட்டின் முன்புறம் பந்தலிட்டு வெள்ளைக்கட்டி மாவிலை, தோரணங்களால் அலங்கரிக்க வேண்டும். நிலத்தை சாணத்தால் மெழுகி, (சீமேந்து நிலமெனில் கழுவி) நடுவில் ஒமகுண்டமும், வடகிழக்கில் சிவகும்பமும், தென்மேற்கில் பஞ்சகவ்வியமும், கிழக்கில் உரல் , உலக்கை என்பனவும் பேரிகை அல்லது மணியும் வைத்து நடுவில் வாழையிலையில் நெல் பரப்பி நடுவில் உருத்திரகும்பமும் சுற்றிவர அட்டதிக்குப் பாலகர் கும்பங்களும் மேற்கில் புண்ணியாக வாசனமுன் கிழக்கில் சுடலைக்குக் கொண்டு போக வேண்டிய சிவனுக்குரிய மண்குடமும் வைக்கப்பட வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்பவர்) நீராடிச் சுத்தமான ஆடை அணிந்து விபூதி தரித்து குருக்களிடம் தர்ப்பையும் பூணூலும் வாங்கி அணிந்து கிரியை செய்வதற்குத் தயாராக வேண்டும். கர்த்தா எனும் போது கொள்ளி வைப்பதற்கு உரிமையுள்ளவர். தாய் அல்லது தந்தை எனின் மூத்த (அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய) மகனே உரிமையாளர் எனினும் ஏனைய புதல்வர்களும் இதே போலத் தயார்நிலையில் வந்து அவரோடு கூட நின்றாக வேண்டும். இறுதிக் கிரியையில் புதல்வர்கள் யாவருக்கும் சமபங்குண்டு.

**சுண்ணம் இடித்தலும் பேரீதாடனமும், பந்தம் ஏற்றுதலும்.**

முன்னர் பேரியை வைத்துப் பூஜை செய்து மும்முறை ஒலியெழுப்பி அதன் பின் அதனை அதற்குரியவர்கள் வாசிக்கக் கொடுப்பது மரபாக இருந்திருக்கிறது. இப்போது பேரிக்குப் பதிலாக மணியை வைத்து பேரீதாடனம் செய்யப்படுகின்றது.

பாவங்களை நீக்குதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது. இதன் போது மாணிக்கவாசகரின் திருப் பொற்சுண்ணப் பாடல்கள் பாடப்படும். பாவங்கள் அகன்றதும். திருவருள் உண்டாவற்காகப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப்பெறும். மஞ்சள்மாவும், அறுகும், நல்லெண்ணெயும் சேர்த்து உரலிலிட்டு இடித்துத் துளாக்குதல். சுண்ணமிடித்தலாகும். சுண்ணம் துாள் (ஸ்நானப் பொடி ) முதலில் சுண்ணமிடித்துத்துச் சாத்தியபின் நீராட்டுதலே முறை. இதுவே பழைய மரபும் ஆகும். இன்று குளிப்பாட்டிய பின் சுண்ணமிடித்துச் சாத்துகின்றனர். இது ஆராயப்படவேண்டியது.(ஆலயத்திலும் சூர்ணோற்சவத்தின் போதும் இவ்வாறு இன்று மாறியே செய்கின்றனர் என்பது அவதானிக்கத்தக்கது.

நல்லெண்ணெய், தேசிக்காய், அரப்பு, அரிசிமா, , மஞ்சள் மா, பழவகை, பால், தயிர், இளநீர், சிவகும்பநீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து புத்தாடை புனைந்து, நீறு சாத்திப் பூச்சூடி , பிரணவமான தர்ப்பையில் வைப்பர். இடிக்கப்பட்ட சூரணத்தை உடலில் இரு கண்களில் சாத்தி கும்பநீரில் கரைத்து உடலெங்கும் படும்படி தெளிப்பர்.

சிவாச்சாரியார் பஞ்சசுத்திகளையும் . சகளீகரணத்தையும் செய்து, அக்கினி வளர்த்து, அட்டதிக்குத்தேவர்களையும், சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். கும்பத்திலிருந்த சிவனை உடலில் மீது எழுந்தருளும் படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் சிவனை ஆவாகனம் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களைத் தீர்க்க ஆகுதி செய்து, அவ்வுடலுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கும் நாடிச்சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இதயத்திற்குக் கொண்டு வந்து உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திரமூர்த்தியை அடையும் வழியில் விடுவார்.

**வாய்க்கரிசி இடுதல்**

அரிசியும் சில்லறைக் காசும் கலந்து ஒரு தட்டில் வைத்திருக்க வேண்டும். பெண்கள் சுடலை செல்வதில்லை என்பதால் அவர்கள் (துடக்குரிமையுள்ள பெண்கள்) வாய்க்கரிசி இடுதல் என்ற சடங்கை இப்போது செய்வார்.இதன் பின் உடலை வெள்ளைத் துணியால் மூடிப் பாடையினுள் வைத்த பின் பெண்கள் இடப்புறமாக மும்முறை சுற்றி வந்து அழுவர்.

**சுடலை சேர்த்தல்**

உடலை சுடலைக்குச் எடுத்துச் செல்லும் பொழுது அட்டதிக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவசாரமுள்ள ஒருவரே இதனைச் செய்யத்தக்கவராவர்.) ஒமாக்கினியில் இருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினி (உறி போன்ற அமைப்பில் தென்னை மட்டையால் செய்து அதனுள் மணச்சட்டியில் இவ்வக்கினி வைக்கப்பட்டிருக்கும்.) மட்கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும்.

கால்கள் முன்புறமாக அமையும் படி பிரேதத்தைக் கொண்டு போக வேண்டும். கர்த்தாவும் கிரியை செய்விப்பவரும் ஏனைய புதல்வர்கள் போன்றோரும் பிரேதத்தின் முன்னே செல்ல, ஏனைய உறவினர்கள் பிரேதத்தைப் பின் தொடர்ந்து செல்ல வேண்டும்.

சுடலையில் நான்கு முழுநீளம், இரண்டு முழு அகலமான இடத்தில் மஞ்சள், குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம்(சிதை) என்று பெயர் பெறும். இச்சிதாத்தானத்தில் அடுக்கிடப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலைத் தெற்கே தலை இருக்கத்தக்கதாக வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர். துடக்குரிமையுள்ள ஆண்கள் அனைவரும் இங்கு வாய்க்கரிசி இடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயிடல்

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் மும்முறை உடலைச் சுற்றி வரவேண்டும். ஒவ்வொரு தரமும் மேலிருந்து கீழாக மட்குடத்திலிருந்து ஒவ்வொன்றாக மூன்று துவாரங்கள் இட்டுக் கும்ப நீரை உடலுக்குத் தெளிக்க வேண்டும். கர்த்தாவுடன் வரும் ஒருவர் கத்தியால் இதனைச் செய்வார். கர்த்தா சிதையின் தென்புறத்தில் தென்முகமாக நின்றுகொண்டு, பிரேதத்தைப் பாராமலே குடத்தை முன்பாக நிலத்திற் போட்டு உடைத்து சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வார். தீ இடும் பொழுது "அக்கினி தேவனே! பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக்கொள்ளும்" என நினைத்துக் கொண்டே தீயிட வேண்டும். தீயிட்ட பின் காற்புறத்திற்கு வந்து வணங்கிவிட்டுப் பூணுலையும் தர்ப்பையும் கழற்றிப் போட்டுவிட்டுத் திரும்பிப் பாராமல் வந்துவிட வேண்டும். மயானத்தில் வசதி இருப்பின் கொள்ளி வைத்தவர் நீராடி வீடு செல்வார்.

வீட்டிலிருந்து பிரேதம் சுடலை நோக்கி சென்ற உடனேயே மாவிலை, தோரணம் முதலிய அலங்காரங்கள் யாவும் களைந்து வீடு முழுவதும் கழுவித் துப்பரவு செய்து வீட்டிலுள்ளோர் யாவரும் தலையில் குளித்து தூய்மையாக வேண்டும்.

சுடலை சென்றோர் வீடு திரும்பும் போது வாசலில் பசு ஒன்று கட்டிவிடுதல் நன்று. கர்த்தா படலையின் குறுக்காகப் போடப்பட்டிருக்கும் உலக்கையைக் கடந்து வேப்பிலையைச் சப்பித் துப்பி உள்ளே நுழைய வேண்டும். யாவரும் நீராடி வீட்டினுள் சென்றதும் இறந்தவரின் உடல் வைத்திருந்த இடத்தில் அல்லது உயிர் பிரிந்த இடத்தில் ஓர் ஓரமாக குத்துவிளக்கேற்றி வைத்து இளநீர், தண்ணீர்ச் செம்பு என்பவற்றை வைக்கவேண்டும். முப்பது நாளும் இவ்விடத்தில் சிறிதளவு உணவு படைக்கும் வழக்கமும் உண்டு. செம்பு தண்ணீர் ஒவ்வொரு நாளும் புதிதாக மாற்றி வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஸ்தி சஞ்சயனம் / சாம்பல் அள்ளல்/ காடாத்து**

அஸ்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிருந்து எலும்புகளையும், சாம்பலையும், எடுத்து புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அஸ்தி – எலும்பு, சஞ்சயனம், கரைத்தல், இது கால், தொப்புழ், நெஞ்சு, முகம், தலை, ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்து, பால் உள்ள பாத்திரத்தில் இடடுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாம். அஸ்தியைப் புண்ணிய தீர்த்தத்திலிடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

தகனம் நிகழ்ந்த அடுத்த நாள் இதனைச் செய்வது முறை. முதலாம், மூன்றாம், ஐந்தாம்நாள்களுள் ஒரு தினத்தில் செய்யலாம். மறுநாள் செய்யும் போது நெருப்பு இருக்குமாயின் நன்கு தண்ணீர் தெளித்து ஆறவிட்ட பின் தலைமாட்டில் கும்பம், விளக்கு, வெற்றிலை, பாக்கு, பழம், என்பன வைத்து பாலுள்ள ஒரு மண் பாத்திரத்தை மூன்று கற்களில் வைத்து சிதையின் வலது புறத்தில் மேற்கே பார்த்தபடி நின்று குளிப்பாட்டும் போது செய்தது போல் புறங்கைகளை மேலே பிடித்திருக்க இன்னொருவர் மூலமாக பால், இளநீர் முதலியவற்றில் அபிசேகம் செய்ய வேண்டும். இதன்பின் முன்குறிப்பிட்ட இடங்களிலிருந்து அஸ்தியைச் சேகரித்துப் பாலுள்ள சட்டியில் போட்டபின் நிலத்தைப் பண்படுத்தி நவதானியம் விதைத்து, நீர் தெளித்து, நெற்பொரி தூவி, ரொட்டி, பழம், தாம்பூலம் என்பவற்றை நிவேதித்து அங்கிருந்து புனித நீர்நிலைக்குச் சென்று அஸ்தியைக் கரைத்து விட்டு நீராடி வீடு திரும்பலாம்.

அஸ்தி முழுவதும் ஒரே முறையில் ஒரே இடத்தில் கரைப்பதே முறை. அதைப் பகுதிகளாகப் பிரிந்து, வேறு வேறு துறைகளில் கரைத்தல், அல்லது காசி இராமேஸ்வரம் கொண்டு போகும் நோக்கில் பாதுகாப்பு வைத்திருத்தல் எல்லாம் வழக்கமாகும்.

**நக்னதானம்.**

இது தகனக்கிரியை முடிந்த பின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றில் நீக்கும் பொருட்டு குடும்பத்தாரால் ஆசாரியருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அந்தணர்) ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

### எட்டுச் செலவு

தகனம் நிகழ்ந்து எட்டாம் நாளின் முன் ஒரு நாளில் இறந்தவரை நினைத்து மடை போடுதல் எட்டுச் செலவு எனப்படும். இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகைகள், பானங்கள், பலகாரங்கள், தின்பண்டங்கள், பழங்கள் முதலியவற்றைத் தயாரித்தும் சேகரித்தும் படைத்து நிவேதனம் செய்வர். இங்கு பலர் மச்சப் படையல் என்ற பெயரில் மாமிசம் முதலியவற்றையும் மதுபானம் முதலியவற்றையும் படைக்கின்றனர். ஆனால் அது தகாத செயல். உயர்நிலைக்குச் சென்று கொண்டிருப்பவரைத் தாழ்ந்த நிலையில் சிந்திக்கலாகாது.

இப்படையலை உறவினரும், அயலவருமாக உண்டு களிக்கின்றனர். ஆனால் இது தகுந்த செயலன்று என்பதே பெரியோர் கருத்து. முன்பு குடிமைக்காரர் இதனைப் பெற்றனர். அந்தணர் இல்லங்களில் பத்தாம் நாள் இப்படியானதொரு படையல் நடைபெற்று அவற்றை கல்லுடன் கடலில் போடும் வழக்கம் இருப்பதை அவதானிக்கலாம்.

### அந்தியேட்டி

இது கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும் அந்திய - கடைசிய நாள், இட்டி - யாகம் இறந்தவரின் ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகின்றது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணியம் நீர்த்தரையில் நிகழும் கிரியை இது. இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

ஆன்மாவுக்கு உடலோடுள்ள தொடர்பை முழுமையாக நீக்க இக்கிரியை உதவுகின்றது. ஒருவர் பெற்றுள்ள தீட்சைக்கத் தக்கவகையில் சமய விசேட நிர்வாண அந்தியேட்டி என்பன நிகழும்.

சிவாசார்ய நிலையிலுள்ளவர்களுக்கு மட்டும் பிரேதத்திலேயே செய்யப்படும். ஏனையவர்களுக்கு முப்பதோராம் நாளில் புத்தளி எனப்படும் தர்ப்பையால் செய்யப்பட்ட உடலில் இறந்தவரை மந்திரத்தால் எழுந்தருச் செய்து பாவனையாக அவரது உடலிருந்து பஞ்சபூதத் தொடர்புகள் ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகலைகள் , முப்பத்தாறு தத்துவங்கள் ஆகிய யாவும் பூசிக்கப்பெற்று இறக்கப்படும் . தீட்டை பெறாதவர்களுக்குக் கூட உடனடியாக பாவனைத் தீட்சை கொடுத்து சைவனாக்கிய பின்னர் அந்தியேட்டிக் கிரியை செய்யப்படும்.

நீர்க்கரையில் அமைக்கப்பட்ட மண்டபத்தில் வெள்ளைக்கட்டி, மாவிலை, தோரணங்களால் அலங்கரித்து பாசுபதாஸ்திர கும்பம், பஞ்சகவ்வியம், புண்ணியமாக வாசனம், தசாயுத கும்பங்கள், புத்தளிகா (இறந்தவரின் உடலாக பாவனை செய்யப்படும் தர்ப்பையாலான உடல்) இவற்றை முறைப்படி வைத்து இக்கிரியைகள் செய்யப்படும்.

பாடானபூசை (பாரண பூசை)

ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப்பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும். தர்ப்பணம், பிண்டம் இடுதல் என்பனவும் புத்தளியை உடலாகக் கருதி தகனம் செய்தல் இக் கிரியைகளில் அடங்கும்.

நீர் நிலையில் இடுப்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்றபடி பிண்டத்தைத் தெற்கேயும், கும்பத்தை வடக்கேயும் பாடாணத்தைத் தெற்கேயும் போட்டபின் நீராடி வீடு திரும்புவர்.

ஆசௌசம் நீங்கியபின் முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், வீட்டுக் கிருத்தியம் என அனைத்தையும் செய்ய வேண்டும்.

நன்றி

பிரம்மசிறீ

ப.சிவானந்தசர்மா

(கோப்பாய் சிவம்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் – உலகின் இயக்க நிலையின் நடுவகம்

சிதம்பரம் நடராஜர் கோயிலும், அதன் புவியியல், கட்டிட அமைப்பு அதனால் புதையுண்டு இருக்கும் அதிசயங்கள் போன்றவற்றை தான் சிதம்பர ரகசியம் என்று கூறிவருகின்றனர். ஆனால் இவற்றை எல்லாம் தாண்டி அக்கோயிலில் ஏதோ சிறப்பு வாய்ந்த சக்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது. மனிதனும் தமிழும் பிறந்த குமரிக்கண்டம்! மறக்கப்பட்ட உண்மைகள்!! சிதம்பரம் நடராஜர் கோயில் ரகசியம் என்று பெயரில் பலரும் பல விதமான செய்திகளை பரப்பி வருகின்றனர். ஆனால் அந்தக் கோயிலில் இருக்கும் அறிவியல், பொறியியல், கணிதவியல், மருத்துவவியல் குறித்த ஆச்சர்யங்கள் தான் அந்த ரகசியங்கள் என்றும் சிலர் அறிவியல் பூர்வமாக கூறுகின்றனர்.

சிவபெருமானிடம் இருந்து ஒவ்வொருவரும் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள்! நமது முன்னோர்கள் செய்த ஒவ்வொரு செயல்களும் ஏதோ ஒன்றை நமக்கு தெளிவாகக் கூறுவதாய் தான் உள்ளது.

### சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள அந்த வியப்பூட்டும் சில அற்புதமான ரகசியங்கள்

பூமத்திய ரேகையின் மையம் இந்த கோயில் அமைந்திருக்கும் இடமானது உலகின் பூமத்திய ரேகையின் சரியான மையப்பகுதியாகவும் உலகில் புவியீர்ப்பு மையத்தின் நடுமையமாகவும் உள்ளது என்று கூறப்படுகின்றது. (Centre Point of World Magnetic Equator)

ஒரே நேர்கோடு பஞ்சபூத கோயில்களில் ஆகாயத்தைக் குறிக்கும் தில்லை நடராஜர் ஆலயம், காற்றைக் குறிக்கும் காலஹஸ்தி ஆலயம், நிலத்தைக் குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேஸ்வர ஆலயமும் சரியாக ஒரே நேர்கோட்டில் அதாவது சரியாக 79 Degrees 41 Minutes East தீர்க்க ரேகையில் (LONGITUTE) அமைந்துள்ளது. இன்று கூகுள் மேப் (Google Map) உதவியுடன் நாம் வானத்தின் மேல் இருந்து பார்ப்பதைப் போன்று பார்த்தால் மட்டுமே விளங்கும் இந்த துல்லியம் அன்றைக்கு கணிக்கப்பட்டது. ஒரு பொறியியல், புவியியல் மற்றும் வானவியியலின் உச்சகட்ட அதிசயம். மனித உடலை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலில் 9 நுழைவு வாயில்களுக்கும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களை குறிக்கின்றது. சுவாசத்தை குறிக்கிறது. விமானத்தின் மேல் இருக்கும் பொற்கூரை 21,600 தங்கத் தகடுகளைக் கொண்டு வேயப்பட்டுள்ளது. இது மனிதன் ஒரு நாளைக்கு சராசரியாக 21600 தடவைகள் சுவாசிக்கிறான் என்பதை குறிக்கின்றது. (15*60*24=21600)

நாடிகள் இந்த 21,600 தகடுகளை வேய 72,000 தங்க ஆணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த 72,000 என்ற எண்ணிக்கை மனித உடலில் இருக்கும் ஒட்டுமொத்த நாடிகளைக் குறிக்கின்றது. இதில் கண்ணுக்கு தெரியாத உடலின் பாகங்களுக்கு சக்தியை கொண்டு சேர்ப்பவையும் அடங்கும். திருமூலர் மந்திரம் திருமூலரின் திருமந்திரத்தில் இதைப் பற்றிய தகவல்கள்...... "மானுடராக்கை வடிவு, சிவலிங்கம் மானுடராக்கை வடிவு, சிதம்பரம் மானுடராக்கை, சதாசிவம் மானுடராக்கை வடிவு, திருக்கூத்தே" என்று கூறுகிறார். அதாவது "மனிதன் வடிவில் சிவலிங்கம், அதுவே சிதம்பரம், அதுவே சதாசிவம், அதுவே அவரின் நடனம்" என்ற பொருளைக் குறிக்கின்றது.

"பொன்னம்பலம்" சற்று இடதுபுறமாக அமைக்கப்பட்டுள்ளது. இது நம் உடலில் இதயத்தை குறிப்பதாகும். ஆனந்த தாண்டவம் சிதம்பர நடராஜர்ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்த தாண்டவ நிலையினை, வெளிநாட்டு அறிஞர்கள் "Cosmic Dance" என்று அழைக்கின்றனர்.

இந்து மதத்தின் தத்துவத்தை உணர்ந்து அதைப் பாராட்டிய ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானியைப்பற்றி இங்கு தெரிந்து கொள்வோம். தன்னுடைய "சார்பு தத்துவக்" கோட்பாட்டிற்காக "நோபல் பரிசு" பெற்றவர் இயற்பியல் விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டின். பொதுவாக பெரும்பாலான விஞ்ஞானிகள் மனித வாழ்க்கையை விஞ்ஞான பூர்வமாக அணுகும் தன்மை கொண்டவர்களாக இருப்பதால், அவர்களின் பெரும் பாலானோர் இறை மறுப்புக்கொள்கை உடையவர்களாக இருப்பார்கள். ஆனால் எல்லாவற்றிலும் சற்று வித்தியாசமானவராக இருந்த ஆல்பர்ட் ஐஸ்டின். தான் ஒரு அறிவியல் விஞ்ஞானியாக இருந்து மிகப்பெரும் சாதனையைப் புரிந்தாலும் "மதம்,தத்துவம், இறைவன்" போன்ற விஷயங்களில் தனி ஆர்வமும், தேடலும் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பால் "யூத" மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் ஐன்ஸ்டின் "கீழை நாட்டு" மதங்களிலும், தத்துவங்களிலும் மிகுந்த ஈடுபாடு காட்டினார். அதிலும் இந்து மதம் சம்பந்தமான பல நூல்களை அவர் அடிக்கடி படித்து வந்தார். "பகவத் கீதை" நூலை மிகவும் விரும்பி படித்து அதில் கூறப்பட்டுள்ள தத்துவங்களின் உண்மையை உணர்ந்து சிலாகித்தார். அந்த வகையில் அவர் இந்து மதக் கடவுளான சிவபெருமானின் "நடராஜர்" உருவத்தின் மீது தனி ஆர்வம் கொண்டார். அந்த உருவத்தை குறித்து அவர் மேலும் ஆராய்ந்த போது மனிதன் கண்ணால் காண முடியாத, அதே நேரத்தில் உண்மையாக இருக்கும். "அணுவின் இயக்கத்தை" அந்த "நடராஜர் சிலையின்" வடிவில் உருவாக்கிய அக்கால இந்துக்களின் விஞ்ஞான அறிவைக் கண்டு வியந்தார். அதனால் ஒரு சிறிய அளவிலான நடராஜர் சிலையை எப்போதும் தனது படிக்கும் அறை மேஜையின் மீது வைத்திருந்தார். மேலும் "இந்த உலகம் ஆன்மீகத்திலும், விஞ்ஞானத்திலும் இந்தியாவிற்கு கடன் பட்டிருக்கிறது" என்று இந்தியாவின் புகழை பறை சாற்றினார்.

உலகின் இயங்க நிலை தத்துவமே நடராஜர் ஆகும். விஞ்ஞானி அப்துல்கலாம்.

ஒரு முறை சுவிஸ்லாந்தில் உள்ள அணு ஆராய்ச்சி மையத்தில் பிரச்சனை ஏற்பட்டபோது விஞ்ஞானி அப்துல்கலாம் அவர்கள் அங்கே நடராஜர் உருவச்சிலையை நிர்மாணிக்கச்சொன்னார். அதன் பின் அணு ஆராய்ச்சி மைய வாசலில் நடராஜ சிலை நிர்மாணிக்கப்பட்டது.

நன்றி
சாம சிறீ தேசமானிய
சிவாகமகிரியா பூஷணம்
சிவசிறீ சிறீஸ்கந்தராஜக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க...

ஜென்மம் நிறைந்தது
சென்றவர் வாழ்க

சிந்தை கலங்கிட
வந்தவர் வாழ்க

நீரில் மிதந்திடும்
கண்களும் காய்க

நிம்மதி நிம்மதி
இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில்
புதியது இல்லை

மரணத்தைப் போல் ஒரு
பழையதும் இல்லை

இரண்டுமில்லாவிடில்
இயற்கையும் இல்லை

இயற்கையின் ஆணைதான்
ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய
கண்களும் எங்கே?

பாய்ந்து துழாவிய
கைகளும் எங்கே?

தேசம் அளாவிய
கால்களும் எங்கே?

தீ உண்டதென்றது
சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது
காற்றுடன் போக

மண்ணில் பிறந்தது
மண்ணுடல் சேர்க

எலும்பு சதை கொண்ட
உருவங்கள் போக

எச்சங்களால் அந்த
இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே
நாளொன்று இல்லை

இறப்பு இல்லாமலும்
நாளொன்று இல்லை

நேசத்தினால் வரும்
நினைவுகள் தொல்லை

மறதியைப் போல்
ஒரு மாமருந்தில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் தொடு ஆறுகள்
கலங்குவதில்லை

தரை தொடும் தாரைகள்
அழுவதும் இல்லை

நதி மழை போன்றதே
விதியென்று கண்டும்

மதி கொண்ட மானுடர்
மயங்குவதேன்ன !

மரணத்தினால் சில
கோபங்கள் தீரும்

மரணத்தினால் சில
சாபங்கள் தீரும்

வேதம் சொல்லாததை
மரணங்கள் கூறும்

விதை ஒன்று வீழ்ந்திட
செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு
யாத்திரை வந்தோம்

யாத்திரை தீரும் முன்
நித்திரை கொண்டோம்

நித்திரை போவது
நியதி என்றாலும்

யாத்திரை என்பது
தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம்
தீண்டிடும் போதும்

சூரியக் கீற்றொளி
தோன்றிடும் போதும்

மழலையின் தேன்மொழி
செவியுறும் போதும்

மாண்டவர் எம்முடன்
வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள்
காற்றுடன் சேர்க !

தூயவர் கண்ணொளி
சூரியன் சேர்க !

பூதங்கள் ஐந்திலும்
பொன்னுடல் சேர்க!

போனவர் புண்ணியம்
எம்முடன் சேர்க !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் சங்கமம்

அம்பலவாணர் + தங்கமணி

↓

விக்கினராஜா
புண்ணியராஜா + லோஜினி
கனகரஞ்சினி + சபாரத்தினம்
மோகனராஜா + சுகிர்தா
நந்தினி + சுதாநந்தன்
லிங்கேஸ்வரன் + பவாயினி

❖நாகேந்திரம் + ❖செல்லம்மா

↓

உலகநாதன் + உமாதேவி
சண்முகநாதன் + சரஸ்வதி
நாகேஸ்வரி + பேரம்பலம்
வைத்தியநாதன் + நிர்மலாதேவி
மகேஸ்வரி + சிவஞானசுந்தரம்
கணேஸ்வரநாதன் + தியாகேஸ்வரி
கமலேஸ்வரி
ஸ்ரீரங்கநாதன் + சுகந்தினி

விக்கினராஜா + கமலேஸ்வரி ↓

பிரியங்கன்
❖சாரங்கன்
சங்கீர்த்தனன்
ஆதித்தன்
அபிரா

❖ அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஜோதி விக்கினராசா சாரங்கன் அவர்கள் 30.11.2019 (சனிக்கிழமை) இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து பல்வகையிலும் உதவி புரிந்து அனைத்து உள்ளங்களிற்கும் நன்றி.

30.11.2019 இலிருந்து 01.12.2019 வரை அன்னாரின் பூதவுடல் இல: 73/2, சிவநகர், உருத்திரபுரத்தில் வைக்கப்பட்டிருந்த போது தினமும் காலை, மாலை, இரவுகளில் தேவாரம் பாடி எமது செல்வத்தின் பூதவுடலை தெய்வீகச் சூழலில் வைத்திருந்த அனைத்து அன்புள்ளங்களுக்கம் மலர் வளையங்கள் வைத்து மரியாதை தெரிவித்தோர்.

துண்டுப் பிரசுரங்கள் மூலம் அனுதாபத்தை தெரிவித்த ஆசிரியர்கள், மாணவர்கள், விஞ்ஞானகக்கல்வி நிலையம், கரடிப்போக்கு, கிளிநொச்சி, யாழ் பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை (2013 க.பொ.த.சாதாரணதரம்) மாணவர்கள், கனடா, உதவும் கரங்கள் அமைப்பு, S.E.C 2020 மாணவர்கள், 2015 (A/L) கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவர்கள், 2016 (A/L) வணிகப்பிரிவு இந்துக்கல்லூரி மாணவர்கள் ஆகிய அனைவருக்கும், பதாகைகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த கமக்கார அமைப்பு, சிவநகர், கண்ணகை அரைக்கும் ஆலை, யாழ் பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், Sivanarul Products, 2014/O/L நண்பர்கள், உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் சனசமூக நிலையம் சுழாவடி உருத்திபுரம், தரம் 8 மாணவர்கள், 2012 (O/L) சிவநகர் அ.த.க பாடசாலை மாணவர்கள், விநாயகர் ஹாட்வெயார், முத்துராசா குடும்பம், கமநல சேவைகள் திணைக்களம், உருத்திரபுரம், கோகுலன் தீபா குடும்பம், வர்த்தக சங்கம், சுழாவடி, உருத்திரபுரம், 2017 க.பொ.த. சாதாரண மாணவர்கள், சிவநகர் அ.த.க. பாடசாலை, பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம், கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலை, சண்முகநாதன் குடும்பம், கந்தையா முருகேசு குடும்பம், பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலய நிர்வாகம், வவுனியா தேசியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் ஆகியோருக்கும் வைத்திய உதவிகளை புரிந்தவர்களிற்கும், ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்களுக்கும் கீரிமலை அந்தியேட்டி கிரியைகளில் பங்கெடுத்துக் கொண்ட உறவினர் நண்பர்களிற்கும் இன்றைய நிகழ்வில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் இம் மலரை அழகுற வடிவமைத்த வேழன் பதிப்பகத்தினருக்கும் அனைத்து வகையிலும் உதவி புரிந்த யாவருக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org